நமது செட்டிநாடு

மலர் 7 ✿ மணம் 03 ✿ ஸ்ரீ பிலவ ஆண்டு ✿ ஆடி ✿ ஜூலை 2021 ✿ ரூ.25
Namadhu Chettinad ✿ Volume 7 ✿ Issue 03 ✿ July 2021 ✿ Rs.25



School of Architecture
Chettinad Academy
of Research and Education
(Deemed to be University)

ADMISSIONS OPEN 2021-22

Bachelor of Architecture
(B.Arch - 5 years)

Become a Future - Ready **Architect** With Embodied Traditional Values

100% Scholarship for eligible candidates

KEY HIGHLIGHTS

- Expert guidance & lectures by eminent academicians and practicing architects
- Hands on experience on multiple facets of Architecture with expert guidance
- Educational tours involving in-depth study, analysis of historical sites /precincts
- Participation in various national and international forums to give deep and diverse exposure to students
- Conferences, seminars, workshops and exhibitions for students on various themes
- Extension projects that promote societal sensitivity and community welfare
- Semester abroad/summer schools at foreign universities
- Placement assistance for eligible students
- World - class residential & recreational facilities

Chettinad Health City Campus,
Rajiv Gandhi Salai, Kelambakkam,
Chengalpattu Dist. Tamil Nadu 603 103, India.
E arch@chettinadhealthcity.com **W** www.care.edu.in

For more details contact :
+91 89390 00012

நமது
செட்டிநாடு

மலர் 7 மணம் 3 ஜூலை 2021
ஸ்ரீ பிலவ ஆண்டு ஆடி மாதம்

ஆசிரியர்: ந.ஆவுடையப்பன்
ஆசிரியர் குழு:
புதுவயல் செல்லப்பன்
குழ.கதிரேசன்
ஆறாவயல் ஆர்எம்.சண்முகம்
முனைவர் எம்.எஸ்.ஸ்ரீலக்ஷ்மி
விசாலாட்சி சுப்பிரமணியம்
அலுவலக நிர்வாகம், சந்தா:
எஸ்.குழந்தைவேலு
தட்டச்சு: முரு.மலர்விழி
வடிவமைப்பு: செ.ஜீவானந்தகுமார்
விளம்பரம் தொடர்புக்கு - 99622 43750

இணைய இதழ் முகவரி: www.namadhuchettinad.com
செய்திகள், கட்டுரைகள், கதைகள், கவிதைகள் மற்றும் கடிதங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:

நமது செட்டிநாடு மாத இதழ்
ராணி சீதை அரங்கம், 3–வது தளம்,
603, அண்ணா சாலை, சென்னை - 600 006
தொலைபேசி: 044–42951888

கட்டுரைகளுக்கு படைப்பாளர்களே பொறுப்பு. விளம்பரங்கள் விளம்பரதாரரின் பொறுப்பில் வெளியாகின்றன.

உறுப்பினர் சந்தா கட்டணம்

ஓராண்டு	ரூ.300
இரண்டாண்டு	ரூ.500
ஐந்தாண்டு	ரூ.1250

(சந்தா செலுத்த, புதுப்பிக்க, விளம்பரம் செய்ய)

1) **கரு.மணிகண்டன்,** மக்கள் தொடர்பு அலுவலர்
காரைக்குடி 86818 28284
2) திருமதி **சி.கண்ணாத்தாள் சிந்தாமணி**
மதுரை : 94423 27087
3) திருமதி **கண. தேனம்மை**
மதுரை : 94875 75896
4) திரு.**கா.குமரப்பன்**
மதுரை : 99521 02305 / 91711 99222
5) திரு.**MR.பழம் நாச்சியப்பன்**
சென்னை : 97899 55526
6) திருமதி **அரு.வள்ளிக்கண்ணு**
திருச்சி : 75982 15797 / 99654 24996
7) திரு. **ஆர்எம்.அழகப்பன்**
கண்டரமாணிக்கம் : 98401 23931
8) திரு.**விஆர்.பாலமுருகன்**
கோவை : 97916 32421, 83000 51512
9) திருமதி **வி.வள்ளியம்மை**
கோவை : 88706 52054
10) திரு. **ஏடதண்டாயுதபாணி**
பெங்களூரு : 090368 62231

மின்னஞ்சல்
namadhuchettinad@gmail.com

நமது
செட்டிநாடு
ராணி சீதை அரங்கம், 3–வது தளம்,
603, அண்ணா சாலை, சென்னை 600 006.

வளம் சேர்க்கவே வாட்ஸ்அப் குழுக்கள்

நடைமுறையில் உள்ள நவீன தொழில்நுட்பத்தில் உலகமெங்கும் உள்ள மக்கள் ஒருவரோடு ஒருவர் மிக எளிதாக தொடர்பு கொள்வதற்கு பல வகையான செயலிகள் உள்ளன. அவற்றில் மிகவும் முக்கியமானவை டுவிட்டர், வாட்ஸ்அப், டெலிகிராம் உள்ளிட்ட செயலிகள் ஆகும்.

இவற்றின் மூலம் ஒரு கருத்தை அல்லது ஒருவருடைய எண்ணத்தை உடனடியாக ஒருவரிடமிருந்து இன்னொருவரிடமோ அல்லது ஒரு குழுவிடமோ சென்று சேர்க்க எளிதாக உள்ளது. இவைகள் மூலம் செய்திகளை, காணொளிகளை பரிமாறிக் கொள்கின்ற போது ஒரு ஆரோக்கியமான சூழலை அந்த குழுவில் உள்ள உறுப்பினர்கள் உணர்வதற்கு ஏதுவாக உள்ளது. நம்முடைய உறவினர்கள், நண்பர்கள் என பலர் சேர்ந்து வாட்ஸ்அப் குழுக்களை அமைத்து ஒருவருக்கொருவர் அறிமுகமாகி சிறந்த முறையில் செயல்படுவதை நாம் காண்கின்றோம்.

சில வாட்ஸ்அப் குழுக்கள் மூலம் நலத்திட்ட உதவிகள் கூட பகிர்கின்ற நடைமுறையும் நம்மிடம் உள்ளது. இவற்றையெல்லாம் மீறி ஒரு சிலர் வாட்ஸ்அப் குழுக்களில் புகுந்து சமுதாயத்தில் பெயர்பெற்ற நாம் மதிக்கின்ற புனிதமான கோவில்களின் நிர்வாகிகளை பற்றியும் நடைமுறைகளைப் பற்றியும் தவறான தகவல்களை அவதூறாக பரப்புகின்றனர் என பெரியவர் ஒருவர் தனது மன வருத்தத்தை நம்மிடம் பகிர்ந்து கொண்டார். அவதூறு பரப்புவதற்குப் பதில் அந்த குழு உறுப்பினர்கள் மூலம் பாதிக்கப்பட்டவருக்கு ஏதாவது உதவி செய்யலாமே என்ற கருத்தையும் அப்பெரியவர் தெரிவித்து ஆதங்கப் பட்டார். வாட்ஸ்அப் குழுக்களின் அமைப்பாளர்கள் தவறான செய்திகளை அல்லது உள்நோக்கத்தோடு அனுப்பு கின்ற செய்திகளை இனம் கண்டு அதனை அனுப்பு கின்றவர்களை உடனடியாக குழுக்களில் இருந்து விலக்கி வைக்க வேண்டும். அவதூறு பரப்புவது சட்டப்படி தண்டனைக்குரிய குற்றமாகும். அவதூறால் பாதிக்கப்படுகின்ற பிரமுகர்கள் எப்பொழுதும் சகித்துக் கொண்டிருப்பார்கள் எனக் கருத இயலாது. ஒரு கட்டத்தில் சைபர் கிரைமில் புகார் கொடுக்க முன்வந்துவிடலாம். வாட்ஸ்அப் குழுக்கள் நம்மை மேம்படுத்து வதற்காகவும், நம்மைச் சார்ந்து உள்ளவர்களுக்கு நன்மை செய்வதற்காகவும், நல்ல தகவல்களை அவர்களுக்கு கொடுப்பதற்காகவும், இருக்க வேண்டும். ஒருவருக்கொருவர் உதவி செய்து கொள்ளக் கூடிய எண்ணத்தை மேலோங்கச் செய்து வாழ்க்கைக்கு வளம் சேர்க்கும் வகையில் செயல்பட வேண்டும்.

வேண்டுகோள்

அன்பார்ந்த வாசகர்களே நமது செட்டிநாடு இதழ் மாதந்தோறும் 20ம் தேதி முதல் 25ஆம் தேதிக்குள் உங்கள் இல்லம் வந்து சேரும் வகையில் ரயில்வே தபால் சேவை மூலம் அனுப்பி வைக்கப்படுகிறது. ஒரு சிலர் தங்களுக்கு இதழ் கிடைக்கவில்லை என தொலைபேசி வாயிலாகத் தெரிவிக்கின்றனர். அவர்களுக்கு மீண்டும் ஒரு இதழ் அனுப்பி வைக்கப்படுகிறது. ஒவ்வொரு மாதமும் அந்த மாத இறுதிக்குள் இதழ் வந்து சேரவில்லை எனில் காலம் தாழ்த்தாது தெரிவித்தால் மீண்டும் ஒரு இதழ் அனுப்பி வைக்க இயலும். அதுபோல் சந்தா காலம் முடிந்த வாசகர்கள் காலம் தாழ்த்தாது சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். வாசகர்களின் வசதிக்காக சந்தா காலம் முடிந்தவர்களின் Ref.No மற்றும் பெயர் மட்டும் இந்த இதழில் பக்கம் 52–53ல் கொடுக்கப்பட்டுள்ளது.

தனி இதழ் ரூ25/– என்பதால் ஆகஸ்ட் மாதம் முதல் ஓராண்டு சந்தா ரூ.300/–ஆகவும்,

இரண்டாண்டு சந்தா ரூ.500/–ஆகவும்,

ஐந்தாண்டு சந்தா ரூ.1250/– ஆகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அதனால் இரண்டு அல்லது ஐந்து ஆண்டுக்கு சந்தா செலுத்தி முறையே ரூ.100/– அல்லது ரூ.250/– சலுகை பெற வேண்டுகிறோம்.

வரும் ஆகஸ்ட் இதழில் திரு.மா.இளங்கோ அவர்கள் இலக்கியம், கல்வெட்டு, ஆவணம் ஆதாரங்களின் அடிப்படையில் ஆய்வு செய்து எழுதும் 'நானிலம் போற்றும் நகரத்தார் வரலாறு' எனும் நம் இனத்தின் வரலாறு பற்றிய புதிய தொடர் இடம்பெறும். வாசகர்கள் நமது செட்டிநாடு இதழில் பதிப்பிக்க கட்டுரைகள், தங்கள் பகுதியில் நடைபெற்ற நிகழ்ச்சிகளின் குறிப்பு மற்றும் படத்துடன் அனுப்பலாம். பிரசுரிக்க ஏற்றவை இதழில் இடம் பெறும். உங்கள் கருத்துக்களை எங்களுக்கு எழுதுங்கள்.

– பதிப்பாளர்

உள்ளே...

மாத்தூர் கோயில் 06

ஆழ்வார்கள் ஓர் அறிமுகம் 08

திருமந்திரச் சுவை 10

துபாய் சொக்கலிங்கம் 12

அஞ்சல் தலையில் இடம்பெற்ற நகரத்தார்கள் 15

தொழில் தொடங்கலாம் வாங்க 16

திருமதி வள்ளி பழனியப்பன் பேட்டி..... 21

நகரத்தார் சிகரத்தார் 22

காலக்கண்ணாடி குமரன் இதழ் 25

கிழக்காசிய நாடுகளில் செட்டியார்களின் பங்கு 30

பர்மாவில் இருந்து இந்தியாவிற்கு கால்நடைப் பயணம் 35

மனம் பணம் மந்திரம் 38

வெற்றிக்கு உதவும் உத்திகள்! 40

சிக்ஸர் 42

எந்தக் கணவனும் கதாநாயகன் அல்லன்!.... 44

ஆரோக்கியம் தரும் அறுசுவை உணவு..... 46

வரலாறு சொல்லும் மடல்கள்..... 47

நானோ டெக்னாலஜி 50

சந்தா படிவம் 53

முன் அட்டையில்:
செட்டிநாடு குழும மேலாண் இயக்குநர்
திரு.**எம்.ஏ.எம்.ஆர்.முத்தையா (எ) அய்யப்பன்** அவர்கள்
ஆந்திரப் பிரதேச மாண்புமிகு முதல்வர்
திரு.**ஒய்.எஸ்.ஜெகன்மோகன் ரெட்டி** அவர்களை
பசுமைக் கூடை வழங்கி மரியாதை நிமித்தமாக சந்தித்த காட்சி.

Maganlal
As per State Govt Order
CHENNAI STORE IS OPEN
From 28th June 2021 | Timing: 10:00 AM to 7:00 PM
Please follow social distancing and always wear a face mask.
Note: Karaikudi Store remains closed until
further instructions is received from the ministry
WELCOME, WE'RE
OPEN
PLEASE, WEAR FACE MASK AND KEEP SAFE DISTANCE

சென்ற இதழ் தொடர்ச்சி...

நகரக் கோவில்கள் வரிசை 2

மாத்தூர் கோயில்

புதுவயல் செல்லப்பன்

சதுரக் கருவறையில் பெரியநாயகி அம்மன் இரு கரங்களுடன் பத்ம பீடத்தில் நின்ற கோலத்தில் காட்சி தருகிறாள். வலது கையில் நீலோற்பல மலர், இடது கையில் லோல முத்திரை, தலையில் கரண்ட மகுடம், காதுகளில் மகரக் குண்டலங்கள், கழுத்தில் மணிமாலையும், மங்கல அணியும், கைகளில் வளையல்கள், காலில் பாதரட்சை காணப்படுகின்றன.

முக மண்டபத்தின் முன்புறம் நடுவில் நான்கு திசை நோக்கி நான்கு சிம்மங்கள் அமர்ந்திருக்கின்றன. அவற்றின் தலைகள் மீது கல்பீடம் உள்ளது. அப்பீடத்தின் மேல் நந்தி அமர்ந்துள்ளார்.

இவ்வாறு நான்கு சிம்மங்கள் தாங்கும் நந்தியைத் தமிழகத்தில் வேறு எங்கும் காண்பதரிது எனத் தொல்லியல் அறிஞர் மா. சந்திரமூர்த்தி குறிப்பிடுகிறார்.

முக மண்டபத்தைக் கர்ணக்கால் தூண்கள் அலங்கரிக்கின்றன. மதளைகளில் கூரிய பற்களை உடைய மகர மீன்கள் செதுக்கப்பட்டுள்ளன.

“இம் மதளைகளின் இடைப்பகுதியில் இறக்கைகளுடன் கூடிய கந்தர்வப் பெண்களின் கைகளில் குழல் கொண்டு ஊதுவதும், நாட்டியப் பெண்கள் ஒயிலாக முத்திரை காட்டி நிற்பதும், இரு கைகளை விஸ்மய முத்திரையில் வியக்கும் கரமாகக் கொண்டு காத்து நிற்கும் வனிதையரின் உருவங்களும் நகரத்தாரால் அறிமுகப்படுத்தப்பட்ட கட்டடக் கலைப்பாணிக்கு மற்றொரு எடுத்துக் காட்டாகும்.” முக மண்டபத்தின் மேற்கூரையில் 12 இராசிகள் காணப்படுகின்றன.

மேற்சுற்றுப் பிரகாரத்தில் 80 தூண்கள் உள்ளன. கன்னி மூலையில் கணபதி, காசிவிஸ்வநாதர், விசாலாட்சி உள்ளனர். சனகாதி முனிவர்களுடன் தட்சிணாமூர்த்தி அமர்ந்த கோலத்தில் உள்ளார்.

“தட்சிணாமூர்த்தி மண்டபத்தைத் தாங்கும் சீறிப் பாயும் சிங்கங்களின் திறந்த வாயினுள் பெரிய கல் குண்டுகளைச் சிற்பி செதுக்கியுள்ள பாங்கு வியந்து போற்றத்தக்கது. சிங்கத்தின் திறந்த வாய் சுமார் 6 செ.மீ. அகலம் உடையது. ஆனால், சிங்கத்தின் வாயினுள் உள்ள சுழலும் கல் குண்டுகளோ 30 செ.மீ சுற்றளவுடையது. இத்தகைய பெரிய குண்டுகளைச் சிறிய வாயினுள் உள்ள கல்லைக் கொண்டே உளியால் உருட்டி, செதுக்கி மிக நேர்த்தியாக அமைத்துள்ள பாங்கு வியக்கத்தக்கது”.

இந்தியா விடுதலை பெற்றதை நினைவூட்டும் வகையில் மகாத்மா காந்தி, ஜவஹர்லால் நேரு

ஆகியோரின் உருவங்களும் உள்ளன.

சண்டேசுரர் கோயில் அடி முதல் கலசம் வரை வெள்ளைக்கல் திருப்பணியாகும் கலசத்துக்கு மேல் உள்ள விதானப் பகுதி கவிழ்ந்த குடை போலக் குடைந்து அதன் நடுவில் சிறு துளையிடப்பட்டுள்ளது. மழை பெய்யும் போது இத்துளையின் வழியே மழைநீர் வடிந்து கலசத்தையும் விதானத்தையும் சுத்தப்படுத்துகிறது.

நடராசர் சன்னிதியின் கூரை சதுர வடிவில் உள்ளது. விமானத் தளம், கர்ண கூடம் மற்றும் சாலை என மாறிமாறி அமைக்கப்பட்டுள்ளன. இடையிடையே சிறுசிறு சன்னல்கள் இருக்கின்றன.

திருச்சுற்று மாளிகையில் 70 தூண்கள் உள்ளன. இதன் மேற்குத் திசையில் வரதராஜப் பெருமாள் சன்னிதி உள்ளது. பெருமாளின் இரு புறங்களிலும் ஸ்ரீதேவி, பூதேவி நிற்கின்றனர்.

வடமேற்கே சுப்பிரமணியர் சன்னிதி உள்ளது. பன்னிரு கரங்களுடன் உள்ளார். பத்துக் கரங்களில் ஆயுதங்கள் உள்ளன. இரு கரங்கள் அபய, வரத முத்திரைகள் காட்டுகின்றன. மகாலெட்சுமி அமர்ந்த கோலத்தில் உள்ளார். இரு பக்கங்களிலும் இரு யானைகள் நீர் சொரியும் நிலையில் நின்று கொண்டிருக்கின்றன.

பள்ளியறைக்கு அருகில் பைரவர் சன்னிதி உள்ளது. நிர்வாணமாக நின்ற கோலத்தில் நான்கு கைகளுடன் காணப்படுகிறார். இரு பக்கங்களிலும் இரு நாய்கள் உள்ளன.

"இராஜகோபுரம்" கிழக்குப் பார்த்துள்ளது. "சிற்பங்கள் இல்லாமலேயே ஓங்கி உயர்ந்து நிற்கும் ஐந்து நிலை இராஜகோபுரத்தின் மாட்சியும், செங்கலைக் கொண்டே சிறப்பாகக் கட்டப்பட்டுள்ள கலையின் நுணுக்கமும், கோபுர நிலைகளை அடைய அமைக்கப்பட்டிருக்கும் ஒரே கல்லாலான கற்படிகளும், இதனைப் பிற கோபுரங்களிலிருந்து வேறுபடுத்திக் காட்டுகின்றன".

சுண்ணாம்பையும், செங்கல்லையும் பயன் படுத்தி இக்கோபுரம் கட்டப்பட்டுள்ளது. இதில் 7 கலசங்கள் உள்ளன.

கோபுர வாயிலில் உள்ள இருநிலைக் கால்களில் கொடிப் பெண்கள் காணப்படுகின்றனர். நிலைக் கால்களிலும் அவற்றின் மேற்பகுதியிலும் முனிவர்கள் காணப்படுகின்றனர்.

வடபுறம் கொங்கணச் சித்தர் உள்ளார். அவருடன் இராமகிருஷ்ண பரமஹம்சர், விவேகானந்தர் ஆகியோர் உள்ளனர்.

தெற்கே ரமண மகரிஷி காட்சி தருகிறார்.

இராஜகோபுரத்தின் முன்புறம் விழா மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது. 42 பெரிய தூண்களும், 28 சிறிய தூண்களும் அம்மண்டபத்தைத் தாங்கியுள்ளன.

தூண்களின் சதுரப் பட்டைகளில் தெய்வ உருவங்களும் அவற்றுக்குரிய வாகனங்களும் செதுக்கப்பட்டுள்ளன.

திருமதிலை ஒட்டி இம் மண்டபத்தின் இருபுறங்களிலும் பிள்ளையாருக்கும் சுப்பிரமணி யருக்கும் சன்னிதிகள் உள்ளன.

கோயிலின் தெற்கே 'கமலாலயம்' என்னும் திருக்குளம் உள்ளது. இது செம்பாறாங்கல்லால் கட்டப்பட்டுள்ளது.

திருக்குளத்தின் வடக்கே கலங்காத கண்ட விநாயகர் கோயில் உள்ளது. கருவறையில் நான்கு கரங்களுடன் பிள்ளையார் அமர்ந்த கோலத்தில் உள்ளார்.

இக்கோயிலில் ஐந்துவித விநாயகர் வடிவங்கள் உள்ளன. பஞ்சமுக விநாயகர் (ஹேரம்ப கணபதி) சிம்ம வாகனத்தில் உள்ளார். இரண்டு, நான்கு, ஆறு, எட்டு, பத்து, பதினான்னு கரங்களுடன் உள்ள விநாயகர் உருவங்கள் இக்கோயிலில் உள்ளன.

வல்லப கணபதி, உச்சிஷ்ட கணபதி உள்ளனர். இக்கோயிலிலும் நகரத்தார் சிற்பக் கலையை அடையாளம் காட்டும் அழகிய சிற்பங்கள் வடிக்கப்பட்டுள்ளன.

ஐந்நூற்றீஸ்வரர் கோயிலில் திருவாதிரைத் திருவிழா, திருக்கார்த்திகைத் திருவிழா, தைப் பொங்கல் விழா, மஹா சிவராத்திரி விழா ஆகிய விழாக்கள் நடைபெறுகின்றன.

இக்கோயிலில் மர வாகனங்களும், வெள்ளித் தகடு பொருத்தப்பட்ட ரிஷப வாகனமும் உள்ளன.

இக்கோயிலுக்கு அருகில் நகர விடுதி உள்ளது. மாத்தூர் கோயில் சார்ந்த நகரத்தார்கள் 55 ஊர்களில் வாழ்ந்து வருகின்றனர்.

அத்தன் ஐநூற்றீஸ்வரரும்
அன்னை பெரிய நாயகியும்
மெத்த மகிழ்வோ டிருந்தருளும்
மேன்மைப் பதிமாத் தூர்சென்றே
சித்தம் கசியத் தொழுதேமேல்
தீமை எதுவும் அணுகாமல்
பத்தோ டாறு பேறுகளும்
பயனாய் பெற்று வாழ்வோமே!

ஆழ்வார்கள் ஓர் அறிமுகம் 11

நம்மாழ்வார்

பள்ளத்தூர்
பழ.பழனியப்பன்

பாண்டிய நாட்டின் பெருமையைப் பறைசாற்றிக் கொண்டிருக்கும் ஆறு "சுழிக்கும் துறைநீர்த் துறைதோறும் முத்தம் கொழிக்கும் பொருநை என்னும் தாமிரபரணி ஆறு." இவ்வாற்றங்கரையின் ஒரு பகுதியாக விளங்குவது திருவழுதி நாடு. இதற்குத் தலைநகரமாக விளங்குவது திருக்குருகூர் என்னும் தலம்.

இப்போது ஆழ்வார்திருநகரி என வழங்கப் படுகிறது. இங்கே ஆண்டு வந்த மன்னர் ஒருவர் பெயர் பொற்காரியார் என்பது. அவருடைய மகன் காரியார். வேளாளர் குலத்தவர். அருகிலுள்ள ஊரில் திருவெண்பரிசாரக் குடும்பத்தைச் சார்ந்த திருவாழ்மார்பன் என்பவர் வசித்து வந்தார். அவருக்கு ஒரு மகள். அவர் பெயர் உடைய நங்கை. பொற்காரியார், காரியாருக்கும் உடைய நங்கைக்கும் மணம் செய்வித்தார். இல்லற வாழ்க்கை இனிதே கழிந்தது. எனினும் இவர்களுக்கு மகப்பேறு வாய்க்காமல் போனதால் இரு குடும்பத்தையும் வருத்தம் வாட்டியது.

ஒருமுறை திருக்குறுங்குடியில் எழுந்தருளியிருக்கும் ஆதிநாத நம்பியை இருவரும் மகப்பேறு வேண்டி அழுது தொழுதனர். இறைவன் அசரீரியாக தானே அவர்களுக்கு மகவாய்ப் பிறப்பதாக அருளாசி வழங்கினான். மகிழ்ந்த தம்பதியருக்கு அப்படியே ஒரு ஆண் மகவு பிறந்தது. வாராது வந்த மாமணிபோல் எல்லோரும் மகிழ்ந்து கொண்டாடினர். எனினும் இந்த மகிழ்ச்சி நீடிக்கவில்லை. காரணம் அக்குழந்தை செயலற்றுச் சடம்போல் கிடந்தது. உடலில் எந்த அசைவும் தோன்றவில்லை. பிறந்ததும் அழவில்லை; பால் பருகவில்லை. மூச்சு மட்டும் வந்தது. பன்னிரண்டாம் நாள் வரை பொறுத்துப் பார்த்தார்கள். இக்குழந்தைக்கு ஒரு பெயர் சூட்ட வேண்டுமே. உலக இயலுக்கு மாறுபட்ட குணங்கள் கொண்டிருந்ததால் 'மாறன்' என்று பெயர் சூட்டினார்கள். இதுவும் எம்பெருமான் ஆதிநாதன் என்ற 'பொலிந்து நின்றபிரான்' திருவிளை யாடல்தான் என்று கருதி அவன் சன்னிதிக்கே குழந்தையை எடுத்துக் கொண்டு போய் இறைவன்முன் கிடக்க வைத்தனர். இப்போது குழந்தையின் காது அசைந்தது; தோள்கள் அசைந்தன; கையசைந்தது; தாள் அசைந்தன; தாதும் அசைந்தது.அதற்கு அணிவிக்கப் பெற்றிருந்த பூவும், பூவோடு மாலையும் அசைந்தன. மொத்தத்தில் உடலில் ஒரு அசைவு தோன்றியது. அத்தோடு மட்டுமல்ல. அந்தத் திருக்கோவிலைச் சுற்றித் தவழ்ந்து வலம் வந்து அங்குள்ள ஒரு புளிய மரத்தடியில் தெற்கு நோக்கிப் பத்மாசனம் இட்டு முத்திரைக் கையுடன் அமர்ந்து கொண்டது. குழந்தைக்கு அசைவு வந்ததும், தத்தித் தவழ்ந்ததும் கண்ட அனைவரும் இறைவனுக்கு நன்றி சொல்லி வாழ்த்தி வணங்கினர். பெற்ற தாய் அக்குழந்தையை அள்ளி எடுத்து அணைத்து முத்தம் கொடுக்கத் தூக்க முயன்றார். பிள்ளையைத் தூக்க முடியவில்லை. மலைபோல் கனத்தது. எல்லோரும் முயன்றும் தோற்றுப் போயினர். அங்கேயே அந்தக் குழந்தை அப்படியே வெயிலிலும் மழையிலும் கிடந்து பதினாறு ஆண்டுகள் காலம் கழிந்தது. உடல் அசைவற்றுக் கிடந்ததே தவிர, உடல் வளர்ச்சி இயல்பாய் அமைந்ததும் அது ஒளிமிக்கதாக விளங்கியதும் எல்லோருக்கும் வியப்பை விளைவித்தது. இந்நிலையில் திருக்கோளூரில் பிறந்த அந்தணரான மதுரகவி ஆழ்வார் என்ற மற்றொரு ஆழ்வார், தன் வடதிசைப் பயணத்தை முடித்துக் கொண்டு தென்திசை நோக்கிப் பயணப்படலானார். அப்பொழுது அவரை ஒரு பேரொளி நடத்திச் சென்றது. பேரொளி வந்த

காரைக்குடி அரசு தலைமை மருத்துவமனைக்கு சோலார் வில்லேஜ் பவுண்டேஷன் சார்பில் ரூ. 30 லட்சத்தில் ஏற்படுத்திக் கொடுத்த ஆக்சிசன் உற்பத்தி நிலையத்தை மாவட்ட ஆட்சியர் திரு. மதுசூதன ரெட்டி அவர்கள் தலைமையில் தமிழ்நாடு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் திரு.கே ஆர் பெரியகருப்பன் அவர்கள் தொடங்கி வைத்தார். விழாவிற்கு நீதியரசர் டாக்டர் மெ. சொக்கலிங்கம் அவர்களும் காரைக்குடி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு.எஸ். மாங்குடி அவர்களும் முன்னிலை வகித்தனர். முன்னதாக விழாவிற்கு வருகை புரிந்தவர்களை சோலார் வில்லேஜ் பவுண்டேஷன் நிறுவனர் கண்டர மாணிக்கம் டாக்டர் பெ.நா. நாச்சியப்பன் அவர்கள் வரவேற்றார்.

திசை நோக்கியே பயணப்பட்டு முடிவில் அந்தப் பேரொளி திருக்குருகூர் வந்ததும் மறைந்து போனது. எனவே அந்தப் பேரொளி இவ்வூரிலிருந்துதான் வந்திருக்க வேண்டும் என்று கருதிய ஆழ்வார், அவ்வூர் மக்களிடம் இவ்வூரில் பெருமைப்படத்தக்க விசேஷம் ஏதேனும் உண்டா? என்று வினவ, அவர்கள் இவ்வூர்க் கோயிலில் உள்ள புளியமரத்தடியில் ஒரு குழந்தை யோக நிலையில் பதினாறு ஆண்டுகளாக இருந்து வருகிறது. அதுதான் இந்த ஊரின் விசேஷம் என்று கூற, வியப்படைந்த மதுரகவியாழ்வார் திருக்கோயில் புளியமரத்தடி சென்று மாறன் என்னும் அந்தக் குழந்தைக்கு செவிப்புலனும், கட்புலனும் ஒழுங்காக இருக்கிறதா என்பதை அறிந்துகொள்வதற்காக ஒரு சிறு கல்லை எடுத்து அவர் அருகில் போட்டார். அதைக் கேட்ட அந்த மாறன் கண்விழித்துப் பார்த்ததும் மதுரகவிகள் மிக்க மகிழ்வும் வியப்பும் கொண்டு பேச்சாற்றல் உண்டா என்பதை மேலும் அறிந்துகொள்ளும் பொருட்டு 'செத்ததின் வயிற்றில் சிறியது பிறந்தால், எத்தைத் தின்று எங்கே கிடக்கும்?' என்ற கேள்வியைக் கேட்டார். சற்றும் தாமதிக்காது, மாறனார் 'அத்தைத் தின்று அங்கே கிடக்கும்' என்று ஆணி அறைந்தாற்போல் கனீரென்ற குரலில் விடை இறுத்தார்.

இந்தக் கேள்விக்கு 'உடலைச் சார்ந்துள்ள அணு அளவு கொண்ட உயிர் எதை அனுபவித்துக் கொண்டு, எங்கே இருக்கும்?' என்பது பொருள். அதற்கு மாறனார் அளித்த பதில் 'அந்த உடலைச் சார்ந்த இன்ப துன்பங்களை அடைந்து, அந்த உடலிலேயே தங்கியிருக்கும்' என்பது பொருள். அநித்யமான உடலில் ஜீவன் தோய்ந்தால் அது அனுபவிப்பது எது? வாழ்வது எங்கே? என்பது கேள்வி. ஐம்புலன்களால் அநித்யமான சரீரத்தைப் பற்றி வரும் சுகதுக்கங்களையே அனுபவித்து, சரீரத்திலேயே உழலும்' என்பது விடை.

இத்தொடரில் 'செத்தது' என்பது உடலைக் குறிக்கிறது. 'சிறியது' என்பது உயிரைக் குறிக்கும். உடம்பை அடைந்த உயிர் எதனை நுகர்ந்து கொண்டு எங்கே இருக்கும்? என்பது கேள்வி. உடம்புக்குள் உயிர் தோன்றினால் உயிரானது தன்வினைப்பயன் முடியும் வரை அவ்வுடம்பிலேயே இருக்கும் என்பது விடை. உடம்பை அடைந்த உயிர், தன் வினைப் பயனை அனுபவித்துக் கொண்டு அவ்வுடம்பிலேயே இயங்கும். உயிர் அவ்வப்பிறப்பிற்குரிய வினை முடியும்வரை அவ்வுடம்பிலேயே இருக்கும்.

மிக சூட்சுமமான கேள்விக்கு மிக நுட்பமான பதிலைக் கேட்டறிந்த ஆழ்வார், மாறனாரையே தன் குருவாக ஏற்றுக் கொண்டு, அவரை வணங்கி மகிழ்ந்தார். அவருக்கே அடியவரும் ஆனார். செய்தி ஊரெங்கும் பரவியது. பெற்றோரும் மற்றோரும் மதுரகவியாரின் திறமையைப் புகழ்ந்தும், தங்கள் மாறனார் அறிவிற் சிறந்தவராக விளங்குவது கண்டும் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர். பொன்னும் பொருளும் மதுரகவியாருக்கு வழங்கிய போதும் அதை ஏற்க மறுத்து விட்டார் மதுரகவியாழ்வார். அன்றுமுதல் மாறனார் சில பிரபந்தங்களைச் சொல்ல அவற்றை பட்டோலை (எழுதிக்) கொண்டார் மதுரகவியாழ்வார். நம்மாழ்வாருக்குத் திருக்கோயில் அமைத்து வழிபாடு செய்தவர் மதுரகவியாழ்வார்.

(தொடரும்)

திருமந்திரச் சுவை

பூங்குன்றம் இராமசாமி

திருச்சிற்றம்பலம்

தவறு செய்யாதே

தவறு செய்பவர்கள் சாட்சி வைத்துக் கொண்டா தவறு செய்கிறார்கள்? இல்லையே! ஆனாலும், மாட்டிக் கொள்கிறார்களே!

“தவறு செய்பவர் தன்னை அறியாமல் தடயம் ஒன்றை விட்டுச் செல்வார்” என்கிறார் காவல்துறை உயர் அதிகாரி ஒருவர்.

அதுவும் இல்லாது ஒரு சாமர்த்தியசாலி தவறு செய்து விடுகிறார். அவர் மாட்டிக் கொள்வதில்லை. ஆயினும், எங்கும் நிறைந்துள்ள இறைவன் அவரைக் கண்காணிக்கிறான். தக்க நேரம் பார்த்து அதன் பலனைக் காட்டிவிடுவான் அவன்.

இதைத்தான்,

கண்காணி இல்லென்று கள்ளம் பல செய்வார்
கண்காணி இல்லா இடமில்லை காணுங்கால்
கண்காணியாகக் கலந்தெங்கும் நின்றானைக்
கண்காணி கண்டார் களவு ஒழிந்தாரே *(10.2067)*

என்கிறார் திருமூலர்.

‘நம்மை யாரும் கண்காணிக்கவில்லை என்று கள்ளத்தனம் செய்யாதே! எங்கும் நிறைந்திருந்து இறைவன் நம்மைக் கண்காணிக்கின்றான்’. இந்த உண்மையை அறிந்தோர் கள்ளத்தனம் செய்ய மாட்டார்’ என்கிறார்.

இன்று சிசிடிவி ஒளிப்பதிவின் வழி நம்மை அறியாமலேயே நாம் கண்காணிக்கப்படுகிறோமே? இறைவன் விட்டுவிடுவானா என்ன?

மடைமாற்றம்

சுற்றுலாச் செல்கின்றனர். அங்குள்ள காட்சி கண்ணுக்கு விருந்தாகிறது. அங்குள்ள குளிர் உடலுக்கு இதமாகிறது. அங்குள்ள நண்பர்களின் அளவளாவல் செவிக்கு இன்பந் தருகிறது. அங்குள்ள உணவகம் நாவிற்குச் சுவையைக் கூட்டுகிறது. இவற்றில் எதையும் அடக்க இயலுமா..? அது முடிகிற காரியமா..? மீறி, அடக்கி ஒடுக்கி விட்டால் அவர் தறிகெட்ட மாடு போலத் தவித்துத் திசைமாறி விடுவாரே..!

திருமூலர் என்ன சொல்கிறார்?

“ஐம்பொறிகளை அடக்காதீர்கள். அவை தரும் இன்பங்களை மடைமாற்றுங்கள்” என்கிறார் அவர். நம்மிடம் மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐந்து பொறிகள் உள்ளன. அவை சுவை, ஒளி (காட்சி), ஊறு (உணர்வு), ஓசை (ஒலி), நாற்றம் (மணம்) என்னும் ஐம்புலன்கள் வழி இன்பங்களைத் தருகின்றன.

வேகமாய் ஓடிவரும் தண்ணீரை மடைமாற்று கிறோமே..? காட்டுக்குள் ஓடும் நீர் வயலுள் வழிமாறிப் பாய்கிறதே..? அதுபோல, நம் புலன்களை இறைபக்கம் திருப்புங்கள். வடிகால் அதுவாகட்டும்.

இயற்கை அழகைப் பார்த்து நாம் என்ன செய்யப் போகிறோம்..?

மாறாக, ‘இறை அழகை, அலங்காரத்தைக் கண்குளிரக் காணுங்கள்... அவன் பெயரை, புகழை வாயாரக் கூறுங்கள்... அவற்றைக் கேட்டு இன்புறுங்கள்... அவன் திருநீற்றின் மணத்தை, மலர் வாசத்தை முகர்ந்து மகிழுங்கள்... அவன் அருளை நினைந்து மெய்சிலிருங்கள்...’ இவ்வாறு, உங்கள் ஐம்புலன் இன்பங்களை மடைமாற்றுங்கள்.

இதோ அந்தத் திருப்பாடல்கள்.

அஞ்சும் அடக்கு அடக்கு என்பர் அறிவிலார்
அஞ்சும் அடக்கும் அமரரும் அங்கிலை
அஞ்சும் அடக்கில் அசேதனமாம் என்றிட்டு
அஞ்சும் அடக்கா அறிவு அறிந்தேனே (10.2033)

புலன்கள் ஐந்தையும் ‘அடக்கு அடக்கு’ என்பர் அறிவிலார். அவ்வாறு ஐந்தையும் அடக்கிய தேவரும் இலர். ஐந்தையும் அடக்கினால் ஆன்மாவும் சடமாகிவிடும். இவ் ஐந்தையும் அடக்காது நல்வழியில் அவற்றைச் செலுத்தும் அறிவை அறிந்தேன் யான்.

இன்னொரு பாடல்,

அஞ்சுள ஆனை அடவியுள் வாழ்வன
அஞ்சுக்கும் அஞ்செழுத்து அங்குசம் ஆவன
அஞ்சையும் கூடத் தடுக்க வல்லார்கட்கே
அஞ்சாதி ஆதி அகம் புகலாமே. (10.977)

உடம்பாகிய காட்டில் ஐந்து யானைகள் வாழ்கின்றன. அவ் ஐந்தினுக்கும் அஞ்செழுத்தே அங்குசம் ஆகும். அவ் அஞ்சையும் ஒருசேரத் தடுக்க (மடைமாற்ற) வல்லாரே அவற்றின் முதலாகிய சிவத்துள் புகுவார். (அடவி: காடு, உடம்பு.) ■

School of Physiotherapy
Chettinad Academy
of Research and Education
(Deemed to be University)

ADMISSIONS
OPEN 2021 - 22

SKILLED CLINICAL TRAINING FOR **THE LEADERS** OF TOMORROW

100% Scholarship for eligible candidates

PROGRAMME OFFERED

BPT (4 years + 6 months internship)

MPT (Sports I Orthopedics - 2 years)

KEY HIGHLIGHTS

- Practical and project based learning
- Mentor -Mentee support
- Personality Enhancement Programs
- Counselling and Career Guidance
- Out reach activities for real time experience
- Inter disciplinary certificate courses and training
- Hands on training
- Value added courses offered
- Translational research facilities
- Wide range of digital database
- Mandatory Library Hours under faculty supervision
- World Class Residential and Recreational Facilities
- Well stocked library with latest editions of books
- Inter library loan facility

Chettinad Health City Campus,
Rajiv Gandhi Salai, (OMR, Chennai),
Kelambakkam - 603 103, Chengalpattu Dist.,
Tamil Nadu, India.
E physiotherapy@chettinadhealthcity.com
W www.care.edu.in

FOR ADMISSION CALL
+91 98416 67912

தனி மனிதராய் ஒரு தர்மதுரை

துபாய் சொக்கலிங்கம்

பிரேமா நாராயணன் நேர்காணல் தொடர்ச்சி...

“உங்கள் சொந்த ஊருக்கும் நீங்கள் பலவிதமான நற்பணிகள் செய்துள்ள தாகக் கேள்விப்பட்டேன்..!”

“ஆமாம். நமது சொந்த ஊருக்குச் செய்ய வேண்டியது நம் கடமை யில்லையா? எங்கள் ஊருக்கு என்னால் முடிந்ததைச் செய்து கொண்டிருக் கிறேன். தனிநபருக்குச் செய்வதை விட, ஏதேனும் அமைப்புகளுடன் இணைந்து, சமூகத்துக்கு நன்மை தரக்கூடிய உதவிகளை மட்டும் செய்கிறேன். தேவ கோட்டையில் இரவுசேரி என்னுமிடத்தில் இருக்கும் பழைய சிவன் கோயிலில் புனரமைப்புப் பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன. விரைவில் கும்பா பிஷேகம் நடைபெற விருக்கிறது.

எங்கள் ஊரைச் சேர்ந்த 40 முதியவர் களுக்கு மாதம் ரூ.750/-க்கு மருந்து, மாத்திரைகள் வாங்கிக் கொடுக்க எனது தாயார் பெயரில் இயங்கி வரும் அறக் கட்டளை மூலமாக உதவி வருகிறோம். இப் பணியை மிக நல்ல முறையில் செய்து வருவதற்கு ‘தேவகோட்டை வாட்ஸ்ஆப் குரூப்’ என்ற அமைப்பினர் உதவி வருகின்றனர். எனது தாயார் பெயரிலான அறக்கட்டளை மூலமாக 22 பேர்களைக் கொண்ட முதியோர் இல்லமும் நடத்தி வருகிறோம். தேவகோட்டையில் உள்ள புனித மேரி பள்ளி, பெத்தாள் ஆச்சி பள்ளி போன்ற பள்ளிகளின் கட்டடப் பணிகளுக்கு நன்கொடை அளித்திருக்கிறேன். தேவகோட்டை நகர விடுதிக்கு நன்கொடை அளித்து, அப்பணியில் பங்கு வகிப்பதற்கான வாய்ப்பைப் பெற்றிருக்கிறேன். ராமேஸ்வரம், சிதம்பரம் போன்ற நகரங்களில் நகர விடுதி கட்டும்போது, என்னுடைய பங்களிப்பாக குறிப்பிட்ட தொகை வழங்கி அந்த முயற்சிகளில் பங்கேற்றுள்ளேன்.

தேவகோட்டையில் நடைபெறும் கந்தசஷ்டி விழாவில், ஒரு நாள் நிகழ்ச்சிகளை நாங்கள் ‘ஸ்பான்ஸர்’ செய்கிறோம்.

மாத்தூர் கோயிலில் நடைபெற்ற சில கட்டடப் பணிகளுக்கும், சுற்றுச்சுவர் கட்டுவதற்கும் என்னால் முடிந்ததைக் கொடுத்தேன். மாத்தூர் கும்பாபிஷேகத்தின் போது, யாக சாலைக்கு ஆகும் செலவுகளில் ஒரு பகுதியை ஏற்றுக் கொண்டேன். மார்கழி மாதத்தில் மாத்தூரில் தினசரி நடைபெறும் அன்னதானத்துக்கு வழங்கி வருகிறேன். மாத்தூர் கோயிலைச் சேர்ந்த நகரத்தார்களிடம் நன்கொடை வசூலித்து, ஒரு கோடி ரூபாய் சேர்ந்ததும், அதை ‘கார்பஸ் ஃபண்ட்’ ஆக வைத்து, அதிலிருந்து வரும் நிதி மூலமாக ஆண்டுதோறும் நடைபெறும் மாத்தூர் தேர் திருவிழா சமயத்தில், திருவிழாவுக்கு வரும் அனைவருக்கும் உணவு வழங்க ஏற்பாடு செய்துள்ள அந்த முயற்சியில் நானும் ஒருவனாகப் பங்கேற்கும் வாய்ப்பினைப் பெற்றுள்ளேன்.

கொரோனா காலத்தில் மாத்தூர் மற்றும் இரவுசேரி கோயில் சிப்பந்திகள் அனைவருக்கும் மளிகை சாமான்கள், தலா ரூ.1,000/- செலவில் கொடுத்தோம்.

எங்கள் ஊர் நகரச் சிவன் கோயிலில் உள்ள அம்மன் கோயிலுக்கு ஓடுகள் மாற்றித் தரும் பணியினைச் செய்து கொடுத்தோம். இப்போது திண்டுக்கல்லுக்கு அருகிலுள்ள ரெட்டியார் சத்திரத்தில் எங்களுக்குச் சொந்தமான நிலத்தில்,

தியான மண்டபம் கட்டுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறேன். சிவனை மையமாக வைத்துக் கட்டப்படும் ஒரு மண்டபமாக இது அமையும்.

தாராபுரத்தில் ஒரு பள்ளி நடத்தி வருகிறோம். என் மகனும் மருமகளும் அதை நிர்வகிக்கின்றனர். ரெட்டியார் சத்திரத்தில் எங்களுக்குத் தொழில் இருப்பதால் அந்த ஊர் மக்களுக்கும் அவ்வப் போது முடிந்ததைச் செய்து வருகிறேன். சென்ற ஆண்டு ஊரடங்கின்போது, அவ்வூரின் பஞ்சாயத்து தலைவர் கேட்டுக் கொண்டதால், ஊர் மக்கள் அனைவருக்கும் ஒன்றரை மாதங்களுக்கு தினசரி இரண்டு வேளை உணவுப் பொட்டலம் கொடுத்து வந்தோம். தற்போது துபாயில் இருக்கும் நாங்கள் 15 பேர் ஒன்று சேர்ந்து, கோவிட் 19 தொற்றால் பாதிக்கப்பட்டு, வேலையை இழந்தோ அல்லது மருத்துவமனையில் சிகிச்சை பெற்றோ சிரமப்படும் நகரத்தார்களுக்கு பண உதவி, உணவு, மெடிக்கல் கிட் போன்ற உதவிகளைச் செய்யத் தொடங்கியிருக்கிறோம். முதல்கட்டமாக புதுக்கோட்டை, தேவகோட்டை, காரைக்குடி மற்றும் சண்முகநாதபுரம் ஆகிய ஊர்களில் வசிக்கும் நகரத்தார்களுக்கு வழங்கி வருகிறோம்'' என்று சொக்கலிங்கம் சொல்லிக் கொண்டே போக, பிரமிப்பில் ஆழ்ந்து போனேன் நான்.

ஒரு தனி மனிதரால் இத்தனை நற்பணிகள் செய்ய முடியுமா என்ற வியப்பில் எனக்குப் பேச்சே எழவில்லை.

''வருமானத்தில் ஒரு பகுதியை நம் சமூகத்தின் மேம்பாட்டுக்கு வழங்க வேண்டும் என்ற எண்ணம் வந்தது எப்படி? இதற்கான தாக்கம் எங்கிருந்து வந்தது?''

''நகரத்தார் என்ற சொல்லும் எண்ணமும் தான் எனக்கு இன்ஸ்பிரேஷன். நம் முன்னோரிட மிருந்துதான் இந்தத் தாக்கம் வந்தது. நம்முடைய முன்னோர்களில் பலர், தனி மனிதராக தமிழுக்கும் இலக்கியத்துக்கும் ஆன்மிகத்துக்கும், தொழிலுக்கும் எண்ணிலடங்கா தொண்டுகளை ஆற்றியுள்ளனர். தங்கள் வருமானத்தில் ஒரு பகுதியை சொந்த ஊருக்கென செலவழித்திருக்கிறார்கள்.

பல்லாயிரக்கணக்கானவர்களுக்கு வேலை தரும் டி.ஐ. சைக்கிள்ஸ், கார்போரண்டம், செட்டிநாடு குழுமம், ஏஎம்எம் குழுமம் போன்ற பெருந்தொழில்கள், அழகப்பா, அண்ணாமலை என்ற இரு பெரும் பல்கலைக்கழகங்கள், இந்தியன் வங்கி, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி என்ற இரு பெரும் வங்கிகள், பெரிய பெரிய கோயில்களின் நிர்வாகம், ஊருக்கு நீர் தரும் ஊருணிகள் என எவ்வளவு பொதுத் தொண்டுகளை எத்தனை அனாயசமாகச் செய்திருக்கிறார்கள்! இந்த வரலாறே நமக்கு பெரிய இன்ஸ்பிரேஷன் தானே!''

''நம் சமூகத்தின் இளைய தலைமுறைக்கு நீங்கள் சொல்ல விரும்பும் செய்தி என்ன?'' என்ற என் கேள்விக்கு அவர் கூறிய பதில் ஆழமானது; ஆணித்தரமானது; அக்கறை மிகுந்தது.

''என்னைப் பொறுத்தவரை, தனிமனித உயர்வை விட சமூக உயர்வு முக்கியம். சமூக உயர்வு இல்லாத போது, தனி மனித உயர்வுக்கு அர்த்தமில்லாமல் போய்விடும். அதை நம் இளைஞர்கள் புரிந்து கொள்ள வேண்டும். நம்முடன் சேர்ந்து சமூகமும் வாழ வேண்டும். உதாரணத்துக்கு ஓர் ஊரில் விளக்கு இல்லையென்றால் நாம் போய் அங்கே வாழ முடியாது. சமூக வளார்ச்சிக்காக ஏதேனும் ஒரு வகையில் நம் பங்களிப்பு இருக்க வேண்டும்.

இந்தத் தலைமுறைக்குச் சொல்ல வேண்டிய இன்னொரு முக்கியமான விஷயம். எல்லா விஷயங்களையும் அதன் விழுமியங்களை (virtues) வைத்து மதிப்பிட வேண்டுமே தவிர, பணத்தை வைத்தே எடை போடக்கூடாது. இதை ஏன் சொல்கிறேன் என்றால், இந்தக் காலத்தில் மனிதர்களை மதிப்பீடு செய்யும் முறையே மாறி விட்டது. 'நல்ல பையன்' என்பதை அவர் வாங்கும் சம்பளத்தை வைத்து மதிப்பிடுகின்றனர்.

நகரத்தார்களாகிய நமது இயல்பு அதுவல்லவே! நமக்கென்று ஓர் அடையாளம் உள்ளது. நம் அடையாளத்தைத் தொலைக்காமல் இயற்கையுடன் நாம் போக வேண்டும். நுகர்வுக் கலாசாரத்தில் ஊறிப் போய், நமது கலாசார அடையாளங்களை இழக்கக் கூடாது. நகரத்தார்களுக்கென்றே எவ்வளவோ அற்புதமான விஷயங்கள் உள்ளன. கோயில்கள், தொழிற்சாலைகள், கல்விச் சாலைகள், பதிப்பகங்கள், அரண்மனை போன்ற வீடுகள், கலைப்பொருட்கள், பலகாரங்கள், சமையல்... என்று எத்தனையோ பெரிய பெரிய துறைகளில் நம்மவர்கள் முத்திரை பதித்துள்ளனர். ஏன்... ஒரு காலத்தில் விவசாயமே செய்திருக்கிறோம். ஆனால் இன்றோ சின்னச் சின்ன விஷயங்களில் வேறுபாடுகளைக் கொண்டு வந்து, தொலைந்து

போய்க் கொண்டிருக்கிறோம். 'ஒன்றுகூடித் தேர் இழுக்கும் திறன்' என்ற நமக்கான அடையாளத் திலிருந்து விலகி வருகிறோமோ என்ற ஐயப்பாடு மனதில் அடிக்கடி எழுகிறது.

ஒரு நகரவிடுதிக்குச் சென்றால், 'இந்த இடத்துக்கு என்னால் என்ன செய்ய முடியும்?' என்று யோசியுங்கள். அதை விடுத்து, 'இங்கே எனக்கு என்ன உரிமை?' என்று கேட்காதீர்கள். நம்முடைய முன்னோர் உருவாக்கி வைத்திருக்கும் ஒவ்வோர் இடத்திலும், நமது கடமை என்ன என்று பாருங்கள். நமக்கு சிறப்புமிக்க வரலாறு இருக்கிறது; அதே போல இப்போதுள்ள இளைய சமுதாயமும் நன்கு படித்து, பொருளீட்டும் நல்லதொரு நிலைமையில் இருக்கிறது. இரண்டையும் வைத்து நம் சமூகத்துக்கு இன்னும் மேம்பட்ட நிலைமையை உருவாக்க வேண்டும்.

துபாயில் இதை நாங்கள் முடிந்த வரை செய்கிறோம். இளைஞர்களை நிறைய ஊக்கப் படுத்துகிறோம். அதனால்தான் குழந்தைப் பருவத் திலேயே இதிகாசக் கதைகள், திருப்புகழ் போன்றவற்றைக் கற்றுக் கொடுக்கிறோம். அடிக்கடி 'கெட் டு கெதர்' வைத்து, குழந்தைகளுக்கு நம் 'வால்யூ சிஸ்டம்' அனைத்தையும் சொல்லிக் கொடுக்கிறோம்.

சொக்கலிங்கத்தின் மனைவி நீலா ஆச்சி, இல்லத்தரசி. அவரும் தேவகோட்டையில் பிறந்தவர்தான். இத் தம்பதிக்கு ஒரு மகன், ஒரு மகள். இருவருக்கும் திருமணமாகி விட்டது. மகன் அண்ணாமலை, பெங்களூரில் சொந்தமாக ஐ.டி.கன்சல்டன்ஸி நிறுவனம் நடத்துகிறார். மருமகள் ரேவதி, தாராபுரத்திலுள்ள பள்ளி நிர்வாகத்தை கவனிப்பதுடன் கணவரின் தொழிலிலும் உதவுகிறார். சொக்கலிங்கத்தின் மகள் மீனாட்சி இல்லத்தரசி. மாப்பிள்ளை சண்முகம் துபாயில் வங்கி பணியில் உள்ளார்.

'உதவி' என்னும் பெயரில் தனி மனித சக்திதனை நலிவாக்காமல் உருப்படியான சமூகப் பணிகள் மூலமாக நல்லதொரு சமுதாயத்தை உருவாக்குங்கள் என்பதுதான் என் செய்தி'' அழுத்தமாகக் கூறி முடித்தார் சொக்கலிங்கம்.

'நம் சமூகத்துக்கு நாம் என்ன செய்திருக் கிறோம்?' என்ற கேள்வி எனக்குள் வலுவாக எழத் தொடங்கியது. இதுவே நல்ல தொடக்கம்தான் என்ற திருப்தியுடன் விடைபெற்றேன். ■

அரும்பணியாற்றி அஞ்சல் தலையில் இடம்பெற்ற நகரத்தார்கள்

டாக்டர் ராம.அழகப்ப செட்டியார்

4

அரு. அருணாசலம் தேவகோட்டை

நமது Dr.RM. அழகப்ப செட்டியாரவர்கள் கோட்டையூரில் ஏப்ரல் 9, 1909–இல் பிறந்தார்கள்.

தமது ஆரம்ப கால கல்வியை காரைக்குடியிலும், பின்னர் சென்னை மாநிலக் கல்லூரியிலும், தனது 21–வது வயதில் முதுநிலைக் கல்வியை முடித்தார். சட்டக் கல்வியை லண்டன் மாநகரில் பயின்று, பின்னர் மலேயா, பர்மா மற்றும் இந்தியாவில் பல தொழில் கூடங்களை நிறுவி நல்ல முறையில் நடத்தி வந்த போது தனது கவனத்தை கல்வித் துறையின் மீது செலுத்த ஆரம்பித்தார்.

தனது திறமையை தொழிற்துறையில் வெளிப்படுத்திய போது, தனது முழு ஈடுபாட்டையும், காடாய் இருந்த காரைக்குடி பகுதியை, கல்வியில் முக்கிய இடமாக மாற்ற நினைத்து அப்பகுதி மக்களின் கல்வியறிவை வளர்க்க முயற்சித்து வெற்றி கண்டார்.

தனது 48–வது வயதில் காலமானாலும் சிறந்த கல்வி வள்ளலாகவும், தரும சிந்தனையில் சிறந்தவராகவும் விளங்கினார். கல்வி வளர்ச்சியில் தமிழ்நாடு சிறந்து விளங்க மற்ற அனைவரையும் விட மிக்க ஈடுபாடு கொண்டார்.

தனது 37–வது வயதில் பிரிட்டிஷ் அரசின் 'KNIGHT' விருதைப் பெற்று, பின்னர் இந்தியப் பேரரசால் 'பத்மபூஷன்' விருது அளிக்கப் பெற்றார். 1947–ல் Dr.அன்னிபெசன்ட் அம்மையாரின் நூற்றாண்டு விழாவில், சென்னை பல்கலைக் கழக துணைவேந்தரின் வேண்டுகோளான, தொழில திபர்கள் கல்லூரிகளை நிறுவி இந்தியத் திருநாட்டை கல்வியில் மேம்படச் செய்ய வேண்டும் என்பதை உடனே ஏற்றுக் கொண்டு மூன்றே நாளில் காரைக் குடியில் அழகப்பா கல்லூரியைத் தொடங்கி நடத்தி வந்தார். அது தற்பொழுது ஆலமரமாய் வளர்ந்து பல்கலைக் கழகமாக உயர்ந்துள்ளது.

தனது 48–வது வயதில், தான் நோயுற்றிருந்த போதும் தனது பெருமுயற்சியால் 300 ஏக்கர் நிலமும், பெரும் நிதியும் அளித்து காரைக்குடி பகுதியில் CENTRAL ELECTRO CHEMICAL RESEARCH INSTITUTE (CECRI) துவங்கச் செய்தார்.

தரும சிந்தனையுள்ளவர்கள் நிறைந்த பகுதியில் தனி ஒருவனாக நின்று இப்பகுதியில் கல்வி வளர்ச்சியை ஏற்படுத்தி சரித்திரத்தில் நீங்கா இடம் பெற்றார். தான் குடியிருக்கும் பெரிய மாளிகையையும் பெண்கள் முன்னேற்றம் கருதி கல்லூரி நிறுவி கொடுத்தார்.

கல்வி, தொழில், தரும சிந்தனையில் சிறந்து விளங்கிய டாக்டர் RM.அழகப்ப செட்டியார் அவர்களை பெருமைப் படுத்தும் விதமாக இந்திய அஞ்சல் துறை தபால்தலை ஒன்றை 2007–ல் வெளியிட்டு தன்னைப் பெருமைப் படுத்திக் கொண்டது. ■

அடுத்த இதழில்
கவியரசு கண்ணதாசன்

வாழ்த்துக்கள்

நேமம் கோவிலைச் சேர்ந்த காரைக்குடி தெய்வத்திரு. சேவு.க.ராம.ராமநாதன் செட்டியார் - மீனாட்சி ஆச்சி அவர்களின் மகனும் அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் வேளாண்புல முதல்வராகவும் பல்கலைக்கழக ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு இயக்குனராகவும் உழவியல் பேராசிரியராகவும் பணியாற்றிய முதுமுனைவர் இராம. கதிரேசன் அவர்கள் கோவை தமிழக வேளாண் பல்கலைக்கழகத்தின் ஆட்சி மன்றக்குழு (Board of Management) உறுப்பினராக தமிழக ஆளுநரால் நியமிக்கப்பட்டுள்ளார். அவரது பணி சிறக்க நமது செட்டிநாடு வாழ்த்துகிறது.

தொழில் தொடங்கலாம் வாங்க 25

பிராண்டிங் சூத்திரங்கள்! -5

சேதுராமன் சாத்தப்பன்

டிரெண்டுக்கேற்ப நம்மை அப்டேட் செய்யாமல் விட்டால் நாம் காணாமல் போய் விடுவோம். பிராண்டிங்கிற்கு முக்கியம் டிரெண்டிங்கை தொடர்ந்து கவனிப்பது. இதைக் கவனிக்காமல் இருந்தால் பிசினஸில் சறுக்கல் தான் ஏற்படும்.

உங்கள் பொருள் எவ்வளவு சிறந்ததாகவும் இருக்கலாம். மக்களிடம் ஒரு சில வார்த்தைகளில் உங்கள் பிராண்டைக் கொண்டு சேர்க்க வேண்டும். இட்லி, தோசை மாவு உற்பத்தி செய்யும் நிறுவனம் ID என்ற பெயரில் பிராண்டை தொடங்கியது. ID என்றால் இட்லி, தோசை என்று அர்த்தம். அந்த

பிராண்ட் மக்கள் மனதில் அப்படியே இருந்தது. பின்னர் அதே பிராண்டிலேயே காபி டிகாஷன், ரெடி டு ஈட் புரோட்டா போன்றவைகளையும் கொண்டு வந்தார்கள்.

நமது போட்டியாளர் யார் என்பதில் தெளிவாக இருக்க வேண்டும். அப்போதுதான் நமக்கான வாடிக்கையாளர்களைத் தக்க வைக்கமுடியும்.

நம்மை அசைக்க யாரும் இல்லை என்ற எண்ணத்தில் பிராண்டைப் பராமரிக்காமல் விடுவது பல இழப்புகளுக்கு கொண்டு செல்லும் என்பது உறுதி. ஆதலால் பிராண்ட் பராமரிப்பு மிகவும் முக்கியம். அதைப் பராமரிக்காமல் விடுவது நஷ்டத்தையே தரும். உலகின் பல பிராண்டுகள் தங்கள் பிசினஸை இப்படி இழந்திருக்கின்றன.

(பிராண்டிங் சூத்திரங்கள் தொடரும்)

இந்த மாத மெண்டர்

லெஷ்மி செராமிக்ஸ்

கானடுகாத்தான் முத்துராமன் (கோவை)

இந்த இதழுக்கு நாம் நம் இளைஞர்களுக்கு மெண்டராக இருக்க அழைத்தது, நமது இனத்தில் சிறிய அளவில் இருந்து தொழில் செய்து இன்றைய தினத்தில் கட்டிடப் பொருட்களில் குறிப்பாக டைல்ஸ், பாத்ரூம் பிட்டிங்க்ஸ் ஆகியவைகளில் தனக்கென தமிழ்நாட்டில் ஒரு பெரிய இடத்தை பிடித்துள்ள லெஷ்மி செராமிக்ஸ் நிறுவனத்தின் மேனேஜிங் டைரக்டர் திரு.முத்துராமன் அவர்களை தான்.

லெஷ்மி செராமிக்ஸ் நிறுவனம் பெரிய கனவுகளோடு 400 சதுர அடியில் 1997ஆம் ஆண்டு கோவையில் செராமிக் டைல்களை விநியோகிக்கும் நிறுவனமாக தொடங்கப்பட்டது. அது 2019ஆம் வருடம் தமிழ்நாடு, கேரளா மக்களுக்கு டைல்ஸ் ஷோரூம்களில் ஒரு வித்தியாசமான சர்வதேச அனுபவத்தை வழங்க வேண்டும் என்பதற்காக சுமார் 40,000 சதுர அடியில் முழுவதுமாக குளிரூட்டப்பட்ட ஷோ ரூம் ஆக விரிந்து கோவை கௌலி ப்ரவுன் சாலையில் அமைக்கப்பட்டிருக்கிறது. சுவர் மற்றும் தரை டைல்ஸ், பாத்ரூம் பிட்டிங்க்ஸ், சானிடரிவேர், வெல்னஸ் புராடக்ட்ஸ், பிரீமியம் சொகுசு பிராண்டுகளின் தயாரிப்புகள், 3D பாத்ரூம் வடிவமைப்பு வசதி மற்றும் ஏராளமான கார் பார்க்கிங் என்ற வகையில் வடிவமைக்கப்பட்டிருக்கிறது. இது தென்னிந்தியாவிலேயே மிகப்பெரிய ஷோரூமாக இருக்கிறது.

தற்போது தமிழகம் முழுவதும் இந்த நிறுவனத்திற்கு 15 கிளைகள் இருக்கின்றன. கோவையில் மட்டும் மூன்று கிளைகள் உள்ளன. தற்போது இவரது நிறுவனங்களில் 450 பேர் வேலை செய்து வருகின்றனர். இது தவிர 400 பேர் மறைமுக வேலை வாய்ப்பு பெற்று வருகின்றனர்.

கடந்த 8 ஆண்டுகளாக கஜாரியா செராமிக்ஸின் அகில இந்தியாவின் நம்பர் 1 டீலருக்கான விருது,

பல் பாதுகாப்பில் உயர் தொழில் நுட்பம் – சாதித்த ஸ்டார்ட் அப்

உயர் டிஜிட்டல் தொழில்நுட்பம், ஆர்ட்டிபிஷியல் இண்டெலிஜென்ஸ் மற்றும் தானியங்கு பணிப் பாய்வு (automated workflow) மூலம், பல் மருத்துவத்தை டிஜிட்டல் மயமாக்குவதற்கு ஒரு ஸ்டார்ட் அப் முயன்று வெற்றி கண்டுள்ளது. இந்த கம்பெனி செலவு குறைந்த ஒரு 3D ஸ்கேனரை கண்டுபிடித் துள்ளது. இதற்கு டென்ட்ரா (Dentra) என்று பெயரிடப்பட்டுள்ளது.



பொதுவாக, பெரும்பாலான வளரும் நாடுகளில் உள்ள பல் மருத்துவர்கள் வாய்வழி பதிவுகள் எடுக்க கையினால் உபயோகிக்கப்படும் கருவிகளையே பயன்படுத்துகின்றனர். அதன் மூலம் எடுக்கப்படும் பதிவுகளை தான் dental implants / devices செய்ய பயன்படுத்துகின்றனர். இது மிகவும் பழமையானதாகும். இதனால் 60 சதவீதம் வரை ரிஜக்ட் ஆகிறது.

இந்த பழமையான முறை பயன்படுத்தப் படுவதால் இதில் தொடர்ச்சியான செலவுகள், தாமதங்கள் மற்றும் அதிக நிராகரிப்பு சதவீதம் ஆகியவற்றுடன் பல நிச்சயமற்ற தன்மைகள் உள்ளன. பல் பணிப்பாய்வுகளை டிஜிட்டல் மயமாக்குவதற்கான தனிப்பட்ட முறையில் கருவிகளை வாங்க முயன்றால் அது விலை அதிகம் என்பதால், பெரும்பாலான இந்திய பல் மருத்துவர்களால் அதற்கு செலவு செய்ய முடியாது என்ற வகையில் இருக்கிறது.

இந்த ஸ்டார்ட் அப் கம்பெனி ஒரு தனித்துவமான 3D புகைப்பட ஸ்கேனரை உருவாக்கியுள்ளார்கள். இதற்கான காப்புரிமை பெறவும் விண்ணப்பித் துள்ளார்கள். இது குறைந்த விலையில் அதி நுட்பமான ஸ்கேனராகும்.

இவர்கள் இந்த உபகரணத்தை விற்பதற்கு Software as a Service (Saas) என்ற பிசினஸ் மாடலை பயன்படுத்துகின்றனர். இதனால் இவர்களால் விலை குறைவாக கொடுக்க முடிகிறது.

SaaS மாடல் என்றால் என்னவென்று தெரிந்து கொள்வது நல்லது. மென்பொருளை ஒரு சேவை யாக (Software as a Service) அளிப்பது. இது கிளவுட் மூலம் வழங்கப்படுகிறது. இந்த சாப்ட்வேர்கள் கிளவுடில் ஹோஸ்ட் செய்து இணையத்தில் இறுதி பயனர்களுக்கு (பல் டாக்டர்கள் போன்றவர் களுக்கு) கிடைக்கச் செய்யப்படுகிறது. இதுபோல் கொடுப்பதால் ஒவ்வொரு பல் டாக்டரும் இந்த 3D ஸ்கேனரை உபயோகிக்க அதிக பணம் செலவழிக்க வேண்டாம்.

பல் மருத்துவர் ஒரு நோயாளியை டென்ட்ராவைப் பயன்படுத்தி ஸ்கேன் செய்தவுடன், 3D ஸ்கேன் தானாகவே நிறுவனத்தின் சர்வர்களில் பதிவேற்றப் படும். இறுதியாக, அஸ்வின் டெக் (டென்ட்ரா தயாரிப்பாளர்கள்) தங்களது அங்கீரிக்கப்பட்ட டென்டல் லேப் களிலிருந்து அதற்கான ரிசல்ட்களை பெற்று அவற்றை சரிபார்த்து டாக்டருக்கு அனுப்புகிறது.

இந்த ஸ்கேனருக்கு மாதாந்திர பராமரிப்பு கட்டணம் மற்றும் ஒவ்வொரு ஸ்கேனுக்கும் கட்டணம் மட்டும் வசூலிக்கப்படுகிறது.

2020ம் வருடம் ஆரம்பிக்கப்பட்ட் அஸ்வின் டெக் என்ற இந்த ஸ்டார்ட் அப் கம்பெனி Techstars என்ற போட்டியில் 500 கம்பெனிகள் கலந்து கொண்டதில் சிறந்த 9 ஸ்டார்ட் அப் கம்பெனிகளில் ஒன்றாக தேர்வு செய்யப்பட்டுள்ளது.

எதிர்காலத்தில் இந்த நிறுவனம் ஆர்ட்டிபிஷியல் இண்டெலிஜென்ஸ் மூலம் கண்டறியும் கருவிகளை அறிமுகப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது இதில் பல் பிளேக் பகுப்பாய்வு மற்றும் வாய்வழி புற்றுநோய் கண்டறிதல் கருவிகள் ஆகியவை அடங்கும். இவர்களின் இணையதள முகவரி www.dentratech.com

---

கடந்த 5 ஆண்டுகளாக சோமனி செராமிக்ஸின் அகில இந்திய நம்பர் 1 டீலருக்கான விருது மற்றும் ஆசிய கிரானிடோ லிமிடெட்டின் லைப் டைம் அச்சிவ்மெண்ட் அவார்ட் மற்றும் கடந்த மூன்று ஆண்டுகளாக கோஹ்லர் கம்பெனியின் அகில இந்திய நம்பர் 1 எம்.என்.சி., பிராண்ட் விருது ஆகியவை பெற்றுள்ளதோடு, நிட்கோ, ஆர்.ஏ.கே மற்றும் சிரா கம்பெனிகளின் புராடக்ட்களில் அதிக அளவு விற்பனையாளராகவும் இருக்கின்றனர்.

இது தவிர ஹோட்டல், பர்னிச்சர், மாடுலர் கிச்சன், ஃப்ளாண்டேஷன் ஆகிய தொழில்களிலும் கவனம் செலுத்தி வருகிறார்.

பதவிகள், விருதுகள்

முத்துராமன் அவர்கள் 2000 ஆம் ஆண்டில் ரோட்டரி இன்டர்நேஷனலில் சேர்ந்து பல்வேறு பதவிகளை வகித்துள்ளார். தற்போது அவர் ரோட்டரி மாவட்டம் 3201 இன் உதவி ஆளுநராக உள்ளார். அவர் ஜேசீஸ் இன்டர்நேஷனலில் இருந்து

TOPBIP விருதை பெற்றிருக்கிறார். மேலும் கோவையில் சானிட்டரிவேர் டீலர்களின் அசோஷியேஷனின் துணைத் தலைவராக உள்ளார்.

இந்திய வர்த்தக சபை, வர்த்தகத்தில் சிறந்த வருக்கான (Best in Trade) ஜி.கே.சுந்தரம் விருதை வழங்கியுள்ளது. அவர் NEU (நகரத்தார் தொழில் முனைவோர் சங்கம்) உறுப்பினராக உள்ள இவர், ஐபிசிஎன் 2015ன் (நகரத்தாரின் சர்வதேச வர்த்தக மாநாடு 2015) இணைத் தலைவராகவும் இருந்தார். லெஷ்மி செராமிக்ஸ் 2017 ஆம் ஆண்டிற்கான "கோவையின் சிறந்த பிராண்டு" என்ற விருது, டைம்ஸ் ஆப் இந்தியாவின் Times Retail Icon Award-Tiles Category 2018ம் ஆண்டு வழங்கப்பட்டுள்ளது.

எப்படி செராமிக்ஸ் தொழிலை தேர்வு செய்தீர்கள் என்று கேட்ட போது?

இந்தியாவில் விவசாயத்திற்கு பிறகு கன்ஸ்ட்ரக்ஷன் தான் பெரிய தொழில். இந்த தொழில் என் ஸ்பீடுக்கு தீனி போடக்கூடிய ஒரு தொழிலாக இருந்தது. கன்ஸ்ட்ரக்ஷன் தொழில் என் வளர்ச்சி வேகத்திற்கும் தீனி கொடுத்தது.

உங்கள் கம்பெனிக்கென ஒரு தனி பிராண்டையும் கொண்டு வந்திருக்கிறீர்கள். அவை விலையைப் பொறுத்த வரை எப்படி இருக்கிறது என்று கூறுங்களேன் என்று கேட்ட போது...

தரமான பொருட்களை கொடுக்க வேண்டும் என்ற எண்ணம் எனக்கு எப்போதும் உண்டு. ஆனால் விலை குறைவில் எனக்கு சம்மதம் இல்லை. விலை குறைவான பொருட்கள் தான் விற்கும் என்றால் ஐபோன், மெர்சிடிஸ் பென்ஸ் கார், சோனி டிவி, ரோலக்ஸ் வாட்ச் ஆகியவை விற்கவே கூடாது. ஆனால் அவை இன்று உலகளவில் விற்கிறது என்பது குறிப்பிடதக்கது.

வாடிக்கையாளர்களில் Creamy Layer, Upper Middle Class, Middle Class, Lower middle class என நான்கு வகைப்படுகிறார்கள்.

நாங்கள் இரண்டாவது வகை, அதாவது B வகுப்பு வாடிக்கையாளர்களை தான் குறிவைத்து செயல்படுகிறோம். எங்களுடைய ப்ராடக்ட்களுக்கு ஆன்லைன் போட்டி குறைவு. காரணம் இவை யெல்லாம் டச் அண்ட் பீல் புராடக்ட்கள் என்கிறார்.

நகரத்தார் இளைஞர்களுக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள் என்று கேட்ட போது?

நகரத்தார் இளைஞர்களுக்கு ஒழுக்கம், பண்பு, நாலெட்ஜ் ஆகியவை நிறைவாக இருக்கிறது. ஆனால் குறைவாக இருப்பது தைரியம் தான். இது தான் தொழில் செய்ய முக்கியமாக தேவை.

நமது இளைஞர்கள் Comfort Zone ஐ விட்டு வெளிவர வேண்டும், தொழில் செய்ய முன் வரவேண்டும். சொற்களை குறைத்து கொள்ளுங்கள், தொழிலில் அதிக கவனம் செலுத்துங்கள் என்கிறார்.

ஒருவருக்கு லாபம் தரும் தொழில், அடுத்தவருக்கு எப்படி நஷ்டம் வரும்? ஆதலால் எந்த தொழிலும் தப்பில்லை. சரியாக, முறையாக செய்ய வேண்டும்.

ஒரு வேளை உங்களுக்கு தொழில் செய்ய பிடிக்கவில்லையா, அப்படியெனில் நீங்கள் இருக்கும் வேலையில் உச்சத்தை தொட வேண்டும் என்ற எண்ணம் இருக்க வேண்டும். அதைத் தொட வேண்டும் என்கிறார்.

குடும்பம் பற்றி

கானாடுகாத்தான் சொந்த ஊர். தந்தையார் பழ. சண்முகம் செட்டியார், தாயார் எஸ். அழகம்மை ஆச்சி. மனைவி திருமதி எம்.கற்பகம். இவர்களுக்கு எம்.அரவிந்த் சண்முகம் என்ற மகன் இளங்கலை

வணிகவியல் முடித்து விட்டு தற்போது சார்ட்டர்டு அக்கவுண்டன்சி படித்து வருகிறார். மகள் எம்.அழகு, பி.எஸ்சி., உளவியல் படித்து முடித்து தற்போது டாடா இன்ஸ்டிடியூட் ஆப் சோசியல் சயின்ஸ் கல்லூரியில் எம்.ஏ., படித்து வருகிறார்.

உங்கள் சந்தேகங்களுக்கு எழுதுங்கள்.
ஈமெயில் Sethuraman.sathappan@gmail.com,
மொபைல் 9820451259,
இணையதளம் www.startupandbusinessnews.com

இளங்குடி ஸ்ரீ பாகசாலமூர்த்தி அய்யனார் நகரத்தார் டிரஸ்ட் சார்பாக 25.06.2021 அன்று கோவில் பணியாளர்கள் 64 நபர்களுக்கு கொரோனா கால நிவாரணமாக தலா 10 கிலோ அரிசி மற்றும் பலசரக்கு பொருட்கள் அடங்கிய சிப்பம் உள்ளிட்ட பொருட்களை டிரஸ்ட் அறங்காவலர்கள் பிஎல்.சிதம்பரம், ஏவி.எம்.பிஎல்.சந்துரு மற்றும் எஸ்பி.பழனியப்பன் ஆகியோர் வழங்கினர்.



UNISOL INC provides bespoke chemical additives to cement manufacturers and precast concrete producers.

The state-of-the-art UNISOL-STAREX Research Centre, based in Noida, is dedicated to the development of most advanced chemical additives for:

- Improving quality of cement and precast concrete
- Reducing costs of production
- Reducing carbon footprint of the cement and concrete industry

Founded by graduates from IIT-Bombay, the core team also includes cement industry veterans, PhDs and chemical engineers from prestigious institutes.

www.unisolinc.in

sales@unisolinc.in

+91-9899299905 | +91-9871346655 | +91-9560758555

UNISOL

அண்ணாமலை பாலிடெக்னிக் கல்லூரி, செட்டிநாடு - 630 102

(ராஜா அண்ணாமலை செட்டியார் அவர்களின் நினைவாக)

ராஜா முத்தையா செட்டியார் சாரிடபிள் & எஜுகேஷனல் டிரஸ்டால்

நடத்தப்படும் அரசு உதவிபெறும் கல்லூரி

முதலாமாண்டு சேர்க்கை - 2021 – 22

பத்தாம் வகுப்பு (S.S.L.C / Matriculation) அல்லது அதற்கு இணையான கல்வியில் தேர்ச்சி பெற்ற மாணவ / மாணவியர்கள் முதலாம் ஆண்டில் சேரலாம். **பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் சமர்ப்பிப்பதற்கான கடைசி நாள்: 19/07/2021**

நேரடி இரண்டாமாண்டு சேர்க்கை - 2021 – 22

மேல்நிலைக் கல்வியில் தேர்ச்சி பெற்றிருப்பதுடன், (Academic) இயற்பியல், வேதியியல், கணிதம் / உயிரியல் அல்லது தொழில் பிரிவில் (Vocational) கணிதம் / இயற்பியல் / வேதியியல் (ஏதாவது ஒன்று) & சம்பந்தப்பட்ட தொழில் பிரிவு பாடங்கள் எழுத்துமுறை & செய்முறை – (Theory & Practical) அல்லது அதற்குச் சமமான படிப்பு பயின்றிருக்க வேண்டும்.

அல்லது

பத்தாம் வகுப்பு தேர்ச்சி மற்றும் இரண்டு ஆண்டுகள் தொழில் பயிற்சியில் உரிய தொழில் பிரிவில் பயின்று தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் (10th Passed and ITI Passed with appropriate Programme).

பாடப்பிரிவுகள்:

Civil Engineering (அமைப்பியல்)
Mechanical Engineering (இயந்திரவியல்)
Electrical & Electronics Engineering (மின்னியல் & மின்னணுவியல்)
Instrumentation & Control Engineering (கருவியியல்)
Textile Technology (நெசவியல்)

விண்ணப்ப படிவக்கட்டணம் ரூ.150/
(SC/ST விண்ணப்பதாரர்களுக்கு விண்ணப்ப படிவக்கட்டணம் கிடையாது)

சேர்க்கைக்கு உடன் அணுகவும்:
Phone: 9080163800

- வளாக நேர்முகத்தேர்வு (Campus Interview) மூலம் 100% வேலை வாய்ப்பு எங்கள் கல்லூரியில் வளாக நேர்முகத்தேர்வு மூலம் 2019-20 ம் ஆண்டில் 339 மாணவர்களுக்கு பணி நியமன ஆணை வழங்கப்பட்டுள்ளது.
- பள்ளத்தூர், கானாடுகாத்தான் மற்றும் காரைக்குடியிலிருந்து பேருந்து வசதி, விடுதி வசதி உண்டு
- 100% வேலை வாய்ப்பு உறுதி தரும் மையம் மற்றும் வேலை பெறுவதற்கான பயிற்சி வகுப்புகள்
- சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதி (கல்லூரி வளாகம் மற்றும் விடுதியில்)
- நவீனப்படுத்தப்பட்ட இயந்திரங்கள் மற்றும் ஆய்வுக்கூடங்கள்

பட்டயப் படிப்பிற்கு விண்ணப்பிக்க கல்லூரியின் இணையதள வாயிலாக விண்ணப்பங்கள் பதிவு செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இணைய தளம் வாயிலாக விண்ணப்பிக்க இயலாத மாணாக்கர்கள் கல்லூரி வளாகத்தில் இணைய வாயிலாக விண்ணப்பிக்கலாம். கல்லூரி வளாகத்தில் போதிய அளவில் கொரோனா தடுப்பு மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

www.annamalaipolytechnic.in

திருச்செந்தூரான் கேஸஸ் சேல்ஸ் அண்ட் சர்வீசஸ் திருமதி வள்ளி பழனியப்பன் அவர்களுடன் ஒரு பேட்டி

வள்ளி - பழனியப்பன்

தேனம்மை லெட்சுமணன்

அம்பத்தூர் நகரத்தார் சங்கத்தின் மகளிர் அணித் தலைவி திருமதி வள்ளி பழனியப்பன் தன் கணவரோடு இணைந்து இண்டஸ்ட்ரியல் ஆக்ஸிஜனை தொழிற்சாலைகளுக்கு சப்ளை செய்யும் நிறுவனம் நடத்தி வருகிறார். இவரின் கணவர் பழனியப்பன் சிவில் காண்ட்ராக்டராக இருக்கிறார். பள்ளத்தூர்–இலுப்பைக்குடிக் கோயிலைச் சேர்ந்த இவர்கள் சென்னை, அம்பத்தூரில் இரு குழந்தைகளுடன் வசித்து வருகிறார்கள்.

அவரை பேட்டி கண்ட போது கிடைத்த விரவங்கள்...

“படிக்கும் காலத்தில் இருந்தே தொழில் செய்ய வேண்டும் என்ற ஆர்வம் இருந்தது. திருமணத்திற்கு பின்பு கணவரும் தொழில் தொடங்குவதற்கு ஊக்கமளித்தமையால் அவர் தொழில் செய்யும் இடங்களுக்கு சென்று பேப்ரிகேஷன், (Fabrication) செய்யும் பொழுது உருளைகளில் (Cylinder) ஆக்சிஜன் நிரப்பி வருவதைப் பார்த்தேன். என்னுடைய சகோதரரும் இத்துறை சம்பந்தமாக தகவல்களைக் சேகரித்து ஊக்கம் அளித்ததும் நான் இத்துறைக்கு வர முக்கிய காரணம்.

தொழில் தொடங்கலாம் என்று முடிவெடுத்தவுடன் இத்துறை சம்பந்தமாக திரவ ஆக்சிஜனை உருளைகளில் நிரப்பும் இடங்களிலும் அதை எங்கெங்கு பயன்படுத்துகிறார்கள் என்பதை கேட்டறிந்து அங்கு சென்று பார்வையிட்டு அதன் விவரங்களை தெரிந்து கொண்டேன். அதன் நீட்சியாக “திருச்செந்தூரான் கேஸஸ் சேல்ஸ் அண்ட் சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட்” என்ற நிறுவனம் உருவானது.

“திரவ ஆக்சிஜன்–ஐ Inox, National Oxygen போன்ற பெரிய நிறுவனங்களிடம் இருந்து பெற்று அதனை உருளைகளில் வாயுவாக நிரப்பி MRF, MFL, MFPL மற்றும் Fabrication நடைபெறும் தொழிலகங்களுக்கு வினியோகம் செய்வதோடு, ஆக்சிஜன் வினியோகம் செய்யும் இடங்களுக்கு சென்று அவர்களுக்கான தேவை குறித்தும் உருளைகளை எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்பது குறித்தும் கலந்துரையாடி அதற்கு ஏற்றவாறு குறித்த நேரத்தில் வினியோகம் செய்வது எங்களுடைய ஸ்பெஷாலிட்டி” – என்றார்.

“ஆக்ஸிஜன்” பற்றாக்குறை ஏற்படும் காலங்களில் எங்களுடைய வாடிக்கையாளர்கள் பாதிக்காத வகையில் அவர்களுடைய தேவைகளை பூர்த்தி செய்வது பெரிய சவாலாக இருக்கும். கொரோனா காலத்தில் இன்டஸ்ட்ரியல் தேவையை விட மருத்துவமனைகளில் ஆக்ஸிஜனின் தேவை மிக அதிகம். எனவே கோவிட் கால மருத்துவ தேவைகளை கருத்தில் கொண்டு இன்டஸ்ட்ரியல் கேஸ் விநியோகம் அரசாங்க விதிமுறைப்படி நிறுத்தி வைக்கப்பட்டு இருந்தது. இண்டஸ்ட்ரியல் மற்றும் மருத்துவத்திற்கு பயன்படும் திரவ ஆக்ஸிஜன் ஒன்று தான். மருத்துவ ஆக்ஸிஜன் நிரப்புவதற்கு அரசாங்க அனுமதி பெற்றிருந்ததால் அதற்கு உரிய வழிமுறைப்படி நாங்கள் செயல் பட்டோம்.

“இந்த நிறுவனத்தை கடந்த நான்கு வருடங்களாக நடத்தி வருகின்றோம். சிலிண்டர் மற்றும் ஸ்டோரேஜ் டேங்க்கை கையாளும் விதம் மற்றும் அதற்கு உரிய காலத்தில் டெஸ்ட் செய்தல் மிக அவசியம். புதிதாக இத்துறையில் ஈடுபட விரும்புபவர்களுக்கு இது மிகவும் நல்ல தொழில். வெற்றிக்காக பொறுமையுடனும் கவனத்துடனும் செயல்பட வேண்டும். மேலும் இத்தொழிலின் லாப நஷ்டங்கள் நாம் தொழிலை நடத்தும் விதங்களை பொறுத்தே அமையும். நிகழ்காலத்திலும் எதிர்காலத்திலும் மருத்துவத் துறை மற்றும் தொழிலகங்களில் இதன் தேவை மிக அதிகம். கடின உழைப்புடன் செயல்பட்டால் லாபம் நிச்சயம்.பெரிய தொழில் நிறுவனங்கள், நாங்கள் அளிக்கும் சேவை சிறந்த முறையில் இருப்பதால், இன்று வரை எங்களுக்கு தொடர்ந்து ஆதரவு அளித்து வருகின்றனர். வரும் காலங்களில் நிறுவனத்தை விரிவுபடுத்தி பெரிய நிறுவனங்கள் நடத்தும் ஒப்பந்த புள்ளிகளிலும் கலந்து கொண்டு சிறந்த முறையில் வெற்றி கொள்வோம்” என்று நம்பிக்கையுடன் தெரிவித்த திருமதி வள்ளி பழனியப்பன் அவர்களின் பணி சிறக்க வாழ்த்தி வந்தோம்.

நகரத்தார் சிகரத்தார் 68

காரைக்குடி நாராயணன்

ராஜ்மோகன் அழகப்பா பல்கலைக் கழகத்தைப் பற்றிய பல விவரங்களை டைரியில் எழுதினார். டி.வி.க்கு முன்னால் செட்டியார் உட்கார்ந்திருந்தார். ராஜ்மோகன் அவரிடம் வந்து பேசினார்.

அய்யா... ரொம்ப நேரமா டி.வி–க்கு முன்னால உக்காந்திருக்கீங்க, ஏதாவது ஒரு 'சேனலை'ப் பாக்க வேண்டியது தானே.

டி.வி. பாக்குற ஆசையே வரமாட்டேங்குது. ஏன்? எந்த 'சீரியலை'ப் பாரு. அதுல வர்ற பொம்புளைங்க பூராம் ராட்சசியா இருக்காக. ஒருத்தரை ஒருத்தர் எப்படிக் கெடுக்குறதுங்குறதுலே கவனமா இருக்காக. குடும்பப் பொண்ணா லட்சணமா இல்லே...

இதைக் கேட்ட ராஜ்மோகன், அவரையும் அறியாமல் சிரித்தார்.

ஒரு காலத்தில இந்த டி.வி. எல்லாம் வர்றதுக்கு முன்னால நாங்கள்லாம் ரசிச்சது இலங்கை வானொலி நிலையம். அதுல அவங்க பேசுனதுதான் சுத்தத் தமிழ்.

அப்படியா, சொல்லுங்கய்யா. கேக்கலாம்.

செட்டியார் இலங்கை வானொலி நிகழ்ச்சிகள் பற்றி மடமடவென்று சொல்ல ஆரம்பித்தார்.

கீதாஞ்சலி, புலரும் பொழுது, நினைவூட்டுகிறோம், பிறந்த நாள் வாழ்த்து, பொங்கும் பூம்புனல், வாத்திய இசை, வானவில், ஆண்குரல், பெண்குரல், என் விருப்பம், ஒரு சொற்கோவை, பாட்டும் படமும், பாட்டும் பதமும், அந்தாதி இசைமாலை, திரை தந்த இசை, சித்திர கானம், நேயர் விருப்பம், நெஞ்சில் நிறைந்தவை, தேனும் பாலும், ஜோடி மாற்றம், ஒருபடப் பாட்டு, மகளிர் கேட்டவை, முத்துக் குவியல், இசை இன்பம், ஒன்றோடொன்று, கவியுள்ளம், இசையமைப்பாளர், இனிய நட்சத்திரங்கள், கோஷ்டி கானம், ஜோடிக்குரல், மலர்ந்தும் மலராதவை, நகைச்சுவை, இசைக் களஞ்சியம், இசையும் கதையும், இன்பமும் துன்பமும், நட்சத்திர கானம், இந்திப் பாடல்கள், பக்திப் பாடல்கள், பல்சுவை விருந்து, முத்து விதானம், பூவும் பொட்டும், விகட தடாகம், வாலிப வட்டம், ஆடவர் அரங்கு, வீட்டுக்கு வீடு, இருவர் பாடியது, ஒலிச்சித்திரம், இன்றைய நேயர், விடுமுறை விருப்பம், திரை விருந்து, நீங்கள் கேட்டவை, அஞ்சல் பெட்டி, இரவின் மடியில், ஒலி மஞ்சரி, செய்தி அறிக்கை, சிறுவர் மலர், தமிழ்ச் சோலை, நாடகம்.

ராஜ்மோகன் செட்டியாரின் நினைவாற்றலைப் பாராட்டும் போது, மூன்றாம் கட்டிலிருந்து சிகப்பி ஆச்சி, 'வாங்க வாங்க' என்று சொல்லிக் கொண்டே முகப்புத் திண்ணைக்கு வந்தார்.

என்ன கனகம், வெள்ளையப்பன் ரெண்டு பேரும் ஒன்னா வந்திருக்கீக.

வெள்ளையப்பன் பதில் சொன்னான்.

ஆயா, வர்ற வழியில பஸ்டாண்டுல கனகாச்சியைப் பாத்தேன். உங்க வீட்டுக்குப் போறதாச் சொன்னாக. நானும் அங்கேதான் போறேன்னு சொல்லி ஆட்டோவுல கூட்டிக்கிட்டு வந்தேன். எப்பவும் எந்தப் பிரச்சினையா இருந்தாலும் நீங்கதானே தீத்து வைக்குறது.



செட்டியாரும், ராஜ்மோகனும் அவர்கள் சொல்லப் போகும் பிரச்சனையைக் கேட்கத் தயாரானார்கள். கனகம், அவள் வேதனையைச் சொன்னாள்.

சோப்பி அண்ணமுண்டி, எனக்குப் பொறந்தது நாலும் பொண்ணாப் போச்சு.

நல்லதுதானே. இப்போத்தான் பொண்ணுகளுக்கு கிராக்கி யாச்சே.

இருந்து என்ன பண்றது. நான் என் கூடப் பொறந்த

தம்பி வீட்ல, நான் பொறந்த ஆத்தா வீட்ல ஒரு பொண்ணைக் கொடுக்க ஆசைப்பட்டேன்.

உனக்கு ஆசை இருக்கு. உன்கூடப் பொறந்த ஒரே தம்பி செல்லப்பனுக்கு இல்லையே. நிசந் தான். எங்க செட்டியாருக்கு எந்தத் தொழிலும் நல்லா அமையலே. சம்பாத்தியமே இல்லை. எனக்கு ஒரு ஆம்புளைப் புள்ளை பொறந்துச்சா. அதுவும் இல்லை. தினமும் பிரச்சனைதான்.

புரியுது. ஒரு புத்திரன் இருந்தாத்தான் அப்பச்சி போற வழிக்கு 'புத்'ங்குற நரகம் கெடைக்காமச் செய்யுறான். இது சாஸ்திரத்தில இருக்கு. ஆனா, கன்னிகாதானம்ங்குறது அதை விடப் பெரிசு. அப்போ சங்கல்பம் என்ன தெரியுமா செய்யுறோம்.

தசாநாம் பூர்வஷாம் தசாநாம்
பரேஷாம், ஆத்ம நச்சலோத் தாரண
த்வாரா, நித்ய நிரதிசய ஆனந்த
ஸாஸ்வத விஷ்ணு லோக வாப்யர்தம்
கன்னிகா தானாக்ய மஹாதானம் கர்த்தும்
யோக்யதா ஸ்த்திம் அநுக்கிரஹாண

'தசாநாம் பூர்வேஷாம்' என்றால் எனக்கு முன்னால் உள்ள பத்து தலைமுறைகள், 'தசாநாம் பரேஷாம்' என்றால் எனக்குப் பின்னால் வரக்கூடிய பத்து தலைமுறைகள். 'ஆத்மநச்ச' என்றால் என்னுடன் சேர்த்து 21 தலைமுறைகளான என்னுடைய குலம் உத்தாரணம் பெறுவதற்கும் நிலைத்த விஷ்ணு லோகத்தை நான் அடைவதற்கும் இந்த மாபெரும் தானமாகிய கன்னிகாதானம் உதவி செய்கிறது. ஒரு நல்ல பெண்ணைப் பெற்றெடுத்து அவளை வேறு குலத்துக்குத் தானம் செய்து அவள் அந்த குலத்தை விருத்தி செய்கிறாளென்றால் அது எவ்வளவு பெரிய தானம். தெய்வத்தோட அருள் இருந்தால் ஆண் குழந்தை, தெய்வமே நம்மிடம் நேரில் வந்தால் அது பெண்குழந்தை. இது நான் சொல்லலே. காஞ் சிப் பெரியவரோட அருள்வாக்கு. சுருக்கமாகச் சொன்னா அம்மாவோட ரெண்டாவது மாமியார் மகள். அப்பாவின் இரண்டாவது தாய் மகள். ஆம்புளைப் புள்ளை இல்லேன்னா என்ன?

நீங்க சொல்ற நாலு வார்த்தை நல்லாத்தான் இருக்கு. என் தம்பிவண்டி அன்னோரனிதான் என்னென்னவோ காரணம் சொல்றா.

அவ புதுப்பணக்காரி. பகட்டுறா. உன் தம்பி M.Com. படிச்சிட்டு BE CALM-ன்னு இருக்கான். அவன் சொல்லலாம்ல என் ஆச்சி மகளை மகமுண்டியாகக் கூட்டிக்கிட்டு வரலாம்னு. இதுவே உங்கிட்டேயும் பணமிருந்தா, குமரி போட்டா தடுக்கு. குட்டி போட்டா சொடுக்கு. அக்கா உடைமை அரிசி. தங்கச்சி உடைமை தவிடுங்குற கதையா ஆகியிருக்கும்.

அண்ணமுண்டி எங்க வீட்லயோ கல்யாணம் செய்யுற அளவுக்குப் பணமில்லே. இதைப் பொம்புளைப் புள்ளைகளும் புரிஞ்சுக்க மாட்டேங்குது. அதுக இஷ்டத்துக்கு மாப்பிள்ளை வேணுமாம்.

இதபாரு கனகம். நம்ம செட்டிய வீட்ல இன்னைக்கு நேத்து இல்லே ஒரு கல்யாணம் முடிவாகுறதுக்குள்ள படுற பாட்டை எப்பவோ ஒரு பழைய பாட்டுல எழுதி வச்சிட்டாக.

ஆச்சி அந்தப் பாட்டைப் பாடினார்.

இலுப்பைக்குடி மாப்பிள்ளையை
இணக்கமில்லேன்னாக
வேலங்குடி மாப்பிள்ளையை
வெவஸ்தையில்லேன்னாக
சூரக்குடி மாப்பிள்ளையைச்
சொகமில்லேன்னாக
நேமங்கோவில் மாப்பிள்ளையை
நேர்மையில்லேன்னாக
பிள்ளையார்பட்டி மாப்பிள்ளையை
பெலமில்லேன்னாக
வயிரவன் கோவில் மாப்பிள்ளையை
வாயில்லேன்னாக
இரணிக்கோவில் மாப்பிள்ளையை
இணையில்லேன்னாக
இளையாத்தங்குடி மாப்பிள்ளையை
இஷ்டமில்லாம முடிச்சாக

ஆச்சி பாடி முடித்துவிட்டு கனகாச்சி வீட்டுத் திருமணத்திற்குத் தாலி செய்து தருவதாக உறுதி அளித்தார்.

கனகம். உன் புருஷன் தப்பானவன் இல்லை. காலம் தப்பாப் போச்சு. எங்களுக்குக் கல்யாணமாகுற போது 1947–ல படி அரிசி பத்தணா, கோதுமை நாலணா, ஜீனி ஒம்பது அணா, காபித்தூள் ரெண்டு ரூபாய் கூட இல்லை. ஏன் இவ்வளவு, தங்கம் பவுன் 53 ரூபாய்தான். இன்னைக்கு நெனைச்சுப் பாக்க முடியுமா.... நெஞ்சுல இருக்கு உப்புக்கண்டம். நெருப்புக் கண்ட எடமெல்லாம் சுட்டுத் தின்னுங்குற கதையாப் போச்சு. இருக்குற எடத்தில இருந்தாத் தான் எதுக்கும் மரியாதை. என்ன வெள்ளையப்பா...

உண்மைதான் ஆச்சி. நம்ம ஊருல வரட்டியே காணோம். அமெரிக்காவுல வரட்டிக்கு கிராக்கி. நம்ம ஊரு சப்பாத்திப் பழம் கத்தார்ல 9.95 ரியால். நம்ம நாட்டு பணமதிப்பு 177 ரூபாய். துபாய்ல நுங்கு

260 ரூபாய். நம்ம வேப்பிலை குச்சி 10 டாலர். பனங்கிழங்கு அவிச்சது 1400 ரூபாய்.

கனகம் புரிந்து கொண்டு தலையாட்டினாள்.

கனகம்... நான் சொல்றேன்னு தப்பா எடுத்துக்காதே. வழியில்லேன்னா பத்துப் பேருட்ட வாங்கிச் செய்ய வேண்டியதுதான். நம்ம நகரத்தார் நிதி உதவி அறக்கட்டளைகள் எத்தனையோ இருக்கு. கேட்டுப் பாக்குறதுல தப்பு இல்லே. பழைய பெருமை பந்திக்கு ஆகாது.

இராமசாமி விசாலாட்சி அறநிலை, விசாலம் சிட்பண்ட்ஸ் – பள்ளத்தூர், ஏ.எம்.எம். சாரிட்டிஸ் அறநிலை–சென்னை, சிங்கப்பூர் நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் அறப்பணிக் கழகம் – காரைக்குடி, தைப்பிங் நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் அறப்பணிக் கழகம் – வலையபட்டி, நகரத்தார் ஐக்கிய சங்கம் – பவளக்காரத் தெரு, சென்னை, பத்துப்பகாட் நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் அறப்பணிக் கழகம் – காரைக்குடி, பிள்ளையார் பட்டிக் கற்பக விநாயகர் கோவில் நகரத்தார் அறநிலை – பிள்ளையார்பட்டி, பினாங்கு நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் அறப்பணிக் கழகம் – காரைக்குடி, போரா நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் அறப்பணிக்கழகம் – காரைக்குடி, மூவார் நாட்டுக்கோட்டைச் செட்டியார் அறப்பணிக் கழகம் – புதுக்கோட்டை, வைரவன் கோவில் நகரத்தார் சங்கம் – வயிரவன்பட்டி, காசி நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் அறப்பணிக் கழகம் – தேவகோட்டை. இது இல்லாம எத்தனையோ நகரத்தார்கள் தெரிஞ்சும், தெரியாம படிப்பு, திருமணத்துக்கு உதவி செய்யுறாக.

கனகத்திற்கு வாங்கிச் செய்யும் நிலைமை வந்ததை நினைத்து வருத்தத்துடன் புறப்பட்டாள்.

என்ன வெள்ளையப்பா. உனக்கு கல்யாணம் பேசி முடிச்சுக்கிட்டாகளாமே. சீக்கிரம் நீ கோயில் புள்ளியானா சந்தோஷம்தான்.

ராஜ்மோகன் புரியாமல் கேட்டார். அதென்ன ஆச்சி, கோயில் புள்ளி?

தம்பி எங்களுக்கு ஒன்பது நகரக்கோயில்கள் இருக்கு. அங்கேருந்து மாலை வந்தாத்தான் எங்க புள்ளைக புள்ளி ஆக முடியும். எங்க ஒன்பது கோயில்களும் எங்களுக்கு நவக்கிரகம் மாதிரி, நவரத்னம் மாதிரி. ஆச்சி ஒன்பது கோயில்களின் விவரங்களைச் சொன்னார்.

(தொடரும்)

காலக்கண்ணாடி குமரன் இதழ்

சொ.முத்தையா

சுதந்திர இந்தியாவிற்கு முன்பே காரைக்குடி செட்டிநாட்டுப் பகுதியின் தலைமை நகரமாக இருந்திருக்கிறது. குறிப்பாக இதழியல் துறையில் நவீன கால இதழியலுக்கு முன்னோடியாக இரண்டு இதழ்கள் காரைக்குடியிலிருந்து வெளி வந்துள்ளன. அவற்றில் 1933 ஆம் ஆண்டு வெளிவந்த குமரன் இதழ் அண்மையில் படிக்க நேர்ந்தது. அதைப்பற்றிய சிறுதொகுப்பே இக்கட்டுரை. இதன் ஆசிரியர் திரு சொ.முருகப்பா அவர்கள். காரைக்குடியில் பிள்ளையார்பட்டி கோயிலைச் சார்ந்த செவரொட்டியார் வீட்டைச் சேர்ந்தவர். சீர்திருத்தச் செம்மல் என அழைக்கப்பட்டவர். அக்காலத்தே விதவை மறுமணத்தை ஆதரித்தவர். சொல் வீரர் இல்லை செயல் வீரர் என்பதை நிரூபிக்க மரகதவள்ளி அம்மையாரை விதவை மறுமணம் புரிந்தார். இவர்களால் நடத்தப்பட்ட மகளிர் இல்லம் தான் தேவகோட்டைச் சாலையில் சாரதா மகளிர் கல்லூரியாக திகழ்கின்றது. சொ. முருகப்பா சிறந்த தமிழறிஞர். இராமகாதையின் திருத்திய பதிப்பு வெளியிட்டவர். இன்றைய கம்பன் விழாவிற்கு அன்றே வித்திட்டவர்.

REG. No. N 1275 | 12 பக்கங்கள் | KUMARAN WEEKLY

குமரன்

வியாழன்தோறும் வெளிவரும்.

PUBLISHED EVERY THURSDAY

(ADVICE To YOUNGMEN)

இனி இதழை நோக்குவோம். பனிரெண்டு பக்கங்கள் கொண்ட வாரஇதழ். சந்தா விபரம் உள்நாடு வருஷம் ஒன்றுக்கு ரூ 5-0-0, ஆறு மாதம் ரூ3-0-0, வெளிநாடு வருஷம் ஒன்றுக்கு ரூ7 -0-0. விளம்பரக் கட்டணம் கோர்ட்டு விளம்பரம் இன்ச் ஒன்றுக்கு ரூ1-0-0, வியாபார விளம்பரம் இன்ச் ஒன்றுக்கு ரூ0-8-0. ரூபாய், அணா, காசு புழக்கத்தில் இருந்த காலம் அது. எல்லாப் பக்கங்களிலும் விளம்பரம் இருந்தது. சீட்டுக் கம்பெனி, வியாபாரத்திற்கான விளம்பரம், கோர்ட்டு விளம்பரம், மருந்துகள் என பலவகை விளம்பரங்கள் இருந்தன. முக்கியமாக ஏவி.அன் சன்ஸ் விளம்பரம் உள்ளது. இன்றைய திரைப்பட பிதாமகர் திரு.AVM அவர்கள் குடும்பம் சம்பந்தப்பட்ட நிறுவனம் அது. அமிர்தாஞ்சன் விளம்பரம் அப்போதே உள்ளது. அதன் பெயர் அமிர்தாஞ்சனம். எல்லா நோய்களுக்கும் திவ்யாமிர்தம் என விளம்பரம் வருகிறது. பிற்காலத்தே அது அமிர்தாஞ்சன் எனப் பெயர் மாற்றம் பெறுகிறது.

இன்னொரு விளம்பரம். காரைக்குடி பழைய தபால் ஆபிஸ் கட்டிடத்தில் 1933 ஆம் வருடம் செப்டம்பர் மாதம் திங்கள்கிழமை பாலக்காடு திரு T.A.சுப்பிரமணிய அய்யரால் லெட்சுமி லாட்ஜ் என்ற பெயரில் சாப்பாட்டு கிளப் ஆரம்பம். சாப்பிட்டவர்களோ கேட்டவர்களோ இருந்தால் நினைத்து மகிழ்க.

ஊர் செய்தி முதல் உலகச் செய்தி வரை நாட்டு நடப்பிற்கு ஏற்ப செய்திகள் வெளியிடப்பட்டுள்ளன. நாமறிய வேண்டிய செய்தி ஒன்று இதோ. மகிபாலன்பட்டி கதிரேசன் செட்டியாருக்கு மகா மகோபாத்யாய பட்டம் விரைவில் கிடைக்க கூடுமென்ற வதந்தி ஏற்பட்டிருக்கிறது.

மகாத்மா தேகநிலை பற்றி ஒரு செய்தி. மகாத்மவை பரிசோதித்த டாக்டர் தேகநிலை நார்மலாகவே இருப்பதாகவும் இரத்தக் கொதிப்பு அதிகமாக இருப்பதாகவும் இன்னும் 4 முதல் 6 வாரங்கள் வரை பூரண ஓய்வு கொள்ள வேண்டுமென்று கூறினார்.

நிறையச் செட்டியார்கள் வெளிநாட்டில் வாணிகம் செய்ததால் மலேயா, ரங்கூன் கப்பல் புறப்படும் வரும் செய்திகள் தேதி வாரியாக வெளியிடப்பட்டுள்ளன. செட்டியார்கள் அறியும் வண்ணம் லண்டன் ரப்பர் மார்க்கெட் விலை விபரம் வெளியிடப்பட்டுள்ளது. காலக் கண்ணாடியாகத் திகழும் இந்த குமரன் இதழ் நம் ஊரில் இருந்து வெளி வந்தது நமக்குப் பெருமையே. இப்பெருமை இனியும் தொடரும் என விரும்புவோம், வேண்டுவோம். ■

வட அமெரிக்க நகரத்தார் சங்கத்தின் நிர்வாகி நா.மெய்யப்பன் அவர்களின் நிதி ஏற்பாட்டில் அமெரிக்கா வாழ் சொ. ந. சுப்பிரமணியன் அவர்கள் குடும்பத்தினர் நிதி உதவியுடனும் நாச்சியாபுரத்தில் சோலார் வில்லேஜ் பவுண்டேஷன் திட்ட ஏற்பாட்டில் நிறுவிய 11 சூரிய ஒளி தெரு விளக்குகளை நீதியரசர் டாக்டர் மெ.சொக்கலிங்கம் அவர்கள் 11-7-2021 அன்று துவக்கி வைத்தார்.விழாவில் நீதியரசர் உடன் கண்டரமாணிக்கத்தைச் சேர்ந்த சோலார் வில்லேஜ் பவுண்டேஷன் நிறுவனர்கள் பெ.நா.நாச்சியப்பன் சாந்தி நாச்சியப்பன் தம்பதியர், ஆச்சி வந்தாச்சு பழனியப்பன், சொ. நடராஜன், சொ.ந. வெங்கடாச்சலம், லயன் கண்ணப்பன்,வயி.ச.ராமன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

காரைக்குடியில் இலவச கொரோனா தடுப்பூசி முகாம்

ஸ்ரீ காசி நாட்டுக்கோட்டை நகரசத்திர மேலாண்மை கழகம், காரைக்குடி இளைஞர் நற்பணி மன்றம் இணைந்து நடத்திய இலவச கொரோனா தடுப்பூசி முகாம் காரைக்குடியில் 17.06.2021 அன்று நடைபெற்றது. முகாமில் நீதியரசர் டாக்டர் எம்.சொக்கலிங்கம், ஊரக வளர்ச்சிதுறை அமைச்சர் திரு.கே.ஆர்.பெரிய கருப்பன், காரைக்குடி சட்டமன்ற உறுப்பினர் திரு.எஸ்.மாங்குடி, சிவகங்கை மாவட்ட ஆட்சியர் திரு.பி.மதுசூதன ரெட்டி, ஸ்ரீகாசி நாட்டுக்கோட்டை நகர சத்திர மேலாண்மைக்கழகத் தலைவர் திரு.பழ.ராமசாமி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

ADMISSIONS
OPEN 2021 - 22

Chettinad School of Pharmaceutical Sciences

"PROVIDING **TRANSFORMATIVE** PHARMACEUTICAL **LEARNING**"

PROGRAMME OFFERED

B.Pharm
(4 Yrs.)

100% Scholarship for eligible candidates

KEY HIGHLIGHTS

- Practical and project based learning
- Mentor -Mentee support
- Personality Enhancement Programs
- Counselling and Career Guidance
- Out reach activities for real time experience
- Summer Internships in Pharmaceutical Industries
- Inter disciplinary certificate courses and training
- Hands on training in analytical instruments
- Value added courses offered in Collaboration with Pharma Industries
- Translational research facilities
- Continuous Industry-Academia Interaction
- Mandatory Library Hours under faculty supervision
- World Class Residential and Recreational Facilities
- Well stocked library with latest editions of books
- Inter library loan facility
- Wide range of digital database

Chettinad Health City Campus,
Rajiv Gandhi Salai, (OMR, Chennai),
Kelambakkam - 603 103, Chengalpattu Dist.,
Tamil Nadu, India.
E infopharma@chettinadhealthcity.com
W www.care.edu.in

FOR ADMISSION CALL
+91 78933 34442

Haganlal

நேசங்களோடு வளர்ந்த பந்தம்...
காலங்களோடு கலந்த பாரம்பரியம்...!

மகன்லால்
வைரம் & தங்கம்

We Offer Diamonds Graded by GIA | Authorised Forevermark Jeweller FOREVERMARK

51, AVM Building, Kallukatti North, KARAIKUDI - 630 001. 04565 234581/82.
27/43, North Usman Rd, T.Nagar, CHENNAI - 600 017. 044 28341333/2888.
we@maganlalmehta.com www.maganlal.in

கிழக்காசிய நாடுகளில் செட்டியார்களின் பங்கு

RM.S.விஸ்வநாதன்

கிழக்காசிய நாடுகளின் முன்னேற்றத்தில் நம் நகரத்தார்களின் பங்கு குறிப்பிடத்தக்கது. நம்மில் பலரும் இன்று வரை பர்மாவின் ஏற்றம் மிக்க வாழ்வையும் இரண்டாம் உலகப் போருக்குப் பின் நம் இனத்தாரைச் சோகத்தில் ஆழ்த்திய நிகழ்வையும் பற்றி மட்டும் பேசிக் கொண்டிருக்கிறோம். ஆனால் நம்மால் தான் பெரும்பாலான கிழக்காசிய நாடுகள் 19 மற்றும் 20 ஆம் நூற்றாண்டுகளில் மிக வேகமாக வளர்ச்சி அடைந்தன. அந்தக் காலத்தில், சமுதாயத்தில் பெரிய மனிதர்களுக்கு மட்டுமே கடன் கிடைக்கும் என்ற சூழல் இருந்தது. இதை மாற்றியவர்கள் இந்தியாவின் வணிகச் சமுதாயமான செட்டியார்கள் எனப் பரவலாக அறியப் பெற்ற நகரத்தார்களே.

நம் இனத்தார் முதலில் சென்றது, இலங்கைக்குத் தான். இன்னும் இலங்கையில் செட்டி தெரு உள்ளது. அங்குதான் நாம் கிட்டங்கிகளைத் திறந்து இலங்கையின் பொருளாதரத்தை செம்மைப் படுத்தினோம். இப்பொழுது அதன் பெயர் கடற்கரைச் சாலை (SEA STREET). டச்சுகாரர்கள் உடன் 1656 ஆம் வருடம் 17 ஆம் நூற்றாண்டில் சென்று அங்குள்ள தோட்டங்களைப் பார்த்துக் கொண்டும் மற்றும் இலங்கையின் விவசாய மற்றும் தொழில் முன்னேற்றத்தில் முக்கிய பங்காற்றியும் வந்தோம். ஆனால், அங்கு பெரிதாக நம்மால், நம் தொழிலை வளர்த்துக் கொள்ள இயலவில்லை. அதற்குக் காரணம் டச்சின் MONOPOLISTIC TRADING POLICY. 1796ல் இலங்கை இங்கிலாந்தின் வசம் வந்தது. அது முதல் நமக்கு ஏறுமுகம் தான். இலங்கையின் முதல் வங்கியான Bank of Ceylon 1841ல் ஆரம்பிக்கப் பெற்றது. இதுவே இலங்கையின் முதல் வங்கி. என்றாலும் வங்கி மற்றும் மூலதன நடைமுறைகள் அத்தனையுமே நம் செட்டியார்கள் வசம்தான் இருந்தன. அதற்கு முக்கியமான காரணங்கள் நம்மவர்களின் நம்பிக்கை, ஒற்றுமை, சாதி சார்ந்த வளர்ச்சி, நமது சுமூக உறவு. இலங்கையின் பொருளாதார எழுத்தாளர்கள் அனேகர் நம்மைக் குறிப்பிடும்போது “Merchant Bankers of Ceylon” or “the only Bankers” என்று தான் எழுதுகிறார்கள். மேற்கத்திய நாடுகளைச் சேர்ந்தவர்கள், அவர்களின் வங்கிகளின் மூலமாக பணத்தைப் பெற்று இலங்கையின் தோட்டங்களில் முதலீடு செய்தனர். ஆனால் இலங்கையின் மக்களுக்குப் பெரிய தலைவலியே மூலதனப் பற்றாக்குறைதான். அது நம்மவர்கள் வரவிற்குப் பிறகு மாறத் தொடங்கியது. நமது செட்டியார்களின் மூலதனம் அவர்களின் உறவுகளுக்குள்ளிருந்தே எடுக்கப் பெற்றது. அதற்கும் மேலே மூலதனம் வேண்டிய போது மேற்கத்திய வங்கிகள் அல்லது இந்தியாவில் இருந்த இங்கிலாந்து வங்கிகளிடம் இருந்து பெறப்பட்டது. மேலும் நமது செட்டியார்கள் அவர்களுடைய வாடிக்கை யாளர்களின் நன்மதிப்பு மற்றும் நம்பிக்கையை தமக்குள்ளும் மற்ற வங்கியாளர்களிடமும் பகிர்ந்து கொண்டனர். அதனால் ஏமாற்றப்படுவது தவிர்க்கப் பட்டது. நம் செட்டியார்களின் தொழில் திறமையே

அவர்களின் வளர்ச்சிக்கு முழுமுதல் காரணம். நாம் கிடைக்கும் வாய்ப்புக்களை உபயோகபடுத்துவதில் வல்லவர்கள். முதலில் நாம் வணிகம் செய்யவே இலங்கை சென்றோம். ஆனால் இலங்கையில் சாமானியர்களுக்கு முதலீடு கிடைக்காத காரணத்தினாலும், மேற்கத்திய நாடுகளுக்குத் தேவையான, தோட்டப் பொருளாதாரமான, காப்பி, தேயிலை, ஏலக்காய், மிளகு மற்றும் இரப்பருக்கு ஏற்றுமதி வாய்ப்புகள் அதிகம் என்பதாலும், வங்கித் தொழிலில் முதலீடு செய்து சிறப்பாக செய்து வந்தோம்.

பிறகு நாம் சென்றது பர்மாவிற்கு. நாம் கொல்கத்தாவில் இருந்து, பிரிட்டிஷாருடன் 1826 ல் ஆங்கிலோபர்மா போர் நடந்தபோது இந்தியப் பணியாளர்கள் மற்றும் இராணுவத்தினருடன் இங்கிலாந்தின் ஆதிக்கத்திற்கு உட்பட்ட பகுதிகளை நோக்கிச் சென்றோம். பர்மாவை நாம் அரிசியின் தொட்டில் என்றே சொல்லலாம். மேற்கத்திய நாடுகள் ஆசியாவின் வளங்களை குறிவைத்து வர ஆரம்பித்தனர். அவர்களின் தேவையோ வளங்கள். ஆனால் அவர்களுக்கு முதலீடு செய்யப் பயம். அதனால் அவர்கள் நம்மை இடை ஈட்டாளர்களாக வைத்துக் கொண்டார்கள். 1869ல் திறக்கப்பட்ட சூயெஸ் கால்வாய் பல விதமான வணிக வாய்ப்புகளுக்குத் திறவு கோலாக அமைந்தது. அதற்கு முன்பெல்லாம் மேற்கத்திய நாடுகளுக்குச் செல்வது என்றால் குறைந்தது 6 முதல் 8 மாதங்கள் வரை ஆகும். சூயெஸ் திறப்பு, பயண நாட்களைப் பாதிக்கும் மேலாகக் குறைத்தது மற்றும் வர்த்தக வாய்ப்புகளையும் கூட்டியது. 1869ல் கொண்டு வரப்பட்ட பர்மாவின் நிலங்கள் சட்டமும் நமக்கு நல்ல வாய்ப்புகளை உருவாக்கி தந்தது. நிலங்களை ஈடாக வைத்து வட்டித் தொழில் விரிவடைந்தது. இது பல செட்டியார்களை பர்மாவின் பக்கம் திருப்பியது. 1930 ஆம் வருடத்திய கணக்குப் படி, 2000க்கும் மேலான செட்டியார் கடைகள் பர்மாவில் இருந்தன. சிறிய ஊர்களிலும் கூடக் கடைகள் இருந்தன. அதிகமான கடைகள் ஐராவதி ஆற்றின் பாசன மற்றும் காட்டுப் பகுதியிலும், ரங்கூனிலும் இருந்தன. பர்மாவின் தோட்டங் களுக்கும் தொழிற்சாலைகளுக்கும் புத்துணர்வு அளித்து வளர்த்தது நமது சமூகமே. விவசாயப் பொருளாதாரத்திற்கும், மேற்கத்திய வங்கிகளுக்கும் ஒரு பாலமாக திகழ்ந்து வந்தோம். 1930 ல் நடந்த Burma Provincial Banking Enquiry அறிக்கையில் நம் கடைகளைப் பொறுத்தவரை நிலையான வணிக நேரமோ, விடுமுறை நாட்கள் என்றோ இல்லை. எல்லா நாட்களும், எல்லா நேரமுமே வணிக நேரம் தான். பங்குனி உத்திரம், தைப்பூசம் மற்றும் செட்டியார்களின் பண்டிகைகளைத் தவிர மற்ற நாட்கள் எல்லாமே வேலை நாட்கள் தான். அதனால் பணம் கொடுத்தவர் வாங்குவதற்கும், கடன் தேவைப்படுபவர் பெறுவதற்கும் எந்த நேரம் வேண்டுமானாலும் செல்லலாம் என்ற நிலை இருந்தது. இதுவும் பொருளாதரத்தை முன்னேற்ற உதவியது.

இதைத் தொடர்ந்து பிரிட்டனின் காலனி யாதிக்கத்தில் இருந்த மலாயா, சிங்கப்பூர், இந்தோனேசியா, தாய்லாந்து மற்றும் பிரான்ஸின் காலனியாதிக்கத்தில் இருந்த வியட்நாம், லாவோஸ், கம்போடியாவிற்கு, மேற்கத்திய வங்கிகளின் துணையோடும் அரசாங்கத்தின் துணையோடும் சென்றோம் என்றால் மிகையில்லை. இங்கு நாம் விவசாயத்திற்கு மட்டும் இல்லாது டின், ரப்பர், மண்ணிற்குக் கீழே இருக்கும் கனிம வளத்தை எடுக்கும் தொழிற்சாலைக்கும் நிதியுதவி செய்துள்ளோம். வட்டி விகிதங்களையும் குறுகிய காலத்திற்கு என்றும், நீண்ட காலத்திற்கும் என்றும், இடைக் காலத்திற்கு என்றும் பிரித்துக் கொடுத்துள்ளோம். பொருள் மற்றும் நிலத்திற்கு ஈடாக என்றால் ஒரு வட்டி, எதுவுமேயில்லாமல் நம்பிக்கையின் பேரில் கொடுப்பது என்றால் ஒரு வட்டி என்று பல விதங்களில் இன்றைய வங்கிகளைப் போல் செயல்பட்டு வந்தோம்.

தொழிலின் மேல் நம்மவர்கள் வைத்த நம்பிக்கை, நமது திறமை, மற்றும் ஒற்றுமையே நம்மவர்களின் வெற்றிக்கு முக்கியமான காரணம். எண்ணிக்கையில் நாம் சிறியவர்களாக இருந்தாலும், நமது எண்ணங்களில் நாம் பெரியவர்கள். செட்டி வட்டி என்றே ஒன்று உள்ளது. இது அவரவர், தீர்மானிப்பது அல்ல. எல்லோருக்கும் பொதுவான ஒரு இடத்தில் கூடி, சூழ்நிலைகளைப் பற்றி விவாதித்து, சேர்ந்து ஒருமனதாக முடிவெடுப்பார்கள்.

வெளிநாடுகளுக்குச் சென்ற செட்டியார்கள் அனைவருமே, பழங்காலத்தைப் போன்று தனது

பெண்டு, பிள்ளைகளை அழைத்துக் கொண்டு குடும்பமாகச் செல்லவில்லை. எல்லோருமே, தனித் தனியாகத்தான் சென்றார்கள். சொல்லிக் கொண்டு, வாய்க்கரிசி வாங்கிக் கொண்டு, திரும்பி வருவோமோ, அல்லது வரமாட்டோமோ என்று தான் சென்றார்கள். செட்டிக் கப்பலுக்கு செந்தூரன் துணை, என்பதே தாரக மந்திரம். அதனால் தொழிலே முதல் என்று வாழ்ந்தார்கள். வந்த வருமானத்தில் ஒரு பகுதியைக் கோவிலுக்கும், நமது சமூகம் சார்ந்த ஊர்களின் சமூக முன்னேற்றத்திற்காகவும் செலவழித்து வந்தனர். செட்டியார்கள் கோட்டை கோட்டையாய் வீடு கட்டியதும் இந்தச் சமயத்தில் தான். பர்மா தேக்கு, இத்தாலியன் மார்பிள், ரங்கூன் மாப்பிள்ளை சீப்பு, கண்ணாடி, பீங்கான் அப்பப்பா..... எத்தனை.... எத்தனை.... சொல்லிக்கொண்டே செல்லலாம்.

பர்மா தேக்கு இந்தியா வந்த கதையே ஒரு சுவாரசியம் தான்..... ஐராவதி நதிப்பகுதியை வளமான விவசாயப் பகுதியாக மாற்ற வேண்டும். அப்பொழுது அங்கு இருந்த நல்ல தரமான தேக்கு மரங்கள் வெட்டி சாய்க்கப்பட்டன. நாம் அதை அப்படியே ஐராவதி நதியில் போட்டு, நதி கடலில் சேரும் இடத்தில் வந்து நாகப்பட்டினம் அல்லது தொண்டி செல்லும் கப்பலின் பின் பகுதியில் விலாசம் சேர்த்து அனுப்பி விடுவோம். கடலில் உள்ளே நீரோட்டம் என்று ஒன்று உண்டு. காற்றின் திசைக்கேற்ப வருடத்தில் சிலகாலம் ஒரே திசையை நோக்கிச் செல்லும். அந்தப் படகும் அவ்வாறே செல்லும். தண்ணீரில் செல்வதால், மரத்தின் கணம் படகை ஒன்றும் செய்யாது. மேலும், நீரோட்டத்தின் போக்கில் செல்வதால், சென்றடைய வேண்டிய இடத்தைச் சரியாகச் சென்றடையும். தமிழகம் வந்த பிறகு, அனுப்பியவரின் உறவினர் வந்து அதை எடுத்துச் சென்று, வீடுகளுக்கும், மரச் சாமான்கள் செய்யவும் உபயோகப்படுத்திக் கொண்டனர். அவ்வாறு வந்தது தான் இன்றைய செட்டிநாட்டுப் பகுதிகளில் உள்ளவை.

இவ்வாறு சென்று கொண்டிருந்த வேளையில் தான், எதிர்பார்க்காத மூன்று பெரிய விஷயங்கள் நம்மை ஆட்டம் கொள்ளச் செய்தன. ஒன்று, காலனியாதிக்கத்தில் இருந்த நாடுகளில் சுதந்திர வேட்கை பரவியது. எல்லா நாடுகளும் சுதந்திரம் கேட்டன. இரண்டாவது, 1925ல் பிரபலமான அன்றைய மெட்ராஸில் இருந்த செட்டியார் வங்கி திவாலானது. மூன்றாவது, பொருளாதார மந்த நிலை. அமெரிக்க நாட்டின் பங்குச்சந்தை வீழ்ச்சியின் காரணமாக ஒரு விதமான பொருளாதார மந்த நிலை 1929ல் அந்நாட்டில் தொடங்கியது.

சுதந்திர வேட்கையின் காரணமாக அந்தந்த நாட்டு மக்கள் வெளி நாட்டினர் அனைவரையுமே ஆதிக்கச் சக்தியாக பார்க்கத் துவங்கினர். மேலும், நம் இனத்தவர் அனைவருமே, மிகச் சிலரைத் தவிர, ஆண்கள் மட்டுமே வியாபாரத்திற்குச் செல்வதை வழக்கமாய் கொண்டிருந்தோம். குடும்பமாக வாழவில்லை. வரும் இலாபத்தையும் முழுவதுமாக, நமது ஊருக்கே கொண்டு சென்றோம். கோவில்களையும், சிறு சிறு தர்மங்களையும் தவிர நாம் அனைத்தையுமே நமது ஊருக்குக் கொண்டு வந்தோம். நமது ஊரில் தர்மங்களை நன்றாக எல்லோருக்கும் செய்தோம். ஆனால் பிழைக்கச் சென்ற இடத்தில் பெரிதாகச் செய்யவில்லை. இதனால் தானோ என்னோவோ, நம்மை ஆதிக்கச் சக்தியாகக் காணத் துவங்கி விட்டனர்.

1925ல் திவாலான வங்கியின் காரணமாக மேற்கத்திய வங்கிகள் செட்டியார்களுக்குக் கடன் கொடுப்பதை நிறுத்தின. வங்கி திவலானதற்கு நிறைய காரணங்கள் சொல்லப்பட்டன. மேற்கத்திய வங்கிகளும், இதற்கு ஒரு காரணம். இது நம்மேல் மற்றவர்களுக்கு இருந்த நம்பிக்கையை இழக்கச் செய்தது. ஆனால், இது நம்மைப் பெரிதாகத் தாக்கவில்லை. இலங்கையில் மட்டுமே இதனால் பாதிப்பு இருந்தது.

பொருளாதார மந்த நிலையால், பொருள்களின் விலைகள் சரிந்தன. ஏற்றுமதி குறைந்ததால் பொருள்கள் தேங்கின. கடன் வாங்கியவர்களால் கடன்களைத் திருப்பிச் செலுத்த முடியவில்லை. இதனால் கடனுக்கு ஈடாக கொடுத்த அசையும் மற்றும் அசையா சொத்துக்கள் எல்லாம் செட்டியார்கள் வசம் வந்தன. அதை விற்கவும் முடியவில்லை, அதை வைத்துக்கொண்டு என்ன செய்வது என்றும் தெரியவில்லை. ஏனென்றால் நாம் செய்ததோ நிதி சார்ந்த தொழில். நமது தேவையும் நிதி மட்டுமே. மேலும் நாம் வணிகம் செய்யத் தனியாக சென்றவர்கள். நாயர் (Nair,

2013) என்ற ஆராய்ச்சியாளரின் கருத்துப்படி, நமது முதலீடு பின்வரும் நாடுகளில்....

நாடு	முதலீடு
பர்மா	62.50 %
மலேயா – சிங்கப்பூர்	21.00 %
இலங்கை	11.50 %
மெட்ராஸ் மாகாணம்	00.80 %
மற்றவை	04.20 %
மொத்தம்	100.00 %

பர்மாவில் நமது முதலீடு 62.50 சதவீதம் என்றால் யோசித்துப் பாருங்கள். அந்த நாடே செட்டியார்களுடயது என்றே சொல்லலாம். கடனைத் திருப்பிச் செலுத்த முடியாத காரணத்தால் அந்தக் கடனுக்கு ஈடாக நிலங்கள் எல்லாம், செட்டியார்கள் வசம் வந்துவிட்டன. ஒரு சிலர் செட்டியார்கள் அநியாய வட்டி வாங்கியதாகவும் ஆடிக்குத் தை ஒரு வருடம் என்று கணக்கிட்டு வட்டி வாங்கியதாகவும் சொல்வார்கள். ஆனால் அது தவறு. எந்தவொரு ஆணைய அறிக்கையின் படியும் அது ஆவணப்படுத்தப்படவில்லை. ஒரு சிலர் 1930க்குப் பிறகு அதிக வட்டி வாங்கியதாகக் கூறப்படுகிறது. இது பொருளாதார மந்த நிலை யினால் வந்த வினை, மற்றும் நம்முடன் போட்டி போட இயலாத இயலாமையால் சீனர்கள் பர்மியர்கள் மனதில் தூவிய நச்சு விதை.

இதே சமயத்தில் தான் (1930) இந்தோ பர்மீஸ் கலவரம் மூண்டது. செட்டியார்களையும் அவர்கள் இந்தியர்களாகப் பார்த்தனர். அப்பொழுது நிறைய சட்டங்கள் இயற்றப்பட்டு நமது வணிகம் சுருக்கப்பட்டது. வட்டி மற்றும் கடன்கள், அரசாங்கம் நிர்ணயித்த விலைக்கே கொடுக்க வேண்டும். 1938 ஆம் வருடம், நன்றாக விளைகின்ற நிலங்கள் அனைத்தும் நமது பகுதிகளில் இருந்த போதும், புதிதாகக் கடன் வழங்க வழி இல்லை என்ற நிலை.

1932ல் இலங்கை அரசாங்கம் வருமான வரிச் சட்டத்தில் (Income Tax Ordinanace, 1932) பல்வேறு வரிகளைச் செட்டியார் வணிகத்தின் மீது கொண்டு வந்தனர். பணப்பரிமாற்ற சட்டத்தின் மூலம், பல்வேறு நிபந்தனைகளை விதித்து அந்த வணிகத்தையும் இலங்கை வங்கியின் கீழ் கொண்டு வந்தனர். அதனால் நிதி வணிகம் செய்ய இயலாத நிலைக்குத் தள்ளப்பட்டோம். செட்டியார்கள் இலங்கைக்குச் சென்றது வணிகம் செய்யவே தவிர அங்கு வீடு, வாசல் வாங்கிக் கொண்டு இருக்க வேண்டும் என்பதற்கு அல்ல. 1925 முதல் இந்தியாவில் இருந்து இலங்கைக்குச் சென்ற நிதி குறைந்து, இலங்கையில் இருந்து இந்தியாவிற்கு அதிக அளவில் கொண்டு வரப்பட்டது.

இதே காலகட்டத்தில் தான், காலனியாதிக்கத்தில் இருந்த எல்லா நாடுகளிலும், வங்கிப் பணிகளை ஆராய ஒரு ஆணையம் உருவாக்கப்பட்டது. அதன் பரிந்துரைகளின் பேரில் மத்திய வங்கிகள் உருவாக்கப்பட்டு, நிதி சம்பந்தமான அனைத்துப் பணிகளும் அதன் கீழ் சென்றன.

ஒரு சில ஆணையங்கள்

Madras Provicial Banking Committee Enquiry – 1929-30

Ceylon Banking Commission – 1934

Burma provincial Banking Enquiry – 1930 and so on.

இதையெல்லாம் தவிர, 1939 முதல் 1942 வரை நடந்த இரண்டாவது உலக யுத்த சமயத்தில் பர்மா காலனியாதிக்கத்திலிருந்து ஜப்பானின் கைக்குச் சென்றது. இந்தியர்கள் எல்லாம், கிடைத்ததை எடுத்துக் கொண்டு கால்நடையாகவோ, கால் நடைகளின் உதவியுடனோ திரும்பினர்.

ஆனால், மற்ற நாடுகளில் இருந்து நாம் அவ்வாறு வெளியேறவில்லை. நிதி சார்ந்த தொழிலில் வந்த சில நடைமுறைச் சிக்கலினால், நாம் அத்தொழிலைக் குறைத்துக் கொண்டு வேலைக்குச் செல்ல ஆரம்பித்தோம். மற்ற புதிய தொழில்களைத் தொடங்க ஆரம்பித்தோம். முருகப்பா குழுமம், செட்டிநாடு குழுமம் உள்ளிட்ட ஒரு சில செட்டியார்கள் இதை முன்பே கவனித்து, வெள்ளையர்கள் தங்கள் சொத்துகளை விற்பதை ஊன்றிக் கவனித்து, முன் ஜாக்கிரதையாக மற்ற நாடுகளில் புதிதாக முதலீடு செய்யாமல், அங்கிருந்து வரும் இலாபப் பணத்தை அப்படியே இந்தியாவில் முதலீடு செய்தனர்.

இவ்வாறு நாம் வர்த்தக சமூகத்திலிருந்து, நிதி சமுதாயமாக மாறி, இப்பொழுது அதிகமாக வேலைக்குச் செல்பவர்களாக மாறி விட்டோம். மீண்டும் நாம் ஒரு வர்த்தக சமுதாயமாக, கொண்டு விற்று வரும் சமூகமாக, புதிய சூழ்நிலைகளுக்கேற்ப தொழில் செய்யும் வர்க்கமாக மாற வேண்டும் என்பதே நம் குறிக்கோள்.

நன்றி : என்னுடைய எண்ணங்களும் நினைவில் கொள்ள வேண்டிய சில விசயங்களும்.... எனக் குறிப்பிட்டு https://e-vishali.blogspot.com என்ற வலைப்பூ தளத்தில் RM.S.விஸ்வநாதன் (rmsviswa@gmail.com) அவர்களின் பதிவு.

College of Nursing
Chettinad Academy
of Research and Education
(Deemed to be University)

ADMISSIONS OPEN 2021-22

COURSES OFFERED

B.Sc Nursing (4 year)
Post Basic B.Sc Nursing (2 year)
M.Sc Nursing (2 year)

KEY HIGHLIGHTS

- Approved by Indian Nursing Council & Tamil Nadu Nurses and Midwives Council
- Accredited with an "A" Grade by NAAC
- Experienced faculty members handpicked from various Govt. Institutions
- Clinical training at 1150 bedded in house hospital
- A clinical method of teaching with continuous hospital-academia interaction
- Well stocked library with a wide range of database and latest edition of books
- Placement assistance for eligible students
- World-class residential & recreational facilities

Merit Scholarship Available!

FOR ADMISSION CALL
+91 99412 04000
+91 99413 09000

Chettinad College of Nursing,
Chettinad Health City Campus,
Rajiv Gandhi Salai, (OMR),
Kelambakkam - 603 103,
Chengalpattu Dist., Tamil Nadu, India.

E principalccn@care.edu.in
W www.care.edu.in

பர்மாவில் இருந்து இந்தியாவிற்கு கால்நடைப் பயணம்

(நெற்குப்பை பெரி.சுப.விஸ்வநாதன் செட்டியார் டைரிக்குறிப்பிலிருந்து...)

நெற்குப்பை தியாகராசன்

பக்கோக்கூவில் சூழ்ந்த சஞ்சல மேகம்:

இரண்டு நாள் தங்கி பிரயாணக் களைப்பை மாற்றிக் கொண்டு 04.03.1942-ல் மாட்டு வண்டி ஏறி மீஞ்சான் ஆற்று கப்பல் இருக்கும் இடத்திற்கு வந்து கப்பலேறி சாயங்காலம் பக்கோக்கூவை அடைந்தோம். அங்கு M.S.PR. வீட்டில் தங்கினோம். தம்முவுக்குப் போக பஸ் ஒன்றுக்கு ரூ.1,500/- ஆக இரண்டு பஸ் பேசி அட்வான்ஸ் கொடுத்து வைத்துக் கொண்டு, ஆர்டர் வாங்க எவ்வளவோ முயற்சி செய்தும் வீணாக நாள் கழிந்ததே ஒழிய வேறொன்றும் பயனில்லை. சகாயின் கமிஷனருக்கு "ரெங்கோவிலிருந்து வந்த நாங்கள் அதிக கஷ்டப்படுகிறோம். இந்தியா செல்ல அனுமதி கொடுங்கள்" என்று செட்டியார் சங்கத்தின் பெயரால் தந்தி சொன்னோம். இரண்டு நாட்களுக்குப் பிறகு "அனுமதி கொடுக்க முடியாது பற்றி வருந்துகிறேன். பாதை திறக்கப்படும் தேதியை பக்கோக்கூ கமிஷனர் தெரி விப்பார்" என்று பதில் வந்தது.

எங்கள் பிரயாணம் எந்த வகையில் எப்போது முடியுமோ அல்லது முடிவே யில்லாது போய்விடுமோ என்று ஏங்கி யிருந்தோம். தினந்தோறும் இந்தியா செல்ல எண்ணிக்கையற்ற ஜனங்கள் வந்திறங்கிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் சொல்லிய செய்திகள் எங்களை திடுக்கிடச் செய்தன. தினம் புதுப்புது செய்திகளைக் கேட்டு திகிலடைந்தோம். சஞ்சல மேகத்தால் சூழப்பட்ட எங்கள் மனதில் மற்றவர்கள் பட்டுவந்த கஷ்டங்களைக் கேட்டு நாம் இவைகளுக்கெல்லாம் கொஞ்ச முந்திவிட்டோமென்ற நினைப்பு மின்னல் கோடுகள் போல தோன்றி ஆறுதலளித்தது. நாள் ஆக ஆக எப்படியாவது பக்கோகூவை விட்டுப் போய்விட வேண்டுமென்ற எண்ணம் எங்களை நிம்மதியின்றிச் செய்தது. பக்கோக்கூ மாநகர் வேலவனை ஆர்டர் கிடைக்க அருள்வாய் என்று தினமும் பிரார்த்தித்தோம். அபிஷேக ஆராதனை உபயங்கள் எல்லாம் செய்தோம். வடை, சுண்டல் கிடைத்ததைத் தவிர ஆர்டர் கிடைத்தபாடில்லை.

அன்றைய பர்மா

இந்திரஜாலம் செய்துவிட்ட இந்திரசிங்:

14.03.1942 பங்குனி மாதம் தற்செயலாக ஒரு மோட்டார் லாஞ்சு சொந்தக்காரர் பர்மியர் வந்து தன்னிடம் Evacuation பர்மிசன் இருப்பதாகவும் பின்னால் இரண்டு படகு கட்டி ஏற்பாடு செய்வதாகவும் ரூ.2,615 தரவேணுமென்றான், சரியென்றோம். நாளை எப்படியும் இவ்வூரை விட்டுப் போய்விடலாமென்று சந்தோஷமடைந்தோம். மறுநாள் வந்து மூன்று நாள் சென்றுதான் போகவேணுமென்றான். இதற்கிடையில் இந்திரசிங் என்னும் பஞ்சாபி ஒருவன்

ஆர்டர் வாங்கித் தருவதாகச் சொல்லி ரூ.200/- வாங்கிக் கொண்டு இந்திரஜாலம் செய்துவிட்டான். இரண்டு நாள் சென்றதும் உங்களதிர்ஷ்டம் ஆர்டர் கிடைக்கவில்லை. ரூ.100/- செலவாகி விட்டது என்று சொல்லிச் சென்று விட்டான். மீதி ரூ.100/-ஐ வாங்குவது பகீரதப் பிரயத்தனமாகிவிட்டது. அண்டி மோசம் செய்த இந்த பஞ்சாபியை நினைக்கும் போது நாம் பயங்கரமாய் நினைக்கும் அந்நிய பர்மியர் தேவலை என்று தோன்றுகிறது. அவன் எங்களை ஏமாற்றி எடுத்துக் கொண்டது

இன்றைய பர்மா

ரூ.100/-ரேயானாலும் பலவிதத்திலும் நொந்திருந்த மனதிற்கு வெந்த புண்ணில் வேல்பட்டது போலிருந்தது.

போட் பயணத்தில் எதிர்கொண்ட மண்வாரிப் புயல்:

19.03.1942, வியாழக்கிழமை போட் ஏறினோம். மோட்டார் போட்டின் பெயர் Satila. அன்று சில தகராறுகளால் Boat போகவில்லை. நாங்கள் எல்லோரும் காரில் போனால்தான் நல்லதென்று நினைத்தோம். எல்லோரும் போட்டிற்கு டிக்கட் வாங்கி விட்டதாலும், வேறு சில காரணங்களாலும் எல்லோரும் போக இணங்கவில்லை. சிலர் சேர்ந்து பிடித்திருந்த ஒரு காரில் இருவர் மாத்திரம் போக இணங்கிற்று. அதில் இரண்டு பெட்டிகளுடன் என் தகப்பனாரும் உலகம்பட்டி பழ.வும் பிரயாணப்பட்டார்கள்.

20.03.1942 பகல் 2.00 மணிக்கு படகு புறப்பட்டது. இரவு பக்கோகூவிலிருந்து 5-வது மைலில் அவுநேச்சாங் என்னும் சிற்றூருக்கு பக்கத்திலுள்ள மண் திடலில் தங்கினோம். மறுநாள் காலை 10.00 மணிக்கு புறப்பட்டு சாயங்காலம் 6.00 மணிக்கு சும்பியா என்னும் இடத்திலுள்ள மண்திட்டில் தங்கினோம். இரவு 8½ மணி. எல்லோரும் சமைத்துக் கொண்டிருந்தோம். திடீரென பெரும் புயல் கிளம்பிற்று. மண்மாரியோவென ஐயுறும்படி மண்ணை வாரியடித்தது. ஒரு நிமிஷம், இரண்டு நிமிஷத்தில் விட்டுவிடுமென்று நினைத்தோம். ஆனால், நிமிஷத்திற்கு நிமிஷம் அதிகரித்தது. புராணங்களிலே இதிகாசங்களிலே மண்மாரியைப் பற்றி கேள்விப்பட்டிருக்கிறோம். அதே மண்மாரிதான் பேய ஆரம்பித்து விட்டது என்று எண்ணினோம். எல்லோரும் நின்ற இடத்தில் நின்று கொண்டு, கடவுளை கூவியழைத்தோம். ஒவ்வொருவரும் தங்கள் இஷ்டதெய்வங்களை உயிர்ப்பிச்சை தரும்படி பிரார்த்தித்தனர். பயங்கர வெடிகுண்டிற்கும் பாவிப் பர்மியர்களின் வாள் வீச்சிற்கும் தப்பி வந்து அநாதையாய் இப்பொட்டலில் உயிரோடு சமாதி ஆகிவிடுவோமா என்று நினைக்கும் போது நெஞ்சு பிளந்துவிடும் போலிருந்தது. மறு நிமிஷம், 9.00 மணிக்கு எதிர்பாராது வந்த புயல் எதிர்பாராது நின்றுவிட்டது. நாங்கள் எல்லோரும் அளவிலா மகிழ்ச்சியடைந்தோம். மறுநாள் காலை 10.00 மணிக்கு புறப்பட்டு 4½ மணிக்கு ஜிங்யாவுக்கும் தம்பாலுக்கும் இடையில் உள்ள மண் திட்டிற்கு வந்து தங்கினோம்.

23.03.1942, திங்கள் காலை 6.00 மணிக்கு புறப்பட்டு 8.00 மணிக்கு ஒரு மண் திட்டிற்கு வந்து போட்டை நிறுத்தினான். காபி போட்டு சாப்பிட்டோம். அங்கிருந்து 10.00 மணிக்கு புறப்பட்டு 11½ மணிக்கு ஏத்தச்சோ வந்து நிறுத்தினான். சமையல் செய்து சாப்பிட்டோம். 2.00 மணிக்கு புறப்பட்டு 6.00 மணிக்கு மோஊ வந்தான். இதுதான் எங்கள் போட்டுகளை இழுத்து வந்த SATILA என்னும் மோட்டார் போட் சொந்தக்காரன் ஊர். இங்கு B.O.C. பெட்ரோல் Firefly என்னும் அண்டாப் போட்டில் எங்களோடு வந்த படகு ஒன்றைக் கட்டிவிட்டார்கள்.

மறுநாள் காலை 10.00 மணிக்கு புறப்பட்டு மாலை 5.00 மணிக்கு அம்மிங் என்னும் ஊருக்கு வந்து சேர்ந்து இரவு தங்கினோம். ஊர் ஓரத்தில் தங்கியிருந்ததால் அநேக பர்மியர்கள் வந்து பார்த்துச் சென்றார்கள்.

மிதந்து வந்த பிரேதங்கள்:

25.03.1942 - புதன் கிழமை காலை 6.00 மணிக்குப் புறப்பட்டோம். இடையில் மிதந்து வந்த அநேக பிரேதங்களைக் கண்டோம். அவைகளின் சிதைந்த உருவமும் கொடிய நாற்றமும் எங்கள்

மனதில் ஒருவித பீதியையும் கிளர்ச்சியையும் உண்டு பண்ணியது. 3.00 மணி சுமாருக்கு எங்கள் படகு மணியுவா வந்து சேர்ந்தது. போலீஸ் உத்தியோகஸ்தரில் சிலர் வந்து மணியுவா D.S.P. ஆர்டர் வாங்கினால்தான் போகலாமென்று படகை நிறுத்திவிட்டார்கள். படகுக்காரன் 3 படகுகளுக்கும் ரூ.50/- கொடுத்து அவர்களிடமிருந்து சமாளித்துக் கொண்டு 4 ½ மணிக்கு படகை விட்டு 6 மைல் தூரத்திலுள்ள ஓர் மண் திடலுக்கு இரவு 7.00 மணிக்குக் கொண்டு வந்து சேர்த்தான்.

மறுநாள் 26.03.1942 காலை 6.00 மணிக்கு புறப்பட்டு அல்லோன் வந்தது. இது கொஞ்சம் பெரிய ஊர். இங்குதான் B.R. கடேசி ரயில்வே ஸ்டேஷன் இருக்கிறது. இதற்கு அக்கரையிலுள்ள ச்சேசு என்னும் மிகச் சிறிய கிராமத்தில் காட்டிற்குள் 5 லட்சம் காலன்கள் பிடிக்கக்கூடிய பெட்ரோல் டாங்கு ஒன்று இருந்தது. அதன் தோற்றத்திலிருந்து மிகச் சமீபத்தில்தான் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதென்று தெரிந்து கொண்டோம். அந்த டேங்க் சுவேச் சேவுக்கு பக்கத்தில் இரண்டு ஒடுங்கிய மலைக்கு இடையில் வந்தது. இந்த மலைக்கு சுவேச் டேவுட் என்று பெயர். இது இயற்கை காட்சி மிகுந்த மண்மலை.

உ சிவமயம் ஸ்ரீராமஜெயம்
செட்டிநாடு வத்தல்கள் கிடைக்கும்
எங்களிடம் தேன்குழல் வத்தல், கிள்ளு வத்தல், கரண்டி வத்தல், சின்ன வெங்காய வடகம் (கரிவடகம்), பிரண்ட (முறுக்கு வத்தல்), கத்திரி வத்தல், மாவத்தல், அவரை வத்தல், கேப்பை வத்தல் அனைத்து வகை வத்தல்களும் இட்லிபொடி, கவுனி அரிசி, வேங்கரிசி மாவு, உப்புக் கண்டம் மற்றும் தடுக்கில் பின்னிய நடுவீட்டுக் கோலம் கிடைக்கும்.
தொடர்பிற்கு: லட்சுமி மணிகண்டன், காரைக்குடி
8508392087 / 8778527165 / 8760742590
ADVT

கணவாயின் இரு பக்கத்திலும் தண்ணீர் அடித்து அடித்து அரித்திருப்பது ஒரு பாழடைந்த, இந்திய பழங்கால சித்திர வேலைப்பாடமைந்த கோவில் மண்டபம் போலத் தோன்றிற்று. இந்தப் பகுதியில் தென்னை, பனை அதிகம். பல மண் மலைத் தொடர்கள் காணப்பட்டன. கரையோரமாய் தந்திக் கம்பிகள் இருந்தன. 6.00 மணிக்கு கன்னிமியோ என்னும் ஊருக்கு வந்து சேர்ந்தோம். ஆற்றங்கரையிலுள்ள மண்மேட்டில் தங்கினோம். இவ்வூர் மலையடிவாரத்திலிருக்கிறது. இயற்கை எழில் மிகுந்தது. இதன் தோற்றத்திலிருந்து வசிப்பதற்கு மிகவும் சவுகரியமான ஊர் என அறிந்தோம்.

(தொடரும்)

மனம் பணம் மந்திரம் 15

செல்வம் சேர 10 விதிகள்

பெரி.முத்துராமன்

விதி 6 இல் உங்கள் சொத்து மதிப்பு என்ன என்று மாதம் தோறும் கணக்குப் பார்த்தலே சிறந்தது ஆகும் என்று சொல்லி இருந்தோம் அல்லவா?

முதலில் ஏன் என்ற கேள்விக்கு பதில் அளிப்போம்.

இத்தகைய ஒரு பயிற்சியும் முயற்சியும் உங்களை அறியாமலேயே உங்களுக்குள் ஒரு சேமிப்பு மனப்பான்மையை தோற்றுவிக்கும். செலவைக் கட்டுப்படுத்தச் செய்யும். சிந்தித்து செயல்படச் செய்யும். கிரெடிட் கார்டு உள்பட, பலவற்றிற்கும் செலுத்த வேண்டிய மாதாந்திர, காலாண்டு, அரையாண்டு, வருட கட்டணங்களை கட்டுவதற்கும் திட்டமிடுவதற்கும் இந்தப் பயிற்சியும் முயற்சியும் வெகுவாக உதவும். இதற்கான ஒரு மாதிரி இங்கே தரப்பட்டுள்ளது.

முதலில் உங்கள் சம்பளம் அல்லது வருவாய், வங்கிக் கணக்கில் வரவு வைக்கப் படுகிறது என்று வைத்துக் கொள்வோம். அதனடிப்படையில், ஒவ்வொரு செலவையும் திட்டமிட்டு, எதிர்கொண்டு வங்கியில் இருந்து எடுத்து செலவு செய்தபின் மாதந்தோறும் ஒரு தொகை சேமிக்கப்படுவதாக கொள்கிறோம். சம்பளம் தவிர, மற்ற வரவுகள் இருந்தால், அவற்றையும் வருமானத்துடன் சேர்த்துக் கொள்ள வேண்டும். இப்போது, அதற்கான கணக்கீடு முறையைப் பார்ப்போம்.

1.பணப் பாய்வு (cash flow) - **ஒரு மாதிரி** (sample)

எல்லா வருமானங்களும் ரூபாய் 50,000 என்போம்.

(ஒவ்வொன்றாக எல்லா வரவுகளையும் எழுதி கூட்டவும்) எல்லா செலவுகளும் ரூபாய் 45,000 என்போம் (ஒவ்வொன்றாக எல்லா செலவு களையும் எழுதி கூட்டவும்)

இப்போது சேமிப்பு அல்லது நேர் மறை பணப் பாய்வு அல்லது பணப்புழக்கம் ரூபாய் 5000.

செலவை திட்டமிட்டே செய்ய வேண்டும். எவ்வாறு திட்டமிட வேண்டும் என்று நாம் இங்கே குறிப்பிடவில்லை.

2. சொத்துக்களின் நிகர மதிப்பு (Net worth) **ஒரு மாதிரி** (Sample)

மொத்த சொத்துக்களின் மதிப்பு (ஒவ்வொரு சொத்தாக எழுதி கூட்டவும்) ரூபாய் 1,00,00,000 (வாங்கிய விலை அல்லது சந்தை மதிப்பில் 10% குறைய எது அதிகமோ, அதை சொத்து மதிப்பாக கொள்ளவும்) அந்த சொத்துக்களின் மேல் உள்ள கடன்களும், பிற கடன்களும் ரூபாய் 80,00,000

இந்த மாத நேர்மறை பணப்புழக்க ரூபாய் (அல்லது சேமிப்பு) ரூ 5000 (மேலே கொடுத்துள்ள மாதிரி ஒன்றின் அடிப்படையில்) இந்த ரூபாய்

5000 ஏற்கனவே வங்கி கணக்கில் சொத்தாக மதிப்பிடப்பட்டிருந்தால், மறுபடியும் ஒருமுறை மதிப்பில் சேர்க்க வேண்டிய அவசியமில்லை.

ஆக, நிகர சொத்து மதிப்பு ரூபாய் 20,05,000

உங்கள் சொத்து என்பது உங்கள் வீடு, பங்குச் சந்தையில் உங்கள் முதலீடுகள், வங்கியில் உள்ள சேமிப்பு, கையில் உள்ள ரொக்கம், தங்கம், வெள்ளி, முதலியவற்றில் முதலீடு செய்திருந்தால் அவற்றின் மதிப்பு போன்றவற்றை உள்ளடக்கிய தாக இருக்கும்.

உங்கள் கடன் என்பது, வீட்டுக் கடன், வாகனக் கடன், அசையும் சொத்துக்களின் மேல் உள்ள கடன், அசையாச் சொத்துக்களின் மேல் உள்ள கடன், நகைக்கடன், கிரெடிட் கார்டு பாக்கி, செலுத்தப் படாமல் பாக்கி இருக்கும் வரி போன்றவை கடன் வரிசையில் அடங்கும்.

சொத்து, கடனை விட கூடுதலாக இருக்க வேண்டும். அப்போதுதான் நிகர மதிப்பு இருக்க முடியும். ஒரு மதிப்புள்ள மனிதனாக அப்போது தான் புவியில் வலம் வரமுடியும். இல்லையா?

நேர்மறை பண வரவு அல்லது புழக்கம் என்பது ஒரு சொத்து. அது சொத்து மதிப்பை அதிகரிக்கச் செய்யும். எதிர்மறை பணப்புழக்கம் அல்லது மாதாமாதம் பற்றாக்குறை என்பது ஒரு பெரும் சுமை, அழுத்தத்தைத் தரும் கடன் சுமை. அது சொத்து மதிப்பை குறைவடையச் செய்யும்.

சிறுகச் சிறுக வரும் மாதாந்திர சேமிப்புகளை உழைப்பில்லாமல் வருவாய் தரும் சொத்தாக மாற்றிட வேண்டும். அதற்கு கொஞ்சம் அறிவும், அதனுடன் தொடர்புடைய நல்லோர் தொடர்பும் வேண்டும். உறுதியான, ஒருங்கிணைந்த எண்ணம், அத்தகைய அறிவையும் தொடர்பையும் கூட பெற்றுத்தரும். இது, நாம் முன்னரே மனம் பகுதியில் பார்த்ததுதான். மறந்து போயிருந்தால் அவற்றை மீண்டும் படித்துப் பார்த்துக் கொள்ளுங்கள்.

இவ்வாறு சிறுகச் சிறுக வரும் பண சேமிப்பை, ஆராய்ந்து முதலீடு செய்யும்போது, பணவீக்கமும் உதவி செய்ய, நாளடைவில் சொத்து மதிப்பு வேகமாக உயரக் காணலாம்.

இவ்வாறு நீங்கள் பொறுமையாக ஆனால் உறுதியாக செயல்படும்போது, உங்கள் சொத்து நாளடைவில் வேகமாக வளரக் காண்பீர்கள்

உங்கள் மாத சொத்து மதிப்பு அட்டவணை அல்லது வளைத்தாள் உங்களை சரியான பாதையில் செல்ல உற்சாகப்படுத்தும்; ஊக்குவிக்கும்.

உங்கள் சொத்து மதிப்பு என்பது உங்கள் வருவாயில் அல்ல; அதாவது உங்கள் வருமானம் அல்லது சம்பளம் எவ்வளவு என்பதில் அல்ல. அது நீங்கள் சேர்த்த சொத்துக்களின் மதிப்பின் அடிப்படையிலேயே இருக்கிறது.

இன்னும் நாம் பார்க்க இருப்பது

விதி 7: மகிழ்வான வாழ்வு ... இது மக்களுடன் எவ்வாறு பழகுகிறோம் என்பதில் இருந்தே பிறக்கின்றது. யார் அந்த மக்கள்? பார்ப்போம் அடுத்த இதழில்.

விதி 8: இமைப்பொழுதும் நீங்காதது " ரிஸ்க்" தான். இதை எப்படி சொல்லலாம்? ஆபத்து எனலாமா! எதிலும் ரிஸ்க்; எப்போதும் ரிஸ்க் இதுதான் வாழ்வியல். இதை எப்படிக் கையாள்வது? என் நெஞ்சில் நீங்காத இறைவனை நிறைத்து, நினைந்து எப்போதும் வணங்குகிறேன் என்பார் மாணிக்கவாசகர். நடைமுறை வாழ்வில் நாம் கைக்கொள்ள வேண்டியது என்ன? பார்ப்போம்.

விதி 9: உணர்வே வாழ்வு; எண்ணமே வாழ்வு; எண்ணம் போல் வாழ்வு. அந்த உணர்வுதான் உலகியலுக்கும், அதற்கப்பாலும் வழிகாட்டியாகத் திகழ்கிறது. நம் உணர்வும் எண்ணமும் எத்தகைய தாக இருக்கவேண்டும்? பார்ப்போம்.

விதி 10: தீர்வு இல்லா பிரச்சனை உண்டோ? கற்பனையை தீர்வு ஆக்குங்கள்; கற்பனையே கலக்கம் தரக்கூடாது. அதுதான் விதி 10.

சரி, இப்போது கேள்வி நேரம் வந்து விட்டது. இதோ உங்களுக்கான கேள்வி: நீங்கள் எப்போதாவது உங்கள் சொத்து மதிப்பை இதுபோல கணக்கு பார்த்தது உண்டா?

ஏன் இப்போது கணக்கு பார்க்க கூடாது? இப்படி யாராவது பார்ப்பார்களா என்கிறீர்களா? 'ஆம்' என்று சொல்லும் முதல் ஆளாக நான் இருக்கிறேன். நீங்களும் முயற்சி செய்யுங்களேன். பலன்கள் பல; சிலவற்றை சொல்லி தெரிந்து கொள்வதை விட, செய்து பார்த்து அனுபவிக்க வேண்டும். என்ன தயாரா? (வளரும்)

வாழ்த்துகிறோம்

காரைக்குடி தொழில் வணிகக் கழக முன்னாள் தலைவர் முத்து. பழநியப்பன் தென்னக இரயில்வே மண்டல உபயோகிப்பாளர் ஆலோசனைக் குழு (ZRUCC) உறுப்பினராக 01.02.2021 – 31,01,2023 ஆண்டுகளுக்கு நியமிக்கப் பெற்றுள்ளார். அவரது பணி சிறக்க வாழ்த்துக்கள்.

வெற்றிக்கு உதவும் 25 'ஆக்சிலேட்டர்' உத்திகள்! 3

SELL YOURSELF FIRST

இராம்குமார் சிங்காரம்

தலைப்பைப் பார்த்துக் குழம்புகிறீர்களா? இந்த வாக்கியத்தின் தமிழாக்கம், நீங்கள் நினைப்பது போல "உங்களை முதலில் விற்பனை செய்யுங்கள்" என்பது அல்ல. நீங்கள் விற்பனையாளராக இருந்தால், "உங்களின் மீதான நம்பிக்கையை முதலில் ஏற்படுத்துங்கள்" என்பதுதான்.

ஜிக் ஜிக்ளர் (ZIG ZIGLAR) என்ற மிகப்பெரிய சர்வதேச விற்பனை பயிற்சியாளர் சொல்கிற உத்தி இது...

பொதுவாக மக்கள் பொருட்களை வாங்கும் போது அந்தப் பொருட்களின் நன்மைகளை மட்டுமே பார்ப்பதில்லை. விற்பவரின் தன்மையையும் பார்க்கிறார்களாம். இதன் அடிப்படையிலேயே இந்த உத்தி உருவாகியிருக்கிறது.

சரி... சற்று விரிவாகப் பார்ப்போம்!

• நீங்கள் ஒரு விற்பனையாளர் என்றால், முதலில் பிறர் உங்களை நம்பும் வகையில், உங்களை மாற்றிக் கொள்ள வேண்டும்.

• சிரித்த முகத்தோடு செல்ல வேண்டும்; ஒழுங்காக உடை அணிந்திருக்க வேண்டும்; மென்மையாகப் பேச வேண்டும்; இவை அனைத்துக்கும் மேலாக நீங்கள் பேசுகிற போது உங்கள் துறை சார்ந்த சகல புள்ளி விவரங்களையும் அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டும். அது உங்களை அத்துறை சார்ந்த அறிவாளியாகக் காண்பிக்கும்.

• உங்களுடைய பேச்சில் நேர்மையும், உண்மைத் தன்மையும் இருத்தல் மிக மிக அவசியம். 'பணம் முக்கியமா, மனிதர்கள் முக்கியமா?' என்ற கேள்விக்கு 'மனிதர்கள் தான் முக்கியம்' என்று நீங்கள் பொருள் கொள்ள வேண்டும்.

• பணத்துக்காக நாம் வர்த்தகம் புரிந்தாலும் கூட, பிறரை ஏமாற்றும் நோக்கில் அந்த வர்த்தகம் அமைந்து விடக் கூடாது. அதுதான் 'உங்களின் மீதான நம்பிக்கையை முதலில் ஏற்படுத்த வேண்டும்' என்ற சொல்லுக்கான உண்மையான அர்த்தம்.

• மக்கள் பொதுவாக பொருள்களை வாங்கும் போது பொருள்களை விற்பனை செய்கிற மனிதர்களின் தன்மையையும் பார்க்கிறார்கள். சில நேரங்களில் அந்தப் பொருள்கள் அவர்களுக்கு தேவையே இல்லை என்றாலும் கூட அதை விற்கும் நபர், சிறந்த நபராக இருந்தால் அவருக்காக பொருள்களை வாங்குகிற தன்மை மக்களிடையே இருக்கிறது என்கிறார் ஜிக் ஜிக்ளர்.

• அடுத்ததாக, பொருள்களை தங்கள் மீது திணிப்பதை மக்கள் ஒருபோதும் விரும்புவதில்லையாம். எனவே, நீங்கள் பொருள்களை விற்பனை செய்கிற போது குறிப்பாக, இன்சூரன்ஸ், நெட்வொர்க் மார்க்கெட்டிங் போன்றவற்றின் போது மக்களிடம், "எனக்காக வாங்கிக் கொள்ளுங்கள்" என்றெல்லாம் அழுத்தம் கொடுக்காதீர்கள். அது உங்களுடைய உறவையும் பாதிக்கும்; நட்பையும் போக்கும்.

* அவர்களே உங்களுக்கு உதவ வேண்டும் என்று எப்போதும் எதிர்பார்க்காதீர்கள். அவர்கள் இலக்கை எட்ட நீங்கள் உதவினால் அவர்களும் உங்கள் பொருளை வாங்கிக் கொள்ள உதவுவார்கள். வியாபாரம் என்பது கொடுக்கல்–வாங்கல் உத்திதான்... ஒரு வழிப் பாதை அல்ல!

* குறிப்பாக நீங்கள் பொருள்களை விற்பனை செய்கிற போது, அவர்கள் பேசுவதை உன்னிப்பாகக் காது கொடுத்துக் கேளுங்கள். அவர்களது தேவைக்கு

மதிப்பு அளியுங்கள். வாதம் செய்யாதீர்கள். எதிர்த்து பேசாதீர்கள். அவர்களுக்கு வேறு எந்த வகையிலாவது நாம் உதவ முடியுமா என்று யோசியுங்கள். அப்படிச் செய்தால் பொருள்கள் தானாக விற்பனையாகும்.

* ஜிக் ஜிக்ளர் சொல்கிற இன்னொரு விஷயம்.... "மக்கள் பொருள்களை அதன் பலன்களுக்காக மட்டுமே வாங்குவதில்லை. கௌரவத்துக்காகவும் வாங்குகிறார்கள்" என்பதுதான். உதாரணத்துக்கு, ஒரு கார் தேவைப்படுகிறது என்றால் விலை குறைவான கார் வாங்கலாம். ஆனால் பெரும் பாலானோர் விலை அதிகமான கார் வாங்குகிறார்கள். காரணம், பொதுவெளியில் அவர்களுக்கு அது ஒரு மதிப்பைத் தருகிறது. கௌரவத்தைத் தருகிறது.

* ஆக, பொருள்களை விற்கும் போது மதிப்பு, சந்தோஷம், உற்சாகம் போன்ற உணர்வுகளை இந்தப் பொருள்கள் ஏற்படுத்தும் என்பதையும் சொல்லி விற்பனையை நீங்கள் அதிகரிக்கலாம்.

ஆக நீங்கள் புரிந்துகொள்ள வேண்டியது என்னவென்றால், விற்பனைக்கு அடிப்படை உங்கள் மீதான நம்பிக்கையை ஏற்படுத்துவதே.

ஆம்! SELL YOURSELF FIRST!

(உத்திகள் தொடரும்)

நமது இதழில் 'ஆரோக்கியம் தரும் அறுசுவை உணவு' தொடரை எழுதி வரும், காரைக்குடியைச் சேர்ந்த அ.நா.முத்தையா செட்டியார் – மு. ஜானகி ஆச்சியின் மகள் செல்வி வள்ளியம்மை (வள்ளி முத்தையா), பொன் புதுப்பட்டி சி.இராமநாதன் செட்டியார் – இராம. கவிதா ஆச்சியின் மகன் இராம.வீரப்பன் என்ற விக்னேஷ் இவர்களின் திருமணம் 4-6-2021 அன்று காரைக்குடியில் சிறப்பாக நடைபெற்றது. வாழிய மணமக்கள்!

குறள் பாட்டு 18

குழந்தைக் கவிஞர் செல்லகணபதி

73. அன்போடு இயைந்த வழக்கென்ப ஆருயிர்க்கு
என்போடு இயைந்த தொடர்பு.

நம்உடல் தன்னுடன் நம்முயிர் இணைந்தது
நல்லதைச் செய்துநாம் அன்பை வளர்க்கவே
தம்உயிர் தன்உடல் தான்எனும் சுயநலம்
தவிர்க்கவே நம்உடல் பொன்னுயிர் பெற்றது
பொன்னுயிர் பெற்றநாம் பூவுல கத்தினை
போற்றுவோம் அன்பினால் பிறர்துயர் விலக்குவோம்
இன்பம் என்பது எல்லார்க் கும்தான்
என்பதை உணர்ந்து பிறர்நலம் பேணுவோம்.

74. அன்புஈனும் ஆர்வம் உடைமை அதுஈனும்
நண்புஎன்னும் நாடாச் சிறப்பு.

அன்பு பிறர்தம் நல்லதைக் கெட்டதை
அறிந்து உதவ ஆர்வம் நல்கிடும்
அன்பின் ஆர்வம் புதிய நட்பினை
ஆக்கும் வாழ்வில் மேன்மையைக் கொடுக்கும்
நட்பெனும் வலிமையால் மனம்பெறும் திட்பம்
நல்ல உறவுகள் நட்பினால் வளரும்
முட்டி முன்வரும் அன்பினைக் கொள்வோம்
முனைந்து பிறர்துயர் துடைக்குமே அன்புதான்.

75. அன்புற்று அமர்ந்த வழக்கென்ப வையகத்து
இன்புற்றார் எய்தும் சிறப்பு.

இன்பமாய் ஒருவர் வாழ்கிறார் என்றால்
இதயப் பூர்வமாய் அன்பைப் பகிர்ந்ததால்
அன்பால் விரிந்த அரவணைப் பால்தான்
ஆனந்த வாழ்க்கை இயல்பா யிற்று.
அன்பை பொழிபவர் தம்மிடம் இன்பம்
அவர்தே டாமல் காலடி கிடக்கும்
அன்பு செய்பவர் இன்பமாய் வாழ்வார்
அதுதான் நியதி அனுபவித்து அறிவோம்.

76. அறத்திற்கே அன்புசார்பு என்ப அறியார்
மறத்திற்கும் அஃதே துணை.

நல்லதை வளர்த்து நயம்படப் பழகும்
நாகரி கத்தைத் தருவது அன்புதான்
நல்லவை நடக்க மட்டுமா அன்பு
நடக்கிற தீங்கினை அழிக்கவும் அன்புதான்
நல்லதை வளர்ப்பது அன்பெனில் தீயதை
நசுக்கி அழிப்பதும் அன்பெனும் உணர்வுதான்
வல்லமை மிக்க அன்பெனும் ஆயுதம்
மக்களை இணைத்து ஒற்றுமை வளர்க்கும்.

டாக்டர்
சோம வள்ளியப்பன்

இது ஒரு ஆங்கிலச் சொல். பெரும்பாலானவர்களுக்கு இதன் அர்த்தம் தெரிந்திருக்கும். கிரிக்கெட் விளையாட்டில் ஒரு மட்டையாளர் பந்தை அடித்து, அது தரையில் படாமல் எல்லைக்கோடான பவுண்டரிக்கு வெளியே போய் விழுந்தால், அவர் அடித்ததன் பெயர், சிக்ஸர். அவர் ஆறு ஓட்டங்கள் எடுத்தார் என்று கணக்கிடப்படும்.

யுவராஜ் சிங், ரவி சாஸ்திரி, கிப்ஸ் போன்ற சில ஆட்டக்காரர்கள் தொடர்ந்து மூன்று பந்துவீச்சுகளில் தொடர்ந்து அடிக்கும் 'ஹாட்ரிக் சிக்ஸ்' மட்டுமல்ல. ஒரு ஓவரின் ஆறு பந்து வீச்சுக்களையும் ஒன்று விடாமல் தொடர்ந்து, பளார் பளாரென்று சிக்சராக விளாசி அசத்தியிருக்கிறார்கள். பேட், பந்து என பலவும் முன்னேற்றம் கண்டிருக்கும் இன்று நேற்றல்ல. அரை நூற்றாண்டுக்கு முன்னால், 1968–லேயே மேற்கிந்திய தீவுகளின் கேரி சோபர்ஸ் அனாயசமாக ஒரு ஓவரில் 6 சிக்சர்கள் அடித்து, இது சாத்தியமே என ஆரம்பித்து வைத்திருக்கிறார்.

கிரிக்கெட் பழக்கம் இல்லாதவர்களுக்காகச் சொல்கிறேன். எல்லா பேட்ஸ்மேன்களாலும் சிக்ஸர் அடிக்க முடியாது. சிக்ஸர் அடிக்கப் போய் அவுட் ஆகிறவர்கள் பலர். இதில் சிறந்த பேட்ஸ்மென்களும் விதிவிலக்கல்ல.

கோவிட்–19 ஊரடங்கு, தளர்வுகளற்ற ஊரடங்கு என்று தொழில், வியாபாரம், வேலை வாய்ப்புகள், வருமானம் என பலவும் முடங்கி கிடக்கும் நேரத்தில் அதென்ன சிக்ஸர். அவனவன் ஒன்றிரெண்டு ரன்கள் கூட எடுக்க முடியாதது மட்டுமல்ல. விக்கெட்டை பறிகொடுத்து 'அவுட்' ஆகாமல் இருந்தாலே போதும் என்று ஆடிக்கொண்டிருக்கையில் சிக்ஸரா? என்ற உங்கள் உள்மனப் பேச்சு (மைண்ட் வாய்ஸ்) என் காதில் விழுகிறது.

2020–21–ம் நிதி ஆண்டில் இந்தியப் பொருளாதாரம் வளர்ச்சி காணவில்லை. ஜிடிபி மைனஸ் 7%. விழ்ச்சிதான். காரணம், அடுத்தடுத்து வந்த இரண்டு கொரோனா அலைகள். அவற்றைத் தொடர்ந்த ஊரடங்குகள்.

அதே சமயம், இரண்டு அலைகளிலும் பலரும் வீடுகளில் முடங்கிக் கிடக்க, சிலர் மட்டும் 'ஓவர் டைம்' வேலை செய்திருக்கிறார்கள் என்பதை அறிந்தால் நமக்கு ஆச்சர்யம் ஏற்படும்.

மருத்துவமனைகள், ஆம்புலன்ஸ்சுகள், மருந்தகங்கள் மட்டுமல்ல சில அரசுத்துறை ஊழியர்கள், ஊடகங்கள், தொலைத் தொடர்பு நிறுவனங்கள், உணவகங்கள் மட்டுமல்ல. விவசாயம், சில உற்பத்தி நிறுவனங்கள் போல அதிகம் பாதிக்கப்படாத, தொடர்ந்து வேலை செய்த துறைகள் உண்டு. அவற்றையெல்லாம் தாண்டி இந்த கொரோனா காலகட்டத்தில் முந்தைய இயல்பான காலகட்டத்தையும்விட மிக அதிக அளவில் வியாபாரம் ஆனது மருத்துவக் காப்பீட்டு பாலிசிகள் என்பது தெரியுமா? மருத்துவக் காப்பீட்டின் தேவையை மக்களுக்கு கோவிட் 19 உணர வைத்திருக்கிறது.

இந்தக் காலகட்டத்தில் மற்ற எந்தத் துறையையும் விட மருத்துவ காப்பீட்டு திட்டங்களில் விற்பனை சதவிகிதம் மிக அதிகம் என்பதை புள்ளி விவரங்கள் காட்டுகின்றன கிட்டத்தட்ட 45 விழுக்காடு வளர்ச்சி.

சரி, அவர்கள் துறையில் கொரோனா காலத்தில் ஏற்கனவே

சிறப்பான விற்பனை நடக்கிறது. அப்படிப்பட்ட துறையில் இருப்பவர்களிடம் ஏன் சிக்ஸர் அடியுங்கள் என்று சொல்ல வேண்டும்?

மேடைப் பேச்சு, விவாதம், அலுவல் இடத்து உரையாடல், வாடிக்கையாளர்களிடத்து பேரம், குறும்படம் எடுப்பது, சமையல் போட்டி என்பது போல ஏதோ ஒன்று. நமக்கு ஒரு வாய்ப்பு கிடைக்கிறது. நாம் செயல்படுகிறோம். அடுத்து ஒருவர் வந்து அதே வாய்ப்பில் நம்மை காட்டிலும் பல மடங்கு பிரமாதமாக செய்து முடிக்கிறார். 'அட! இந்த வாய்ப்பில் இவ்வளவும் முடியுமா? தவற விட்டுவிட்டோமே!!' என்கிற வருத்தம் வருமா, இல்லையா?

அதுபோல ஊரடங்கு முடிந்த பிறகு, புள்ளி விவரங்கள் தெரிய வரும்போது, அந்த நிறுவனத்தின் விற்பனையாளர்கள் அப்படி வருத்தப்படக் கூடாது.

'அதுதான், இந்த நேரம் தானாக, கூடுதல் விற்பனை நடக்கிறதே! பிறகென்ன!!' என்று அதிகம் சிரமப்படாமல் கிடைப்பதை மகிழ்ச்சியாக ஏற்றுக் கொண்டு சாய்ந்து உட்கார்ந்து விடாதீர்கள். வாழ்நாளில் எப்போதாவது கிடைக்கிற ஒரு அற்புதமான வாய்ப்பு. இந்த நேரம் உங்களுக்குக் கிடைத்திருக்கிறது. கேரம் விளையாட்டில் ஸ்டிக்கரை லேசாகத் தட்டினாலே 'காயின்'கள் 'பாக்கெட்' ஆவது போன்ற நேரம். எதிர்ப்பக்கம், பக்கவாட்டில், வலதுபக்க பின்புறம், இடது ஓரம் என நான்கு பக்கத்து 'பாக்கெட்டு'களிலும் சடக் சடக்கென காயின்கள் போடும் வாய்ப்பு இருக்கும் நேரம். தவற விடக்கூடாது. நீங்கள் உங்கள் விற்பனையில் சிக்சர்கள் அடிக்கக் கூடிய வாய்ப்பு உள்ள நேரம், தவற விடாமல் விற்பனையில் சிக்சர்கள் அடியுங்கள். இது நீங்கள் ஸ்கோர் செய்ய வேண்டிய நேரம்.

பல லட்சங்கள் செலவு செய்து உயிரைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டிய தேவை எப்போதாவது வரலாம் என்பதை மக்கள் உணர்ந்திருக்கும் இது போன்ற சமயங்களில் மருத்துவ காப்பீடுகள் உதவும் என்று புரிந்து கொண்டிருக்கிறார்கள். சிலரிடம் கையில் பணமும் இருக்கிறது. இந்த மனநிலையும் வாங்கும் நோக்கமும் இன்னும் சில மாதங்கள்தான் இருக்கும். இயல்பு வாழ்க்கைக்கு மீண்டதும் இனி தேவை யில்லை என்ற மனநிலைக்குப் போய்விடுவார்கள்.

பலருக்கும் வியாபாரம் இல்லாத இந்த கால கட்டத்தில் அவர்களுக்கு வாய்ப்பு வந்திருக்கிறது. அவர்கள் எப்போதும் செய்யும் விற்பனை, சிறப்பாக நடக்கக்கூடிய காலம். அவர்களுக்கு மட்டுமல்ல.

ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் கேரியரிலும், வியாபார பயணத்திலும் இப்படித்தான் சில சரியான நேரங்கள் வரும். சூழ்நிலை, மக்கள் மனநிலை, கிடைக்கும் உதவி என்று பலவும் அந்த நேரம் சரியாக அமையும், கையில் மட்டையுடன் களத்தில் நிற்கும் நபர் அடிக்க வேண்டியதுதான், அவர் அடிக்க வேண்டியது, 1 அல்லது 2 அல்லது பவுண்டரி எனப்படும் 4 அல்ல. ஒரேயடியாக சிக்ஸர்கள்தான்.

விளையாட்டு வீரர்கள், திரைக் கலைஞர்கள், தொழில் முனைவோர், பல்துறை வித்தகர்கள், எழுத்தாளர்கள், பதிப்பாளர்கள் என எவர் வாழ்க்கை யிலும் ஒரு வாய்ப்பான காலம் வரவே செய்யும். அதை சரியாக கவனிக்க, கணிக்க, பயன்படுத்திக் கொண்டு விட வேண்டும். தவற விடக்கூடாது.

பெரும் சாதனையாளர்களான கமல், ரஜினி, எம்.எஸ். விஸ்வநாதன், இளையராஜா, ஏ.ஆர்.ரகுமான் என பலரும், சாப்பிட, தூங்க நேரமில்லாமல் இரவு பகலாக வேலை செய்த காலகட்டங்கள் இருந்திருக்கின்றன. முற்றுகையிட்ட வாய்ப்புகள். அவர்களுக்கே இப்போது அவ்வளவு வாய்ப்புகள் இருப்பதாக சொல்ல முடியாது.

1990–களில் பிரபல திரைப்பட நகைச்சுவை நடிகர் ஒருவர் ஆண்டொன்றுக்கு 15 முதல் 20 வரை திரைப்படங்களில் நடித்தார் என்பார்கள். மகா நடிகன், திறமைசாலி. அவருக்கு இன்னமும் வயதும் ஆரோக்கியமும் இருக்கிறது. தமிழில் எடுக்கப்படும் திரைப்படங்கள் எண்ணிக்கைக்கும் குறைவில்லை. ஆனால், அவர் நடித்து வெளிவரும் புதுப்படங்கள் எத்தனை? ஒன்று இரண்டு கூட இல்லையே!

உங்களுக்கு வாய்ப்பிருக்கும் நேரமா? வீணாக்காதீர்கள். நழுவ விடாதீர்கள். மட்டையை உயர்த்தி அடியுங்கள். தொடர்ந்து சுழற்றுங்கள். தேவை சிக்ஸர்கள். ■

எந்தக் கணவனும் கதாநாயகன் அல்லன்!

லேனா தமிழ்வாணன்

அந்தக் காலத்தில் அட்சய பாத்திரம் என்று ஒன்று இருந்ததாம். இதைப்பற்றி சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற காப்பியங்களில் குறிப்புகள் உள்ளன. இந்தப் பாத்திரத்திலிருந்து உணவை எடுக்க எடுக்க வந்து கொண்டே இருக்குமாம். அப்படிப்பட்ட உலகமாகத்தான் நேரம் சார்ந்த உலகமும் இருக்கிறது. நேரம் பற்றி எடுக்க எடுக்க விஷயங்கள் வந்து கொண்டே இருக்கின்றன.

'நோ மேன் கேன் பி ஏ ஹீரோ டு கிஸ் ஒய்ப்'. அதாவது எந்த ஒரு கணவனும் அவனுடைய மனைவிக்கு கதாநாயகனாக இருக்க முடியாது என்பது ஆங்கிலத்தில் சொல்லப்படுகிற ஒரு பழமொழி.

இதை ஏன் சொல்கிறேன் என்றால், இல்லத்தரசிகள் அவரவர்களுடைய கணவன்மார்களுடைய பலவீனங்களை நன்கு உணர்ந்தவர்கள். எனவே, அவர்கள் கணவர்களை வியப்பது என்பது மிகக் குறைவாக இருக்கிறது. ஆனாலும், சில நேரங்களில் சில கணவர்களை வியக்க வேண்டி இருக்கிறது. கணவர்களில் வெற்றிகரமான கணவர் யார்? என்கிற ஒரு கேள்வி கேட்டால், அதற்கு நான் சொல்லக்கூடிய விடை மிக வித்தியாசமாக இருக்கும்.

ஒரு புடவைக் கடையிலோ அல்லது ஒரு நகைக் கடையிலோ ஒரு கணவனும், மனைவியும் வாங்க வேண்டிய பொருள்களை வாங்கி முடித்து விட்டு, வெளியே வரும்போது கணவனுடைய முகத்தில் மகிழ்ச்சி பொங்க வேண்டுமாம். மனைவியின் முகத்திலும் மகிழ்ச்சி பொங்க வேண்டுமாம்.

வெற்றிகரமான கணவனின் அடையாளமே மனைவியை மிக மகிழ்ச்சியான முகத்தோடு வரவழைத்து, தானும் மிக மகிழ்ச்சியாக வருவதுதான்.

மேலைநாட்டுப் பெண்கள் நம் பெண்களைப் பார்த்து மிகவும் வியக்கிறார்கள். என்ன கோணத்தில் என்றால், எப்படி நாள் பூராவும் அடுக்களையில் இருந்து, அவ்வளவு பணிகளைச் செய்து கொண்டே இருக்கிறார்கள். காலையில் 6 மணிக்கோ அல்லது அதற்கு முன்னதாகவோ, எரிய ஆரம்பிக்கும் அடுப்பு வடலூர் வள்ளல் பெருமானின் அடுப்பு போல எப்பொழுது பார்த்தாலும் எரிந்து கொண்டே இருக்கிறது. இரவு 11.00 மணிக்குதானே அமர்த்துகிறார்கள்? இப்படி நாள் பூராவும் அடுக்களையில் உங்கள் இல்லத்துப் பெண்கள் இருக்கிறார்களே என்று வெளிநாட்டுப் பெண்கள் என்னிடத்தில் வியப்பாக கேட்பது உண்டு.

வெவ்வேறு நேரங்களில் சாப்பிடுகிற மனிதர்கள், அதையும் அவ்வப்போது சூடாக சாப்பிட வேண்டும் என்று எதிர்பார்ப்பவர்களும் உண்டு. எல்லோருக்கும் பொதுவான உணவு என்று இல்லாமல் அவரவர் வசதிக்கேற்ப அவ்வப்போது சமைக்க வேண்டிய அவசியம் வேறு. இப்படிப் பார்க்கும் போது நம் இல்லத்தரசிகளின் நேரமெல்லாம் பெரும்பாலும் அடுக்களையிலேயே போய்விடுகின்றன. இந்த நிலை மேலைநாடுகளில் கிடையாது. காலையில் அள்ளிப்போட்டுக் கொண்டு ஓடுகிறார்கள். மதியம், போகும் இடத்தில் சாப்பிட்டு விடுகிறார்கள். இரவுதான் சமைக்கிறார்கள். சமைத்த உணவை மைக்ரோ அவனிலிருந்து ப்ரிட்ஜ், ப்ரிட்ஜிலிருந்து மைக்ரோ அவன் என்று வைத்து அதை எடுத்து சுட வைத்துக் கொள்கிறார்கள். அவ்வளவுதான்.

ஆனால், அடுக்களைகளில் உழலும் நம் பெண்கள் பாவம். அவர்கள் எப்போது பார்த்தாலும், வீணாக அடுப்படிகளில் இருப்பதைக் குறைத்துக் கொள்ள நவீனங்களுக்குப் போயாக வேண்டும்.

நவீனக் கருவிகள், நவீன உத்திகள் என்னவெல்லாம் அடுப்படிகளுக்கு என இருக்கின்றனவோ, அவற்றை மெல்ல மெல்ல வாங்கிச் சேகரித்துக் கொண்டால் பெண்கள் அடுப்படிகளில் இருக்கக்கூடிய நேரங்கள் மிகக் குறைந்துவிடும்.

இப்போது குக்கர்கள் மிகுந்து விட்டன. சாதத்திலிருந்து வடிகட்டக்கூடிய கஞ்சியின் மூலமாக சத்து எல்லாம் போய் விடுகிறது என்கிற குறைபாடு,

குக்கரில் தவிர்க்கப்படுகிறது. குக்கர்கள் நேரத்தை மிச்சப்படுத்தப்படுத்துவது மட்டும் இல்லாமல் சத்தையும் மிச்சப்படுத்துகின்றன.

அதேபோல், மைக்ரோ அவனை அவரவர் சக்திக்கு ஏற்ப வாங்கி வைத்துக் கொள்ளலாம். சுட வைத்துக் கொள்வதற்கு நீண்ட நேரம் அடுப்பில் இருப்பதைவிட, உருளைக்கிழங்கு வேகவைப்பதற்கு அல்லது ஓர் அசைவப் பொருளை வேக வைப்பதற்கு இது உதவுவதைப் போல வேறு எதுவும் உதவுவதில்லை.

நான்ஸ்டிக் என்று சொல்லப்படும் தட்டோடு ஒட்டிக் கொள்ளாத, பாத்திரத்தில் உணவு சமைத்தால் நமக்கு நேரம் மீதமாகும்.

சாறு பிழியும் கருவிகளில் கூட மிக நவீனங்கள் வந்துவிட்டன. மிக்ஸி இன்றி சாறு பிழிவதற்கென்று அருமையான இயந்திரங்கள் வந்துவிட்டன. ஒரு கருவியில் பழத்தைப் பிடித்து ஓர் அழுத்து அழுத்தினால் உடனே அது பிழிந்து தந்து விடுகிறது.

சப்பாத்தியைத் தயாரிக்க, ஒரு அழுத்து அழுத்தினால், உடனே சப்பாத்தி தயாரிக்கக் கூட இயந்திரங்கள் மிக எளிய விலையில் கிடைக்கின்றன. சப்பாத்தி தேய்ப்பதெல்லாம் நேரத்தை வீணாக்குகிற விஷயம்.

முன்பு தேங்காய் துருவிக் கொண்டே இருப்பார்கள். இப்போது இதற்குக்கூட சிறிய சிறிய இயந்திரங்கள் வந்துவிட்டன. காய்கறி நறுக்குவதற்கு இப்போது எவ்வளவோ நவீன கருவிகள் கிடைக்கின்றன. அரிவாள்மனை என்பது நேரத்தை விழுங்கும் கருவியாகி விட்டது.

ஒரு சின்னப் பாத்திரம், அதற்குள் வெங்காயத்தைப் போட்டு, கயிறைப் பிடித்து நான்கு இழு இழுத்தால், வெங்காயம் அழகாக தூள்தூளாக வந்துவிடுகிறது. இதை விட்டுவிட்டு நறுக்கிக் கொண்டு, நேரத்தை விரயமாக்கி, கண்ணை கசக்கிக் கொண்டு இருப்பதா? சமையல் அறையிலேயே நீண்ட நேரம் இருக்கும் பெண்களைப் பார்க்கும் பொழுது, ஏன் இப்படிப்பட்ட சின்னச்சின்ன வசதிகளை செய்து கொள்ளக் கூடாது? என்றுதான் எண்ணத் தோன்றுகிறது.

எது எதற்கோ எவ்வளவோ செலவிடுகிறோம். ஒரு திரைப்படம் பார்ப்பதற்காக குடும்பத்தோடு சென்றால் ரூ.1,000/- செலவாகிறது. ஒரு திரைப் படத்தை விட்டுவிட்டு, அதற்குப் பதிலாக ஏன் நம் அடுப்படியில் தேவையான நேரத்தை மிச்சப்படுத்த சௌகரியங்களைச் செய்து கொடுத்து மனைவியின் முகத்தில் மகிழ்ச்சியை ஏற்படுத்தி கணவனும் மகிழ்ச்சியில் திளைக்கலாமே.

இன்னும் பழைய பஞ்சாங்க முறையில் நாம் செய்திகளை குறித்துக் கொண்டும், புகைப் படங்களை எடுத்துக் கொண்டும், ஒளிப்பதிவுக் கருவிகளை வைத்துக் கொண்டும் இருப்பதைவிட, ஐ பேட் என்று சொல்லப்படுகிற ஒரு கருவியை வாங்கிவிட்டால், அதனை அனைத்துக் காரியங் களுக்கும் பயன்படுத்திக் கொள்ளலாம்.

நம்முடைய செட்யூல் என்று சொல்லப்படுகிற எல்லா நிகழ்ச்சிகளையும் அதில் பதிந்து கொள்ளலாம். நமக்கு நினைவூட்டும்படியாக ஒரு செயலாளரைப் போல, அது நமக்கு உதவியாக இருந்து பயன்படும். இன்று செல்போனிலேயே பத்திற்கும் மேற்பட்ட



வசதிகள் வந்துவிட்டன. மிக மலிவான ஒரு செல்போனை வாங்கி வைத்துக் கொண்டு, ஏதோ காசை மிச்சப்படுத்திக் கொள்வதாக நினைக்கிறோம். ஆனால், ஆன்ட்ராய்டு போன்ற மிக நவீனமான செல்போன் கருவிகளில் பல வசதிகள் இருக்கின்றன. ஏராளமான எண்களைப் பதிவு செய்து கொள்ளலாம், இணையதளம் மூலமாக செய்திகளைப் பரிமாறிக் கொள்ளலாம். பல செய்திகளை தெரிந்து கொள்வதில் பல நன்மைகள் உள்ளன.

இப்படி மெல்ல நவீன கருவிகள் மூலம் நேரத்தை மீதப்படுத்துவதற்கு, நாம் அதைப் பயன்படுத்த ஆரம்பிக்க வேண்டும்.

நேரம் என்பது பொன்னிலும் அருமையான பொருள். அதை சிக்கனம் செய்து கொண்டு, நான் எளிமையான வாழ்க்கை வாழ்கிறேன் என்று தத்துவம் பேசிக் கொண்டு இருக்காமல், நவீனங்களை அணுகி, அவற்றோடு பழகி, நேரத்தை நாம் அடுப்படிகளில் மட்டுமல்ல, வெளியிலும், அலுவலக அறையிலும் மீதப்படுத்த என்னென்ன உபகரணங்கள் இருக்கின்றனவோ அவற்றை மெல்ல மெல்ல வாங்கி, பயன்படுத்தி நேரத்தை மிச்சப்படுத்த வேண்டும். மிச்சப்படுத்தக் கூடிய நேரத்தை ஒரு பயனுள்ள வாழ்க்கை வாழ்வதற்கு செலவிடுவதுதான் இன்றைய நவீன வாழ்க்கைக்கு அவசியமாக இருக்கிறது. ■

ஆரோக்கியம் தரும் அறுசுவை உணவு

எலும்புப் புரை பிரச்னை உள்ளவர்களுக்கான உணவுகள்

வள்ளி முத்தையா

எலும்பு சம்பந்தப்பட்ட நோய்களில் முக்கியமான ஒன்று எலும்புப்புரை (Osteoporosis). இந் நோய் வந்தவர்களுக்கு எலும்பு முறிவு ஏற்படும் அபாயம் அதிகம் உண்டு. எலும்புப் புரையினால் உடலில் எலும்புத் தாது அடர்த்தி (Bone Mineral Density) குறைந்து விடும்.

எலும்புப் புரை ஏற்படக் காரணங்கள்:

மிகவும் அதிகமான மதுப் பழக்கம். புகை பிடித்தல். உணவில் குறைவாக கால்சியம் எடுத்துக் கொள்ளுதல், வைட்டமின்-கே மற்றும் வைட்டமின் - சி ஆகியவற்றை குறைவாக உணவில் எடுத்துக் கொள்ளுதல், குறைவான உடல் உழைப்பு, மிக அதிகமான உடல் உழைப்பு, அதிகப்படியான உடற் பயிற்சி ஆகியவை எலும்புகளுக்குத் தொடர்ந்து சேதத்தை ஏற்படுத்தும்.

இதனால் உடல் கட்டமைப்பிற்கு சோர்வை ஏற்படுத்தும். ஆகையால் மிக அதிகமான உடற் பயிற்சிகளை செய்யாமலிருப்பதும் நல்லது!

தடுக்கும் முறைகள்:

எலும்புப் புரையை வாழ்க்கை முறை மாற்றங்களால் ஓரளவு தடுக்கலாம். அதற்கு மருந்துகளும் உள்ளன. உடற்பயிற்சி மூலம் உடல் எடை குறைத்தல், நார்ச்சத்து மிகுந்த பழ வகைகள், காய்கறிகளை உட்கொள்ளுதல், உடல் நலத்தையும், மனநலத்தையும் சீராக வைத்துக் கொள்ள தியானம் மேற்கொள்ளுதல் போன்றவை சில தடுப்பு முறைகள்.

சேர்க்க வேண்டிய உணவுகள்:

பால் (காபி, டீ வகைகளைக் குறைத்துக் கொண்டு, பனங்கற்கண்டு அல்லது நாட்டுச் சர்க்கரை சேர்த்து பால் அருந்தலாம்). முட்டை - தினமும் 1, நாட்டுக் கோழி - வாரத்தில் 2 முறை ¾ கப், இறால் - வாரத்தில் 1 அல்லது 2 முறை ¼-½ கப். மீன் வகைகள் - குழம்பு செய்து வாரத்தில் 2 முறை, பனீர் - 15 நாட்களுக்கு ஒரு முறை ½ கப் எடுத்துக் கொள்ளலாம். காளான், நாட்டுக் காய்கறிகள் (சுரைக்காய், பீர்க்கங்காய், கோவக்காய், பாகற்காய், கத்திரிக்காய், புடலங்காய், அவரைக்காய், சௌசௌ, கத்திரிக்காய், பீன்ஸ், வாழைக்காய், வாழைத்தண்டு, வாழைப்பூ, குடமிளகாய் போன்றவை) கீரை வகைகள் (வாரம் 1 அல்லது 2 முறை, ஏனெனில் கீரைகளில் இயற்கை உப்பு அதிகம்).

பழங்கள் - ¼-½ கப் அளவில் 2 அல்லது 3 வகை பழங்களை எடுத்துக் கொள்ளலாம்.

சிறுதானியங்கள் மற்றும் பயறு வகைகளை வாரம் 3 முறை சுண்டலாகவோ அல்லது தோசை இட்லி வகைகளாகவோ செய்து உண்ணலாம்.

நட்ஸ் (பாதாம் 4, பிஸ்தா 4, வால்நட் 4 தினசரி காலையில் எடுத்துக் கொள்ளலாம்)

நீர்மோர், ரச வகைகளை தினசரி 150-200 மிலி எடுத்துக் கொள்ளலாம்.

தவிர்க்க வேண்டிய உணவுகள்:

பதப்படுத்தப்பட்ட உணவுகள், பாக்கெட்டில் அடைத்த உணவுகள், பேக்கரி சிற்றுண்டிகள், மைதாவிலான பொருட்கள், கிழங்கு வகைகள் (மாதம் 1 அல்லது 2 முறை எடுத்துக் கொள்ளலாம்). பாட்டிலில் அடைத்த குளிர்பானங்கள், பிராய்லர் கோழி, அப்பளம், ஊறுகாய் வகைகள்.

இவையனைத்தையும் தாண்டி, மாதாந்திர மருத்துவ பரிசோதனை மற்றும் மருந்து மாத்திரைகளை உட்கொள்ளுதல் மிகவும் அவசியமானது!

இவையனைத்தையும் மேற்கொண்டால் எலும்புப் புரையை சுலபமாக நிர்வகிக்கலாம்.

(நலப்பயணம் தொடரும்)

வரலாறு சொல்லும் மடல்கள் 1

வரலாறு சொல்லி வரலாறு படைக்கும் இலக்கிய வாயில்கள்

கிருங்கை சேதுபதி

காலம் கருதி, இடத்தாற் செய்த, செய்ய வேண்டிய கடமைகளை நினைவூட்டி எழுதப் பெறுவன மடல்கள். இதற்கு முடங்கல், ஓலை, திருமுகம், கடிதம், கடுதாசி, சீட்டுக்கவி என்றெல்லாம் வேறு பெயர்கள் உண்டு.

தமிழ் இலக்கியத்தில் மடலுக்கு என்றே தனித்த இடமுண்டு. இலக்கியத்தில் இடம்பெறும் மடல்களும் உண்டு. இலக்கியமாகவே வெளிவந்த மடல்களும் உண்டு.

தமிழின் முதற் காப்பியமாகிய திகழும் சிலப்பதிகாரம். வணிக குலமக்களின் வரலாறு பேசும் குடிமக்கள் காப்பியம். அதில், கோவலனுக்கு மாதவி எழுதிய இருமடல்கள், அக்காப்பியத்தின் திருப்புமுனைகளாக அமைந்தன. யாழ்இசையின் மேல் ஊழ்வினை உறுத்து வந்து ஊட்டத்தம்மைப் பிரிந்த கோவலனுக்கு முதற் கடிதம் எழுதுகிறாள் மாதவி.

செண்பகம், குருக்கத்தி, பிச்சி, மல்லிகை ஆகிய மலர்களோடு பச்சிலை, வெட்டிவேர் ஆகியன சேர்த்துக் கட்டிய மாலையிடையே தாழம்பூவின் மடலை வைத்து அதில், செண்பகமுகையைக் கிள்ளி எழுத்தாணியாகக் கொண்டு செம்பஞ்சுக் குழம்பில் தோய்த்து எழுதியது அந்த மடல்.

Letter என்பதற்கு எழுத்து, எழுத்துரு, மடல், விகிதம், தபால், காகிதம், அஞ்சல், தூது, காயிதம், கடுதாசி, ஓலை, நிருபம், மடங்கல், முடங்கல் என பலச் சொற்களில் பொருள் கொள்ளப்படுகின்றன. மாதவி எழுதிய இந்தக் காதல் கடிதம், தாழம்பூ மடலில் எழுதப்பெற்றதனாலேயே இதுமடல் என்று பெயர் பெற்றது போலும்,

"மன்னுயி ரெல்லாம் மகிழ்துணை புணர்க்கும்
இன்னிள வேனில் இளவர சாளன்
அந்திப் போதகத் தரும்பிடர்த் தோன்றிய
திங்கட் செல்வனுஞ் செவ்விய னல்லன்
புணர்ந்த மாக்கள் பொழுதிடைப் படுப்பினும்
தணந்த மாக்கள் தந்துணை மறப்பினும்
நறும்பூ வாளியின் நல்லுயிர் கோடல்
இறும்பூ தன்றிஃ தறிந்தீ மின்னென"

என்று அமைகின்றது அந்த மடல்.

"இந்த உலகத்து உயிர்களை எல்லாம் ஒன்றோடு ஒன்று துணை சேர்த்து இன்பத்தில் ஆழ்த்தும் இளவேனில் ஆகிய இளவரசாளன் வந்து விட்டான். மாலைப் பொழுதிலே அரும்புகின்ற விரகதாபத்தின் மேல், திங்கள் ஆகிய சந்திரனும் வானத்தில் தோன்றினான். அவனும் நல்லவன் அல்லன். இணைந்து இன்பம் கண்ட காதலர்கள் சிறு பொழுது அளவிலே பிரிய நேர்ந்தாலும், பிரிந்து சென்றோர் தம் துணையினை மறந்து வராமல் போயினாலும், தன்மலர் அம்புகளை எய்து துன்புறுத்தி, அவர்களின் நல்லுயிர் பறிக்கும் தன்மையுடையவன் மன்மதன். இந்தநிலை, நீங்கள் அறிந்ததுதான். இது ஒன்றும் புதுமையானது அல்ல. ஆகவே, இதனை அறிந்து எனக்கு அருள்புரிவீராக" என்று பொருள் தரும் இந்த மடலை எழுதித் தன் தோழி வயந்தமாலை வழியாக மாதவி அனுப்புகிறாள். அதனை ஏற்காமல் அப்படியே திருப்பி அனுப்பி விடுகிறான் கோவலன்.

இன்றைக்கும் ஏற்க மறுத்துத் திருப்பி அனுப்பும் (Redirect) மரபை அன்றைக்கே செயல்படுத்தியவன் கோவலன். அனுப்பியவர் முகவரிக்கே திரும்பி வந்த அந்தக் கடிதம், கோவலனின் உள்ளக் குமுறலையும், மாதவியின் மனக்குறையையும் வெளிப்படுத்த உதவிய வடிகால் ஆகிவிடுகிறது.

இரவோடு இரவாகப் பூம்புகாரை விடுத்து, மதுரையை நோக்கிக் கோவலனும் கண்ணகியும் கிளம்பியதை அறிந்து, மாதவி எழுதி அனுப்பிய மற்றொரு மடல், இருவரது உள்ளத்து இயல்புகளையும் ஒருமுகப்படுத்திய ஆற்றல் கொண்டமைகிறது.

இதில், இல்லறம் துறந்த நல்லுளம் மாதவிக்கு வயப்பட்டு விட்டது தெரிகிறது. கற்புக்கடம் பூண்ட பொற்புடைத் தெய்வமாகிய கண்ணகியுடன் மதுரை நோக்கி வந்த கோவலனை துறவிக்குரிய பக்குவத்தோடு, மனதளவில் தொடர்ந்து வந்து மாதவி பணிகிறதன்மையைக் கொண்டு அமைகிறது இரண்டாம் மடல்.

அடிகள் முன்னர் யான் அடி வீழ்ந்தேன்;
வடியாக் கிளவி மனக்கொளல் வேண்டும்;
குரவர் பணி அன்றியும், குலப்பிறப்புஆட்டியோடு
இரவிடைக் கழிதற்கு, என் பிழைப்பு அறியாது,
கையறு நெஞ்சம் கடியல் வேண்டும்;
பொய் தீர் காட்சிப் புரையோய், போற்றி!'

'அடிகள்' என்று கோவலனை விளித்து அவள் தொடங்கிய முறையிலேயே அவளது தெளிவு புலனாகி விடுகிறது. "அடிகள் முன்னர் நான் அடிவீழ்ந்து வணங்குகிறேன். வடித்தெடுக்காத

என் சொற்களை மனத்தில் கொள்ள வேண்டும். பெற்றோர் பணிக்காமல், குலப்பிறப்பாட்டியாகிய மனைவி கண்ணகியோடு இரவு வேளையில் ஊரை விட்டு நீங்குவதற்கு நான் என்ன பிழை செய்தேன் என்று தெரியாமல் என் நெஞ்சம் கலங்குகிறது. என் குறை போக்க வேண்டும். பொய்மையின்றித் தெளிவடையும் மேலோனே! உன்னைப் போற்றுகிறேன்'' என்று அவள் எழுதிய இசைமொழி உணர்ந்து,

'தன் தீது இலள்' என, தளர்ச்சி நீங்கி,
'என் தீது' என்றே எய்தியது உணர்ந்து

விடுகிறான் கோவலன்.

தன்னிலை உணர்ந்த தகுநிலையாளனாகக் கோவலனையும் உயர்த்தி விடுகிற இந்த மடலில், 'குலப்பிறப்பாட்டி' என்று கண்ணகியைக் குறிக்கிற போதே, தன் குலநிலையினை எண்ணிக் கலங்குகிற மாதவியின் நெஞ்சத்துயர் வாசக நெஞ்சை வந்து கவ்வுகிறது. தனது மாசற்ற வாழ்வின் மகத்துவத்தை எளிய சொற்களில் எடுத்துச் சொல்லிய அவள், 'கையறு நெஞ்சம் கடியல் வேண்டும்' என்று பணிகிற இடத்தில் மாதவம் செய்த மங்கையாக, மாதவியின் உள்ளமும் உணர்வும் ஓங்கி வளர்ந்தமை தெள்ளத் தெளிவாய்ப் புலப்பட்டு விடுகிறது. ''ஒரு ஞானாசிரியர்க்கு ஒரு மாணாக்கன் எழுதுவது போல, கோவலனுக்கு மாதவி எழுதிய திருமுகம் அமைந்திருந்தது'' என்று இதனைக் குறிப்பிடுவார் தவத்திரு குன்றக்குடி அடிகளார்.

முந்தைய மடலை மறுத்து அனுப்பிய கோவலன், கோசிகமாணி என்பவன் வாயிலாக, மாதவி கொடுத்தனுப்பிய இந்த மடலைப் படித்ததோடு,

"என்பயந்தார்க்குஇம்மண்ணுடைமுடங்கல்
பொற்புடைத்தாகப்பொருள்உரைபொருந்தியது
மாசில்குரவல்மலரடிதொழுதேன்
கோசிகமாணிகாட்டு"

என்று இதனைத் தன் பெற்றோரிடம் கொண்டு போய்ச் சேர்க்கச் சொல்லிக் கோசிமாணியிடமே திருப்பிக் கொடுக்கிறான், கோவலன்.

முன்னர், தாழை மடலில் செய்தி எழுதப்பட்டு அனுப்பப்பட்டது. இப்போது அனுப்பப்பட்டது முடங்கல். எழுதி, மடிப்பு விழாமல் வளைத்து முடக்கியமையால், இது 'முடங்கல்.' இதனைப் பொதிந்து அரக்கு வைத்து பதிவஞ்சலாக அனுப்புவது, 'மண்ணுடை முடங்கல்.' இங்கு மண்ணுடை என்பது மண் பசை. அதாவது சீல் வைக்கப்பட்ட கடிதம் என்று பொருள். அத்துணை இரகசியமான இந்தக் கடிதத்தைப் பொதுவெளியில் தம் பெற்றோர் படிக்கத் தரச் சொல்கிறான் கோவலன்.

பொதுவாக, ஒருவர் எழுதிய கடிதத்தை,வேறு ஒருவர் படிப்பது நாகரிகம் இல்லை ஆனால், அந்தர சுத்தியோடு மாதவி எழுதிய மடல் அந்தரங்கம் கடந்த ஆன்மிகம் சார்ந்தது என்பதையும், தானும் மாதவியும் வாழ்ந்த வாழ்க்கை, காமம் கடந்த கலையுணர்வு மிக்கது என்பதையும் பெற்றோர் வாயிலாக மற்றோர்க்கும் உணர்த்தக் கோவலன் செய்த முறைதான் இது.

இந்த நனி நாகரிகத்தின் உச்சமாகத்தான் இலக்கியத்தில் கடிதம் என்கிற நிலை கடந்து தமிழில் கடித இலக்கியம் என்ற வகைமை உருவாகியது என்றும் துணியலாம்.

காசியில் இருந்து கல்வி பயின்ற காலத்தில், தேசியச் சிந்தனைக்குள் மூழ்கிய பாரதியாரின் போக்கைப் பற்றி, ஏதும் அறியாது கிராமத்தில் இருந்த அவரின் மனைவி செல்லம்மாளிடம் ஏதேதோ சொல்லி வத்தி வைக்கப்பட்டிருக்கிறது. பயங்கரவாத இயக்கங்களுடன் பாரதி சேர்ந்து விட்டதாக, உறவினர் ஒருவர் கூறக்கேட்டுப் பயந்து போன செல்லம்மாள் பாரதியாருக்கு ஒரு கடிதம் எழுதினார். அதனைக் கண்ட பாரதி, அதற்குப் பதிலாக ஒரு கடிதம் எழுதியிருக்கிறார்.

1901–ம் ஆண்டு காசியில் இருந்து தன் காதல் மனைவிக்குப் பாரதியார் எழுதிய அக்கடிதம், அளவிற் சிறியது என்றாலும் உணர்வில் பெரியது. அந்தக் கடிதம் எழுதும் போது பாரதிக்கு வயது பத்தொன்பது. அவரை விடவும் இளையவரான செல்லம்மாளுக்கு எழுதப்பட்ட அந்தக் கடிதம் அந்தரங்கமானது என்பது கடந்து அனைவருக்கும் பொதுவானதொரு நன்னெறியை எடுத்துச் சொல்லும் இலக்கிய சாசனமாகவும் இனிது விளங்குகிறது.

ஓம் எனத் தொடங்கும் அந்தக் கடிதச் செய்தி பின்வருமாறு:

ஸ்ரீகாசி ஹனுமந்த கட்டம்
எனதருமைக் காதலி செல்லம்மாளுக்கு ஆசிர்வாதம்.
உன் அன்பான கடிதம் கிடைத்தது.
நீ என் காரியங்களில் இத்தனை பயப்படும்படியாக நான் ஒன்றும் செய்யவில்லை. விசுவநாதன் அனாவசியமாக உனக்குப் பயத்தை விளைவித்திருக்கிறான். நான் எப்போதுமே தவறான வழியில் நடப்பவனல்ல. இதைப்பற்றி உன்னை சந்திக்கும் சமயங்களில் விவரமாகக் கூறுகிறேன். நீ இந்த மாதிரி

கவலைப்படும் நேரங்களில் தமிழை நன்றாகப் படித்து வந்தாயானால் மிகவும் சந்தோஷமுறுவேன்.

உனதன்பன்

சி.சுப்ரமணியபாரதி

எத்தனை தெளிவு; எத்தகு துணிவு. தனிமைத் துயரைப் போக்கி, இனிமை பல சேர்க்கும் அருமருந்தாகத் தமிழை முன்னிறுத்தி, பாரதியார் எழுதியது அவரது மனைவிக்கு மட்டும் உரியது அல்லவே. கணவனைப் பிரிந்து இல்லறக் கடமையைத் தனித்திருந்து செயல்படுத்தும் எத்தனையோ இல்லத் தரசிகளுக்கும் உரியது அல்லவா?

இதுபோல், கடல் கடந்து வாணிகம் செய்யப் புகுந்த நகரத்தார் பலர் தங்கள் இல்லத்தார்க்கும் உற்றார் உறவினர்க்கும் நண்பர்களுக்கும் எழுதிய மடல்கள் எத்தனை இருக்கும். அவற்றையெல்லாம் இன்னும் பத்திரப்படுத்தி வைக்கிற பழக்கம் சிலர் இல்லங்களில் இருப்பதைப் பார்த்திருக்கிறோம்.

அவற்றுள் பொதுவான வரலாற்றுச் செய்திகள் பல பொதிந்து இருப்பதை, நாம் அறிந்தும் அறியாதவர்களாகவே இருக்கிறோம்.

கட்செவி, முகநூல், மின்னஞ்சல் என்கிற நவீன இணையவழி ஊடகங்களில் அனுப்பப் பெறும் குறுஞ்செய்திகள் காலங்காலமாய் நிலவி வந்த மடலின் மாண்புகளை விழுங்கி விட்டன. என்றாலும், இன்னும் கடிதம் எழுதுகிற கலைஞர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள்.

எழுத்துக்களைத் துணைக் கொண்டு இதயங்களைத் திறந்து காட்டும் இத்தகு மடல்கள், தன்காலத்து வரலாறு களையும் எடுத்துச் சொல்வனவாக இருக்கின்றன. அகச் செய்திகளோடு, புறச்செய்திகளையும் கொண்டு வந்து தருகின்ற வரலாற்றுத் தூதுகளாகவும் மடல்கள் விளங்குகின்றன.

அனுப்புகிறவர் பெறுகிறவர் என்கிற எல்லைகள் கடந்து அனைவருக்கும் பொதுவான பல அரிய செய்திகளை, வரலாற்று நிகழ்வுகளை எடுத்துச் சொல்லும் மடல்களை இனிவரும் தொடர்களில் விரிவுறக் காணலாம்.

இத்தகு கடிதங்களைத் தங்கள் வசம் வைத்திருப் பவர்கள், அவற்றுக்குரிய விளக்கங்களோடு எழுதியும் அனுப்பலாம்.

காரணம் கடிதம் என்பது வரலாறு சொல்லி வரலாறு படைக்கும் இலக்கிய வாயில்கள்.

(தொடரும்)

கவியரசர் கண்ணதாசன் பிறந்த நாளன்று (24.06.2021) சிறுகூடல்பட்டியில் உள்ள கவியரசர் சிலைக்கு திருப்பத்தூர் பிஎல்.எஸ்.பழனியப்பன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் தமிழ் வளர்ச்சித் துறை துணை இயக்குநர் நாகராசன், ஜெயசந்திரன் உள்ளிட்டோர்.

நெற்குப்பை நகரத்தார் சங்கம் கல்வி நிதி உதவி

சென்னை வாழ் நெற்குப்பை நகரத்தார் சங்கக் கல்வி நிதியம் சார்பாக நெற்குப்பையைச் சேர்ந்த நகரத்தார் மாணவ மாணவிகளுக்கு கல்லூரியில் பயில ஆண்டுதோறும் வட்டியில்லாக் கடன் உதவித் தொகையை வழங்கி வருகிறது.

உதவித் தொகை பெற அடிப்படைத் தகுதிகள்:

1) நெற்குப்பையைச் சொந்த ஊராகக் கொண்டிருத்தல் வேண்டும். 2) பாலிடெக்னிக், பட்டப்படிப்பு, பட்ட மேற்படிப்பு படிப்பவராக இருத்தல் வேண்டும். 3) ஒரு குடும்பத்தில் ஒருவர் மட்டுமே இவ்வுதவித் தொகையைப் பெற இயலும். 4) உதவித் தொகை பெறுபவரது குடும்பத்தின் ஆண்டு வருமானம் ரூ.3/- இலட்சத்திற்குள் இருக்க வேண்டும். 5) முந்தைய கல்வி ஆண்டில் குறைந்தது 60% மதிப்பெண்கள் பெற்றிருத்தல் வேண்டும்.

விண்ணப்பம் பெற திரு.மு.ச. செல்வநாதன், சென்னை வாழ் நெற்குப்பை நகரத்தார் சங்கம் (கல்வி நிதி), எண்.1, பி. பிளாக், தரைத்தளம், எஸ்.வி.எம். இல்லம், எண்.3, ஈஸ்வரன் கோவில் மூன்றாவது குறுக்குத் தெரு, மடிப்பாக்கம், சென்னை – 600 091, (தொ.பே.எண்.94440 40194) என்ற முகவரிக்கு கடிதம் எழுதி பெற்றுக் கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தை ஆகஸ்ட் 31, 2021-க்குள் அனுப்பி வைக்க வேண்டும்.

• கீழடி அகழ்வாராய்ச்சியில், சிவப்பும், கருப்பும் கலந்த வண்ணத்தில் பளபளப்பான பானைகள் கிடைத்திருக்கின்றன. தென் தமிழகத்தில், மையாக அரைக்கப்பட்ட களிமண்ணைக் கொண்டு பானைகள் செய்து அவற்றின் உட்புறத்தில் பச்சிலைச் சாறுகளைப் பூசி, 1100 – 1600 சென்டிகிரேடு வெப்பத்தில் சூளையில் இட்டுச் சுட்டிருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது.

• தமிழகத்தில் சோழர் காலத்தில் தயாரிக்கப்பட்ட வுட்ஸ் இரும்பில் கார்பன் நேனோ குழாய்களும், இரும்பு கார்பைடு கம்பிகளும் கலந்திருக்கின்றன. இரும்புத் தாதிலிருந்து இந்த இரும்பு உலோகத்தைப் பிரித்தெடுக்கும் செய்முறையில் பச்சிலைச் சாறுகளும், 1.5% கார்பனும் கலந்து மிக அதிகமான வெப்பத்தில் உருக்கி இருப்பதால் வுட்ஸ் இரும்பிற்கு மகத்தான உறுதியும், வலிவும் கிடைத்திருக்கிறது.



• அஜந்தா, சித்தன்னவாசல் குகைகளில் வரையப்பட்ட ஓவியங்களில் மலர்கள், பச்சிலைச் சாறுகளின் இயற்கை வண்ணங்களையும், ஆமணக்கு எண்ணெய் விளக்கில் படிந்திருக்கும் இளகிய கரி மையையும் பயன்படுத்தி இருப்பதால் இன்றுவரை ஓவியங்கள் மங்காமல் பொலிவோடு திகழ்கின்றன.

• கொழுந்தாக அரைக்கப்பட்ட சுண்ணாம்பும், பனஞ்சாறும், முட்டையும் கலந்து சுவர்களுக்கு மேல்பூச் சிட்டதால் நகரத்தார் அன்று கட்டிய மாளிகைகளின் சுவர்கள் இன்றும் பளிங்குபோல் மிளிர்கின்றன.

மேலே கூறியவை எல்லாம் சொல்ல வரும் மேன்மையான செய்தி ஒன்றுண்டு. இந்தக் கட்டுரைக்குள் மெல்ல நுழைந்து படித்துக் கொண்டே செல்லும்போது அது நமக்குத் தெரிய வரும்; உள்ளம் விரிய வரும்.

நாம் பள்ளியிலும், கல்லூரியிலும் இயற்பியல் (Physics), வேதியியல் (Chemistry) பாடங்களில் என்ன படிக்கிறோம்? உலகத்தில் உள்ள பொருட்களைப் (Matter) பற்றிப் படிக்கிறோம். பொருள் (Matter) என்பது என்ன? அடர்த்தியும் (Mass), இடத்தை அடைத்துக் கொள்ளும் தன்மையும் (Volume) கொண்ட எதுவாக இருந்தாலும் அது பொருள்தான். அந்தப் பொருளின் நகர்வு (Motion), அந்த நகர்வு எடுத்துக் கொண்ட நேரம் (Time), அது கடந்து வந்த தூரம் (Distance), அந்த நகர்வுக்காக அது செலவழித்த ஆற்றல் (Energy), அந்த நகர்வினால் அந்தப் பொருள் வெளிப்படுத்திய சக்தி (Force) இதைப் பற்றியெல்லாம் இயற்பியலில் படிக்கிறோம். வேதியியலில் பொருளின் வேதியியல் குணங்கள், பொருளின் உள்ளே இருக்கும் அணுக்கள், மூலக்கூறுகளின் அமைப்பும் அளவும், வேதியியல் எதிர்வினைகளில் என்னென்ன மாற்றங்கள் நிகழ்கின்றன, என்னென்ன கூட்டுப் பொருட்கள் உற்பத்தி ஆகின்றன ஆகியவற்றைப் பற்றிப் படிக்கிறோம். இதையெல்லாம் எதற்காகப் படிக்கிறோம்? இந்த அறிவைப் பயன்படுத்தி நம் வாழ்க்கைக்குத் தேவையான உணவு, உடை, கருவிகள், வீட்டு உபயோகப் பொருட்கள் எல்லாவற்றையும் தயாரித்துக் கொள்ள. இதற்கென்று ராட்சத இயந்திரங்களையும், பெரிய பெரிய தொழிற்சாலைகளையும் அமைத்துக் கொள்கிறோம். இதற்காகப் பயன்படுத்திக் கொள்ளும் மூலப் பொருட்களுக்கு இயற்கையில் என்ன உருவ அமைப்பு, குணங்கள் இருக்கிறதோ அதை அனுசரித்து நடந்து கொள்கிறோம்.

நாளைய தொழில்நுட்பம்
நானோ டெக்னாலஜி

சிறுகூடல்பட்டி
முத்துக்கருப்பன்

மாறுபட்ட சிந்தனை:

1950–களில் அமெரிக்காவில் ஃபெயின்மன் (Feynman) என்ற புகழ் பெற்ற அறிவியல் சிந்தனையாளர் இருந்தார். அவருக்கு இந்தத் தயாரிப்புகளெல்லாம் சுத்தமாகப் பிடிக்கவில்லை. பெரிய பெரிய மாடு மாதிரி இயந்திரங்கள், கரடுமுரடான உலோகங்களையும், அமிலங்களையும் வைத்துக்கொண்டு, சோம்பேறித்தனமாக, நிறைய காசைச் செலவழித்துப் பொருள்களை உற்பத்தி செய்து கொண்டிருந்தது பிடிக்கவில்லை. சூப்பர் கம்ப்யூட்டர் என்ற பெயரில் பெரிய அறையை அடைத்துக் கொண்டு கர்ரக், கர்ரக் என்று சத்தம் போட்டுக் கொண்டிருந்த செர்வரைப் பார்த்தால் பிடிக்கவில்லை. 1959–ல் அமெரிக்காவில் நடந்த விஞ்ஞானிகள் மாநாட்டில் இதைப் பற்றி ஒரு

ஃபெயின்மன்

சொற்பொழிவு நிகழ்த்தினார்.

இந்த இடத்தில் உலகத்தில் உள்ள எல்லாப் பொருட்களுக்குள்ளும் இருக்கிற அணுக்களையும், மூலக்கூறுகளையும் பற்றிக் கொஞ்சம் தெரிந்து கொண்டு மேலே செல்லலாம் என்று நினைக்கிறோம்:

அணுக்களின் அமைப்பு:

• அணுவுக்குள் புரோட்டான், நியூட்ரான், எலெக்ட்ரான் என்ற 3 பகுதிகள் இருக்கின்றன.

• நேர்முக மின்சக்தி ஊட்டப்பட்ட புரோட்டான்களும், மின்சக்தி ஊட்டப்படாத நியூட்ரான்களும் ஒரு ஜவ்வுப் பைக்குள் இருக்கின்றன. எதிர்மறை மின்சாரம் செலுத்திய எலெக்ட்ரான்கள் ஜவ்வுப் பையைச் சுற்றிச் சுற்றி வருகின்றன.

• ஓர் அணுவைக் கால்பந்து மைதானம் என்று வைத்துக் கொண்டால், அதன் நடுவே இருக்கும் ஜவ்வுப்பை ஒரு பட்டாணி அளவுதான் இருக்கும். அந்தப் பையைச் சுற்றி அணுவுக்குள் அவ்வளவு வெற்றிடம்.

• அணுவை உருவாக்கவும் முடியாது, உடைக்கவும் முடியாது என்று சொல்லிக் கொண்டிருந்ததெல்லாம் பழைய கதையாகப் போய்விட்டது. இப்போது 100 விதமான அணு வகைகள் கண்டறியப்பட்டிருக்கின்றன. அதில் 92 தான் இயற்கையில் தோன்றியவை. மற்றதெல்லாம் ஆய்வுக்கூடத்தில் மனிதன் படைத்தவை. 43 புரோட்டான்கள் கொண்ட டெக்னீஷியம் தான் மனிதன் உருவாக்கிய முதல் அணு.

• ஒரு மீட்டர் நீளத்தை 100 லட்சம் பங்குகளாகப் பிரித்தால், ஒரு பங்குதான் ஒரு சராசரி அணுவின் குறுக்களவு.

• நியூட்ரானும் புரோட்டானும் கிட்டத்தட்ட ஒரே அளவு எடை கொண்டவை. ஆனால் எலெக்ட்ரான் எடையே இல்லாததுபோல் அவ்வளவு லேசானது.

• புரோட்டானும், நியூட்ரானும் 'குவார்க்' என்ற பொருளால் ஆனவை. இப்போது அவையிரண்டையும் உடைத்து குவார்க்குகளை வெளியே எடுத்து விட்டார்கள். குவார்க்குகளைத்தான் இதுவரை யாரும் உடைக்கவில்லை. ஆகவே இப்போதைக்கு குவார்க்குதான் உலகத்திலேயே மிகச்சிறிய பொருள்.

சரி, மீண்டும் ஃபெயின்மன் சொற்பொழிவுக்கு வருவோம்.

ஃபெயின்மன் சொற்பொழிவு:

"அணுக்களையும், மூலக்கூறுகளையும் தங்கள் போக்கில் இயங்க விடக் கூடாது; அவற்றை விஞ்ஞானிகள் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் (Control) கொண்டு வர வேண்டும். ஒவ்வொரு மூலகத்திலும் அணுக்களைத் தாங்கள் விரும்பியபடி இடம் மாற்றி அமைத்து, எண்ணிக்கையைக் கூட்டிக் குறைத்து அவற்றின் செயல் திறனையும், குணங்களையும் நம் தேவைக்குத் தகுந்தபடி கையாள (Manipulate) வேண்டும்" என்று பேச்சை ஆரம்பித்தார்.

இயந்திரங்களையும், கருவிகளையும் கையடக்கமான சின்ன உருவத்தில் அமைத்துக் கொள்ள வேண்டும். அவற்றில் தயாரிக்கும் பொருட்களும், கனமில்லாமல், லேசானதாக இருக்கவேண்டும் என்று விரும்பினார்.

கம்ப்யூட்டர் போன்ற எலெக்ட்ரானிக் கருவிகள் பெரிய பெரிய டப்பாக்களாக இருப்பது பிடிக்கவில்லை. ஒவ்வொன்றும் கைப்பிடியில் அடங்க வேண்டும் என்று கனவு காண்பதாகச் சொன்னார்.

"சுற்றி இருக்கிற பொருளெல்லாம் இடத்தை அடைக்காமல் சின்னதா இருக்கணும்கிறது மாத்திரம் என் ஆசை இல்லே. இவ்வளவு உழைப்பைப் போட்டுத் தயாரிச்சதெல்லாம் வேலை செய்யிற விதம் எனக்குத் திருப்தியாகவே இல்லே, நம் தேவைகளும் பூர்த்தியாகலே! நவீனத் தொழில் நுணுக்கங்களைப் புகுத்தணும், நூதனமான பொருள்களை நிறைய உற்பத்தி செய்யணும். அப்போதான் நம் வாழ்க்கை ஜம்மென்று இருக்கும்" என்று முழங்கினார். "இரும்பு, தாமிரம் மாதிரி முரட்டு உலோகங்களால் கருவிகளையோ, இயந்திரங்களையோ செய்யாதீர்கள். பிளாஸ்டிக்கையும், கண்ணாடியையும் உபயோகித்துச் சிட்டுப்போல ஆயுதங்களைச் செய்து கொள்ளுங்கள்" என்று சொன்னார்.

கேட்டுக் கொண்டிருந்த விஞ்ஞானிகளுக்கு ஆசையாகத்தானிருந்தது. ஆனால் அன்றைக்கிருந்த சூழ்நிலையில் அதெல்லாம் சாத்தியப்படும் என்று அவர்களுக்குத் தோன்றவில்லை. அதனால் யாரும் கண்டுகொள்ளவில்லை. அவரது கருத்துக்கள் 1980 வரை கேட்பாரற்றுப் போயின,

1964-ல் தானிகுச்சி என்ற ஜப்பானியர், ஃபெயின்மனின் தத்துவங்களுக்குச் சூட்டிய நேனோ தொழில்நுட்பம் (NANO TECHNOLOGY) என்ற பெயர்கூட 1986-க்கு மேல்தான் பிரபலம் அடைந்தது.

அதற்கு நியாயமான காரணம் ஒன்று இருந்தது. அணுக்கள் நம் கைகளுக்கும் கண்களுக்கும் அப்பாற்பட்டவை. அவர் சொன்னபடி அணுக்களையும், மூலக்கூறுகளையும் கட்டுப்படுத்திக் கையாள வேண்டுமென்றால் அதற்குச் சரியான நுண்ணோக்கிகள் (Microscopes) வேண்டும். அந்தக் கால கட்டத்தைக் கொஞ்சம் பின்னோக்கிப் பார்த்தால் நிலைமை புரியும். (தொடரும்)

சந்தாதாரர்களின் கவனத்திற்கு...

நமது செட்டிநாடு இதழுக்கான சந்தாவை புதுப்பிக்க வேண்டிய சந்தாதாரர்களின் Ref. எண் கீழே கொடுக்கப்பட்டுள்ளது. நமது செட்டிநாடு இதழ் இடைவெளி இன்றி தொடர்ந்து பெற சந்தாவைப் புதுப்பிக்கக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.GPay, NEFT மூலம் சந்தா செலுத்தியவர்கள் விபரத்தை தவறாமல் எங்களுக்கு ஈமெயில்: namadhuchettinad@gmail.com அல்லது வாட்ஸ்அப் 9962243750 அல்லது கடிதம் மூலம் தெரிவிக்க வேண்டும். மணியார்டர், வங்கி காசோலை வழியாக சந்தா கட்டலாம். Gpay, NEFT மூலம் சந்தா செலுத்த வேண்டிய வங்கி கணக்கு எண் பக்கம் 53ல் உள்ள சந்தா படிவத்தில் உள்ளது.

S-461 M. சொக்கலிங்கம்
S-483 SP. தியாகராஜன்
S-490 A.ராகவன் செட்டியார்
S-504 VR. கருப்பன் செட்டி
S-1503 ராஜா
S-1504 KR. பழனியப்பன்
S-1506 SM. திருஞானம்
S-1517 KN.மெய்யம்மைஆச்சி
S-1537 PL. ரவிச்சந்திரன்
S-1539 AN. சாத்தப்பன்
S-1541 AL.அழகுசுந்தரி ஆச்சி
S-1542 AL. காளியப்பன்
S-1544 A.L.M.ஆவிச்சி செட்டியார்
S-1545 L.L. சந்திரசேகரன்
S-1546 U. நந்தி ராமனாதன்
S-1548 A.சீனிவாசன்
S-1567 M. கணேசன்
S-1572 KR. கண்ணப்பன்
S-1573 AL. மீனாட்சி சுந்தரம்
S-2641 C. பழனியப்பன்
S-2667 KN. சுப்பிரமணியன்
S-2674 K. கிருஷ்ணன்
S-2676 SP. காசி விஸ்வநாதன்
S-2677 M.அழகப்பன்
S-2682 K. மீனாட்சி
S-2686 C. சோலச்சி
S-543 KM. வெங்கிடாசலம்
S-545 மார்கசகாயம்
S-550 K. தியாகராஜன்
S-563 SP. முத்துராமன்
S-565 RM. சரவணன்
S-576 A. சொக்கலிங்கம்
S-578 AL. முத்தையா செட்டியார்
S-579 K.M. ரெங்கநாதன்
S-604 N. ராமசாமி
S-1577 S. பழனியப்பன்
S-1578 RM.M. ராமநாதன் செட்டியார்
S-1583 -M.அழகப்ப செட்டியார்
S-1590 N. பழனியப்பன்
S-1594 M. அடைக்கப்பன்
S-1598 R முத்தையா
S-1601 VR. செட்டியப்பன்
S-1606 L.RM.N. லெட்சுமணன்
S-1614 M. சொக்கலிங்கம்
S-1635 L. சேவுகன் செட்டியார்
S-1637 V. அருணாசலம் செட்டியார்
S-1645 PR. லெட்சுமணன்
S-1646 S. முத்துபாலன்
S-1649 CT. முத்து
S-1652 A.M. உடையப்பன்
S-1653 SP.G. நாகேஷ் செட்டியார்
S-1654 AL.AN. அழகப்பன்
S-1655 முத்து மீனாள் மெய்யப்பன்
S-1662 PR. சுப்பிரமணியன்
S-1672 Dr.V. சிவகாமசுந்தரி
S-1688 M. சுப்பையா
S-1690 RM.S. அருணாசலம்
S-1697 AR. மெய்யப்பன்
S-1698 N. சின்ன நாச்சியப்பன்
S-1705 M. அருணாசலம்
S-1714 RM. சுப்பையா
S-1716 RM. சோமசுந்தரம்
S-1720 SM.PL. செல்வநாதன்
S-2690 R. சோலையப்பன்
S-2696 TR. குமரப்பன்
S-2698 M. பெரியண்ணன்
S-2700 N. முத்து
S-2703 VE. அழகப்பன்
S-2704 A. கணேஷ்
S-2705 M. சுவாமிநாதன்
S-2710 N. அருணாசலம்
S-2715 M. முத்துக்கருப்பன்
S-2717 C. பெருமாள்
S-2727 M. பஞ்சநாதன்
S-629 AN. மணிகண்டன்
S-680 PL C. வள்ளியம்மை
S-702 AL. மீனாட்சி சுந்தரம்
S-1734 M.RM. சிவலிங்கம்
S-1737 SP. நாச்சியப்பன்
S-1746 P. பழனியப்பன் அலமேலு
S-1747 K. சேதுராமன்
S-1760 M. சிதம்பரம் செட்டியார்
S-1761 RM. பெரிச்சியப்பன்
S-1763 TR. லெட்சுமணன்
S-1764 M. அண்ணாமலை
S-1778 PL. பிரேமா பழனியப்பன்
S-1780 RM. சிங்காரம்
S-1784 K.K.RM. ராமநாதன்
S-1788 SM. நாகப்பன்
S-1794 S. நாச்சியப்பன்
S-1798 CT.S. மணிவாசகம்
S-1800 ராம மீனாள்
S-1802 RM. வள்ளியப்பன்
S-1808 L.RM. லெட்சுமணன்
S-1809 AR. நாராயணன்
S-1811 வள்ளியம்மை ஆச்சி
S-1815 N. நாகப்பன்
S-1826 M. காசி விஸ்வநாதன்
S-1828 RM. சுப்பையா
S-1831 V. வள்ளியம்மை
S-1839 V. வளர்மதி
S-1841 C. வீரப்பன்
S-1852 RM. திருப்பதி
S-1857 VR. சுப்பிரமணியன்
S-1858 SV. அழகு சிதம்பரம்
S-1863 L.VR.VR. சுந்தரம்
S-1866 Selvi RM. நாகம்மை
S-1877 M. சிவராமன்
S-2732 KR. பஞ்சு
S-2736 V. விசாலாட்சி
S-2741 Dr. செந்தில் குமணன்
S-2742 M. சண்முகம்
S-2591 VR. வீரப்பசெட்டியார்
S-2612 V. சுந்தரேசன்
S-2744 AN. சிதம்பரம்
S-2746 சாந்தி நாராயணன்
S-2747 K. காசி
S-2748 V. நாகப்பன்
S-721 மீனாட்சி ராமசாமி
S-745 S. பழனியப்பன்
S-770 NK. நாச்சியப்பன்
S-832 M. குமரப்பன்
S-1869 மீனாள் பழனியப்பன்
S-1872 AL. விஸ்வநாதன்
S-1886 CT. அருணாசலம்
S-1887 N.KR.S. திருநாவுக்கரசு
S-1889 PL. நாராயணன்
S-1890 A.KR.A. கருப்பன்
S-1896 LM.N. முத்து மாணிக்கம்
S-1897 SV. சுப்பிரமணியன்
S-1914 SP. ராமநாதன்
S-1923 PR. முத்தையா செட்டியார்
S-1931 PL. முத்துக்கருப்பன்
S-1936 A.AL. சுப்பையா
S-1956 L. சிதம்பரம் செட்டியார்

சந்தா படிவம்

திரு/திருமதி.....

முகவரி.....

.....

கோவில்.....பிரிவு.....சொந்த ஊர்.....

கைபேசி..... தொலைபேசி..... ▸▸ இமெயில் .....

▸▸ புதிய சந்தா ☐ / சந்தா புதுப்பித்தல் ☐ / Ref No.....

செலுத்திய சந்தா ரூபாய் ஓராண்டு 300/- இரண்டு ஆண்டு 500/- ஐந்து ஆண்டு 1250/-

☐ மணியார்டர் ☐ காசோலை ☐ RTGS ☐ GOOGLE PAY மூலம் செலுத்தி விவரம் தெரிவிக்கவும்.

வங்கி...../ எண்...../ நாள்.....

அனுப்ப வேண்டிய முகவரி: "நமது செட்டிநாடு" (மாத இதழ்), ராணி சீதை அரங்கம், 3வது தளம், 603, அண்ணா சாலை, சென்னை 600 006. தொ.பே.எண்: 044-42951888

வெளிநாடு சந்தா விவரம்: சிங்கப்பூர், மலேசியா ஆண்டிற்கு SG $ 40/ பிற நாடுகள் ஆண்டிற்கு US $50/

Cheque to be drawn in favour of

Chettinad Print Media P Ltd,
A/C No: .6412480441
Indian Bank, Thousand Lights Branch,
Chennai - 600 006. IFSC : IDIB000T020,

Or

Chettinad Print Media P Ltd.
A/C No:57500000199320
HDFC Bank, R.K.Salai Branch,
Chennai - 600 004, IFSC : HDFC0001097

டிடி/காசோலை அனுப்ப அஞ்சல் துறையின் துரித அஞ்சல் (Speed Post) சேவையைப் பயன்படுத்துங்கள்

S-1962 M. நாகப்பன்
S-1971 PL. மீனாட்சி
S-1981 M. சோமசுந்தரம்
S-2754 PR. சிதம்பரம்
S-2755 S.ST.AL.அண்ணாமலை
S-2756 N.SP. நாராயணன்
S-2757 முத்தையா(எ)கோபால்
S-912 AN. அருணாசலம்
S-922 N. மெய்யம்மை
S-1966 S. வயிரவன்
S-1986 S.V. சாத்தப்பன்
S-1990 S. முத்து
S-1991 M. சொக்கலிங்கம்
S-2003 S. தங்கமணி
S-2005 V.KR. ராமலிங்கம்
S-2012 V. வள்ளியம்மை
S-2015 N. பாலசுப்பிரமணியன்
S-2016 SP. சாத்தப்பன்
S-2017 N. சுந்தரம் செட்டியார்
S-2023 N. சுப்பிரமணியன்
S-2031 Dr.PL. அழகப்பன்
S-2032 PR. அருணாசலம்
S-2033 V.S. கருப்பையா
S-2034 S. அழகப்பன்
S-2047 AR. சோமசுந்தரம்
S-2054 VR. மெய்யப்பன்
S-2061 V. சுப்பு
S-2066 Y.R.Y. ராமநாதன்
S-2068 SV. அருணாசலம்
S-2073 அருணா அலோய் ஸ்டீல் பி. லிட்
S-2074 Dr.A. சேதுராமன்
S-2091 AL. உடையப்ப செட்டியார்
S-2095 KV.M. தியாகராஜன்
S-2099 M. குமரப்பன்
S-2103 RM. சிதம்பரம்
S-2110 PL. லெட்சுமணன்
S-2112 L. சொக்கலிங்கம்
S-2117 L. நாராயணன்
S-2118 K.N. ராமநாதன்
S-2294 S.முத்தையா
S-2764 M.A. பாண்டியன்
S-2765 K. கஸ்தூரி
S-2768 AR.N.M.மீனாட்சி சுந்தரம்
S-2770 T.கருப்பையா
S-2771 AL. மீனாட்சி ஆச்சி
S-2775 M. அழகப்பன் செட்டியார்
S-2776 L. பழனியப்பன்
S-942 KR. அருணாசலம்
S-1018 குமார் ரெங்கநாதன்
S-1027 லெட்சுமணன்
S-2124 M. வேலாயுதம்
S-2130 S. காந்தி தியாகராஜன்
S-2132 S. ராமசாமி
S-2137 RM. ராமநாதன் செட்டியார்
S-2138 N.V.RM. நாச்சியப்பன்
S-2140 V. ராமசாமி செட்டியார்
S-2146 KM. பெரியகருப்பன்
S-2153 N.L.N. சுப்பையா
S-2154 AR. பத்மனாபன்
S-2164 K. ராதா
S-2168 சித்ரா
S-2169 T. அழகு அம்மை
S-2171 M. சரோஜா
S-2177 K. குமரப்பன்
S-2179 P. சொர்ணவல்லி
S-2186 N. வள்ளியம்மை
S-2779 PR. நாச்சியப்பன்
S-2780 L. சோலையப்பன்
S-2782 PL. நாச்சியப்பன்
S-2784 S. ராமசாமிசொக்கலிங்கம்
S-2785 KN. மீனாள்
S-2792 V. முத்தையா
S-2793 N. பெரியநாதன்
S-2794 VE. ராமநாதன் செட்டியார்
S-2796 RM. பழனியப்பன்
S-2800 N. லதா
S-2808 RM. பாஸ்கரன்
S-2809 S. அழகம்மை
S-2743 SP. அண்ணாமலை

SRI VASISTA

501, Sri Vasista Apurva,
#8-2-350/3/2,
Opp MJIT College, Road No 3,
Banjara Hills, Hyderabad-500034.

SRI VASISTA MINES & MINERALS
Mine Owners & Suppliers of LATERITE to various cement industries
in Telangana, AP and Karnataka

SRI VASISTA CONSTRUCTIONS
Construction of Residential, Commercial & Lay-out developments
in and around Hyderabad, Telangana
Ph: +91 40 23392266 or 91 90100 59996
Email: info@srivasista.com

Namadhu Chettinad Published and Printed by N.Avadaiappan on behalf of M/S Chettinad Print Media (P) Ltd., Printed at DOT LINE DATA, New No.3, Old No.2, 21st Avenue, Ashok Nagar, Chennai - 600 083 and Published from Chettinad Print Media (P) Ltd., Rani Seethai Hall Building, 603, Anna Salai, Chennai - 600 006. Editor : N.Avadaiappan

நலமோடு
வாழ
நல்ல இடம்

செட்டிநாடு கார்டன்

(அரசு அங்கீகாரம் பெற்ற குடியிருப்பு மனைகள்)

வளமோடு
வாழ
வசதியான இடம்

குமாரமங்கலம், திருச்சி– 620021

திருச்சி மாநகரத்தில் சர்வதேச விமான நிலையத்திற்கு அருகில் தஞ்சை – நாகபட்டினம் – புதுக்கோட்டை –ராமேஸ்வரம் – மதுரை – கன்னியாகுமரி – திண்டுக்கல் – பழனி – கரூர் – கோவை தேசிய நெடுஞ்சாலைகளை இணைக்கும் சுற்று வட்ட சாலையில் சுமார் 33 ஏக்கரில் 10 அடி உயரம் கொண்ட தரமான சுற்றுசுவர் அமைக்கப்பட்டு உயர்தரமான தார் சாலைகள் போடப்பட்டு சிறந்த சுற்றுச்சூழலில் 397 மனைகள், கடைகள் பள்ளி, மருத்துவமனை, சமுதாயக்கூடம், வணிக வளாகம் எனத் தனித்தனியே இடங்கள் ஒதுக்கப்பட்டு பூங்காக்கள், சிறுவர் விளையாட்டுத்திடல் உள்ளிட்ட வசதிகள் கொண்ட செட்டிநாடு கார்டன் குடியிருப்பு மனைகளில் முதலீடு செய்ய முந்துங்கள்.

- 5 கி.மீ. சுற்றளவுக்குள் 12 சிறந்த பள்ளிகள்
- 7 கி.மீ. சுற்றளவுக்குள் 10 கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்கள்
- கே.கே.நகர் 4 கி.மீ.
- திருச்சி சர்வதேச விமான நிலையம் 5 கி.மீ.
- திருச்சி மத்திய பேருந்து நிலையம் / இரயில் நிலையம் – 9 கி.மீ.

பதிவு மற்றும் விவரங்களுக்கு 98412 04000

பதிவு அலுவலகம்: ராணி சீதை அரங்கம், 6 வது மாடி, 603, அண்ணா சாலை, சென்னை – 600006 www.chettinadgarden.com

Namadhu Chettinad Tamil Monthly Regd. as Newspaper with RNI No.TNTAM / 2015 / 63956 Postal Registration No.TN/CC(S)DN/541/19-21
Licensed to post without prepayment under WPP No.TN/PMG (CCR)/WPP 542/19-21 and published on first week of every month.
Posted at Egmore. RMS PATRIKA Channel Posted on 15-21 July - 2021

ADMISSIONS OPEN
2021 - 22

School of Law
Chettinad Academy
of Research and Education
(Deemed to be University)

"JOIN THE NEXT GENERATION CLINICAL LAW SCHOOL"

100% Scholarship for eligible candidates

KEY HIGHLIGHTS

- Clinical Method of teaching
- Experienced faculty members handpicked from various NLUs & Overseas Universities
- New Age Specializations and Honours Courses
- Moot Court and Legal Clinics
- Capsule Courses by Expat Faculty
- Compulsory Summer and Winter Internships
- Continuous Industry-Academia Interaction
- Mandatory Library Hours under faculty supervision
- Upto 100% Scholarship on merit basis
- World Class Residential and Recreational Facilities
- Well stocked library with latest editions of books
- Inter library loan facility
- Wide range of digital database

UNDERGRADUATE

- *5 year integrated degree programme*

BA.LL.B. (Hons.)
BBA.LL.B. (Hons.)
BCom.LL.B. (Hons.)

- *3 year degree programme*

LL.B. (Hons.)

POSTGRADUATE

- *1 year degree programme*

LL.M.

QS I·GAUGE INDIAN UNIVERSITY RATING DIAMOND

FOR ADMISSION CALL
+91 97701 43372

Chettinad Health City Campus,
Rajiv Gandhi Salai, (OMR, Chennai),
Kelambakkam - 603 103,
Chengalpattu Dist., Tamil Nadu, India.

E law@chettinadhealthcity.com
W www.care.edu.in